விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர
14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 23 புதன்கிழமை (07.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 019

## புதிய தூதுவர் பதவியேற்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத தூதரகத்தின் புதிய தூதுவராக நேற்று முன்தினம் முதல் ஏ.நட்ராஜ தனது கடமையைப் பொறுப்பேறறுக் கொண்டார்.

யாழில் உள்ள இந்தியத்துணைத் தூதரகத்தின் தூதுவராகக் கடமை யாற்றிய வெ.மகாலிங்கம் இடமாற் றம் பெற்றுச் சென்றதையடுத்து ஏற்

23ஆம் பக்கம் பார்க்க....

# தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் பூர்த்தி



(யாழ்ப்பாணம்)

*ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து பூர்வாங்க நடவடிக்கைகளும் யாழ்.மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ் தெரிவத்தாட்சி அலுவலரும், யாழ்.அரச அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். யாழ். மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கு 526 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*

23ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் கடமையில் 65 ஆயிரம் பொலிஸார்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் நேற்று முதல் 65 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அசம்பாவிதங்கள் இடம்பெறும் பட்சத்தில், உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, அசம்பாவிதங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

தேர்தலை முன்னிட்டு 420

24ஆம் பக்கம் பார்க்க....

## தபாலகத்தில் வாக்காளர் அட்டை பெற்றுக் கொள்ள அறிவுறுத்தல்

### யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்படும் வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்களும் தமது அடையாளத்தினை உரிய வகையில் உறுதிப்படுத்தி நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க முடியும் என யாழ். மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 3-ம் திகதி முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் யாழ்.பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ள தமது வாக்காளர் அட்டையினை உரியவர்கள் நேரில் சென்று பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் கூட்டத்தில் முக்கிய தலைவர்கள் இல்லை

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இறுதிப் பரப்புரைக் கூட்டம் முக்கிய தலைவர்களின் பங்கேற்பின்றி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கஸ்பேவவில் இடம்பெற்றது.

இந்த பரப்புரைக் கூட்டத்தில் எதிரணியின் முக்கிய தலைவர்கள் சிலர் ஆளுங்கட்சியுடன் இணையலாம் என்று ஊகங்கள் வெளியாகியிருந்தன.

குறிப்பாக சஜித் பிரேமதாச, சரத் பொன்சேகா மற்றும் ஹரின் பெர்னான்டோ உள்ளிட்டோர், அரசதரப்புக்குத் தாவலாம் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் எதிரணியின்ரோ, ஆளுங்கட்சியின் முக்கிய தலைவர்களோ இல்லாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இறுதிப்பரப்புரை மேடையில் அமர்ந்திருந்தார். விமல் வீர

24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் வன்முறைகள் ஐ.நா சபை கவலை!



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் வன்முறைகள் அதிகரித்து வருவது தொடர்பில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் கவலை வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களை சந்தித்த ஸ்டீபன் டுஜாரிக்கிடம், இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து கேள்வி

24ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலைக் கண்காணிக்க ஐ.தே.கவின் விசேட படையணி

### 45 ஆயிரம் அதிகாரிகள் கடமையில்

(கொழும்பு)

வட மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள 11,381 வாக்களிப்பு நிலையங்களையும் கண்காணிப்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தொலைத்தொடர்பு படையணியொன்று பணியில் அமர்த்தப்படவுள்ளது.

45 ஆயிரத்து 524 அதிகாரிகள் அடங்கிய இந்த படையணி, நேற்று செவ்வாய்க்கிழமை முதல் தங்களது பணிகளை முன்னெடுத்துள்ளதாக ஐ.தே.க தகவல்கள் தெரிவிக்கின்றன.

வட மாகாணத்தில் 933 வாக்களிப்பு நிலையங்கள் அமைந்துள்ளன. இந்த வாக்களிப்பு நிலையங்கள் தவிர்ந்த கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களுக்கே

24ஆம் பக்கம் பார்க்க....

## பந்தயம் வைக்கும் அமைச்சர் பவித்ரா



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான பிர

23ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியின் கூட்டத்துக்கு கடுமையான பாதுகாப்பு

(கொழும்பு)

மருதானையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கடைசி பரப்புரைக் கூட்டம் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் இடம் பெற்றுள்ளது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டிருந்த இந்தக் கூட்டத்துக்கு இரவு 11.30 மணியளவில் மேடைக்கு வந்த மைத்திரிபால சிறிசேன, குண்டு துளைக்காத கண்ணாடிக்குப் பின்பாக நின்று உரையாற்றினார். மைத்திரிபால சிறிசேனவின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தப் படலாம் என்பதால், சிறப்பு அதிரடிப் படையினரும், பொலிஸாரும் கூட்டத்தில் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தனர்.

அவரையும், மேடையில் அமர்ந்திருந்த அரசியல் தலைவர்களைச் சுற்றி மெய்க்காவலர்களும், பொலிஸ் அதிகாரிகளுமே நிறைந்திருந்தனர். இதனால், மேடையில் அமர்ந்திருந்தவர்களை பொதுமக்கள் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஆளும் கட்சிக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் பதிவு

### கபே குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் முறைப்பாடுகளில் அதிகளவானது ஆளும் கட்சியினருக்கு எதிராகவே உள்ளன என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நாடு முழுவதும் ஆயிரத்து 358 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இம்முறைப்பாடுகளில் மிகக குறைந்த அளவாக வட மாகாணத்தில் 21 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அமமட் மனாஸ் மகீந் தெரிவித்துள்ளார்.


தேர்தல் கண்காணிப்பு அமைப்பாக கபே அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை யாழ். மாவட்டச் செயலகத்திற்கு அருகில் உள்ள வை.எம்.சி கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இச் சந்திப்பில் கலந்து கொண்ட கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அமமட் மனாஸ் மகீந்தினாலேயே மேற்படி விடயம்

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பேசும் படம் - 01



**நாய்கள் கவனம்**

*(படம் : ஞானேஸ்வரன்)*

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

தபால் முகவரி : ஆசிரியர், பேசும் படம்,
வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

# வாக்களிப்பு என்பது ஜனநாயக உரிமை

## தவறவிட வேண்டாம் என்கிறது மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களாகிய அனைவரும் கடந்த கால வரலாறுகளை கருத்தில் கொண்டு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

வாக்களிப்பது என்பது ஒவ்வொருக்கும் உள்ள ஜனநாயக உரிமையாகும். நாம் வாக்களிக்காவிட்டால் எமது வாக்குகள் தவறான முறையில் பயன்படுத்தப்படலாம் எனவும் மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தலானது இம்மாதம் 8ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இந்தத் தேர்தலானது தமிழ் மக்களாகிய எமக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் என்றோ, எமது உரிமைகளுக்கு மதிப்பளிக்குமென்றே நாம் துளியளவும் நம்பவில்லை.

ஏனெனில் இந்தத் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் சிங்கள பௌத்த பேரினவாதம் எனும் கொள்கையைப் பின்பற்றுவர்கள் ஆவர்.

இன்று இந்த நாட்டின் தமிழ் மக்கள் ஸ்திரமான சிறந்த அரசியல் தலைமையற்ற ஓர் இருண்ட காலத்திலே சுதந்திரமற்று உரிமை மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்துவிட்டதாக அரசு கூறி 5 வருடங்கள் கடந்த நிலையிலும் எமது இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை வழங்க முன்வராது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று எமது பூர்வீக நிலங்களில் அத்துமீறிய குடியேற்றங்களையும் நில அபகரிப்புக்களையும் செய்து எமது இனத்தின் இருப்பையும், அடையாளத்தையும் சிதைப்பதுடன் எமது பிரதேசத்தின் தேவையற்ற இராணுவக் கெடுபிடிகளையும் மேற்கொண்டு பொருளாதார ரீதியாகவும் எம்மை நலிவடையச் செய்கின்றது.

இந்நிலையிலும் தமிழ் மக்களாகிய நாம் ஜனநாயக ரீதியில் கடந்த கால தேர்தல்களில் எமது ஒருமித்த குரலில் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியிருந்தோம்.

தேர்தலில் வாக்களிப்பதென்பது ஒவ்வொருவரது ஜனநாயக உரிமையும், கடமையும் ஆகும். எனவே அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்காவிட்டல் எமது வாக்குகள் தவறான முறையில் பயன்படுத்தப்படலாம். எனவே தமிழ் மக்களாகிய அன்னவரும் கடந்தகால வரலாறுகளைக் கருத்தில் கொண்டு சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்று எமது ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

பல்கலைக்கழக மாணவ ஒன்றியமானது தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், சுயாட்சி என்ற கொள்கையில் இருந்து தளராது தமிழ் மக்களின் உரிமைக்காக என்றும் குரல் கொடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)


## தவறிவிட்டது

கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் ஆறுமுகம் துரையப்பா என்பவரின் 373090387V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்களுடன் கூடிய பேஸ் கஸ்தூரியார் வீதிக்கும், பிறவுண் வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (9078)

தொடர்புகளுக்கு :
0243241517, 0771096990
24B, கோட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

## தவறிவிட்டது

ஈவினை கிழக்கு புன்னாலைக்கட்டுவன் எனும் முகவரியில் வசிக்கும் கந்தையா மோகனதாஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 733660074V மற்றும் மோட்டார் வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் என்பன புன்னாலைக்கட்டுவனுக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

(C-9749) T.P:0779905257

# பணியாளர் தேவை

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு விவசாயத் தொழிலாளரும், கால்நடை வளர்ப்பில் தேர்ச்சி பெற்ற பருவகால தொழிலுக்கு ஏற்ப ஆண் பணியாள்ர்கள் தேவை.

**தகைமைகள்**

- விவசாயம், தென்னை பயிர்ச்செய்கையில் அனுபவமும் அர்ப்பணிப்பான சேவையும் வழங்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த தேகாரோக்கியம், நற்குணம் உடையவராக இருத்தல்.
- கால்நடை வளர்ப்பில் தேர்ச்சியும் அனுபவமும் கொண்டிருத்தல்.
- வயது எல்லை: 25-55இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

*குறிப்பு* : **இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றுதல் வேண்டும். உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

கிறாதியுடனான ரயர் இழுவை வண்டி தேவையாக உள்ளது. (இரண்டு காளைகள் இழுவை) பாவித்த இழுவை வண்டியினை வைத்திருப்போர் உரிய விலையினைக் குறிப்பிட்டு தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம், முகவரி என்பவற்றையும் கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலமாக அறியத்தருமாறு வேண்டுவதோடு தட்டு, கிறாதியுடன் ரயர் இழுவை வண்டி புதிதாகச் செய்து தரமுடியுமாயின் அதற்குரிய விலையினைக் குறிப்பிட்டு கீழ்க் காணும் முகவரிக்கு தபால் மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். (சி-7953)

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :
தி. இராசநாயகம், தலைவர் மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல : 0770604950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி : rasa46@yahoo.com

## பழைய வீடு வாங்கப்படும்

பழைய வீடு; மரம், தீராந்தி, யன்னல், கதவு, நிலை, ஓடு என்பவற்றுடன் வாங்கப்படும். (காணி அல்ல, வீடு மட்டும்) விற்க இருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசிஇல. 0773151326

## கட்டிங் பேப்பர் விற்பனைக்கு

மாணவர்கள் பயிற்சிகள் செய்யக்கூடிய கட்டிங் பேப்பர் மற்றும் உணவுச்சாலைகளுக்குத் தேவையான றீம் பேப்பர் என்பன விற்பனைக்கு உண்டு. வலம்புரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## தரம் ஆறு (06) அனுமதி விண்ணப்பம்

மேற்படி தரம் ஆறுக்குரிய மாணவர்க்கான அனுமதி வழங்குவதற்கான வெற்றிடம் இன்னும் சிலவே உள்ளதால் அனுமதிபெற விரும்பும் மாணவர்களின் பெற்றோர், அதிபருடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இறுதி விண்ணப்பத் திகதி **20.01.2015** என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.

வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம். -அதிபர்

(9746)

## மலேசியாவில் உடனடி வேலை வாய்ப்புக்கள்



1)DHL உதவியாளர்(சம்பளம்)1500 Rm + ot SR-65000

2)DHL றைவர் (சம்பளம்) 2000 RM + ot SR-85000

3)5* ஹோட்டல்
சமையல் செய்பவர் - சம்பளம்-2000Rm - SR -85000
றூம் கிளீன் செய்பவர்- சம்பளம்-1500Rm - SR -65000
உதவியாளர்-சம்பளம்-1500Rm - SR -65000

4)பில்டிங் கேன்ஸ் செக்சன்
மேசன் -சம்பளம்-2800Rm - 110 000- SR
பிளம்பர்-சம்பளம்-2000Rm - 85000 - SR
வெல்டர் - சம்பளம்-2000Rm - 85000-SR
காப்பெண்டர்-சம்பளம்-2000Rm - 85000-SR
வயறிங்-சம்பளம்-2000Rm - 85000-SR
Unit company labours-900Rm+OT-45000SR
AirPort cleaners-900 Rm+OT-45000SR
Company labours-900Rm+OT-45000SR

கையடக்கத் தொலைபேசி:-0767729332
Thinesh Jeyakumar 2012@Gmail.com
(C-9750)


## இணைய தளங்கள் முடக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல நாளை நடைபெறவுள்ள நிலையில், நூற்றுக்கும் அதிகமான இணையத்தளங்கள் இலங்கையில் பார்வையிட முடியாதவாறு அரசாங்கத்தினால் முடக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசாரங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன நிறைவடைந்ததையடுத்து, தேர்தல் பரபரப்புக்களும் பதற்றங்களும் அனைவரையும் ஆட்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில், இலங்கையில் அதிரடியாக நூற்றுக்கும் மேற்பட்ட செய்தி இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து இயக்கும் தமிழ் ஊடகங்களும் இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிராக இலங்கையில் இயங்கும் ஊடகங்களுமே இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்னரே அரசாங்கம் தோல்வி அச்சம் கொண்டுள்ளதை இவ்வாறான செயற்பாடுகள் உணர்த்துவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. (எ-11)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காலக்கெடு முடிவடைந்த பின்பும் தேர்தல் பிரசாரம் தொடர்கின்றது

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கால எல்லை முடிவடைந்து விட்ட போதிலும் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. இவ்வாறான பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராச்சி குற்றம் சாட்டியுள்ளார்.**



ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 12 மணியுடன் நிறுத் தப்பட வேண்டுமென்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஆயினும் நேற்று செவ்வாய்க்கிழமையும் நாடு தழுவிய அளவில் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புகார்கள் வந்துள்ளதாக கூறினார் ரோகன ஹெட்டியாராச்சி.

விஹாரைகள் மற்றும் தேவாலயங்களில் நடத்தப்படும் சமய நிகழ்வுகள் ஊடாக இந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறிய ரோகன ஹெட்டியாராச்சி, அரசியல் வாதிகளின் விடுதிகளுக்கு மக்களை அழைத்து நடத்தப்படும் சிறிய கூட்டங்களின் முலம் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

ஒரு பிரதான வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிக்குமாறு சமுர்த்தி உதவியைப் பெற்று வரும் மக்கள் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் இவ்வாறான புகார் ஒன்று பலாங்கொடை பகுதியிலிருந்து கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று தேர்தல் பிரசார போஸ்டர்கள் தொடர்ந்தும் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் கூறிய ரோகன ஹெட்டியாராச்சி, இவை சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை திவுலப்பிட்டி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பதாகைகளை அகற்றுவதற்காக சென்ற பிரதி தேர்தல் அதிகாரி ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தியுள்ளதாக கூறிய பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராச்சி இவ்வாறான செயல்களின் மூலம் நியாயமான தேர்தலொன்றை நடத்துவதற்கு பாதிப்புகள் ஏற்படலாமென்றும் குற்றம் சாட்டினார்.

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசார நடவடிக்கைகள் குறித்து கேட்டபோது கருத்துக்களை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இவ்வாறான செயல்களை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கு மாறு தான் மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார், (இ-5)


**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை தும்பளை வீதியில் பன்னையம்பதியில் நிலப்பரப்பு 01 குழி 04 விஸ்தீரணமுடைய வீடுகட்டக்கூடிய காணி மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:-077 436 6704 (சி-9739)

**வாழ்க்கையில் வெறுப்பா ?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**021 222 8117, 0779008776**

(C-9738)


# அபாயா அணியும் முஸ்லிம்களுக்கு தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்து



அபாயா அணிந்து முகத்தை மறைத்துக் கொண்டு வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் முஸ்லிம் பெண்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் விளக்கமளித்துள்ளார்.

முகத்தை மறைத்துக்கொண்டு அபாயா அணியும் முஸ்லிம் பெண்கள் வாக்குச்சாவடிகளில் கடமையிலுள்ள பெண் தேர்தல் அதிகாரிகளிடம் தமது தேசிய அடையாள அட்டையுடன் தமது முகத்தைக்காட்டிய பின்னரே அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படும்.

எனவே இத்தகைய அபாயா அணிந்து செல்லும் முஸ்லிம் பெண்கள் இந்த தேர்தல் சட்டங்களுக்கிணங்க நடந்து கொள்ளு மாறும் அவர் மேலும் கேட்டுக்கொள்கிறார்.

இதேவேளை வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் போது ஒவ்வொருவரும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் செல்லுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பாக வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் போது ,தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர்அடையாளஅட்டை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்டுள்ள மதகுருமாருக்கான அடையாள அட்டை, தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை இவற்றுள் ஏதாவதொன்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

அவ்வாறு செல்லாதோருக்கு தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்றும் மேலதிக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


**6ஆம் மாத நினைவஞ்சலி**

**சிற்றம்பலம் முகுந்தன்**



தோற்றம் 20.03.1971 மறைவு 07.07.2014

மாதங்கள் ஆறு சென்றாலும்
ஆறுமோ எம் மனம்
அன்போடு பெற்றெடுத்த
ஆசை மகனே அறிவுரைகள்
தந்துனக்கு உயர வைத்தோம்
இன்று கடலாகி
ஓடுகின்ற கண்ணீரோடு
கலங்கி நிற்கும் அப்பா, அம்மா.

கடந்த 07.07.2014 அன்று சிவபதம் அடைந்த எமது புத்திரனின் நினைவு தினம் இன்று புதன்கிழமை (07.01.2015) என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

முதலிகோயிலடி, கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி-9744)

தகவல்:
செ.சிற்றம்பலம் (தந்தை),
சி.இராசேஸ்வரி (தாய்).


## இராசி பலன்

07.01.2015
(மார்கழி 23, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
துதியை பிற்பகல் 1.44 மணிவரை
பூசம் பிற்பகல் 1.59 மணிவரை
இராகுகாலம் 12.32-2.02 மணிவரை
சுபநேரம் 05.02-6.32 மணிவரை

வளவன்

**மேடம்:** பெற்றோரின் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், போக்குவரத்துக்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயம் பெருகும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்கநினைப்பீர்கள்.

**இடபம்:** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, உறவினர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மிதுனம்:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், பயணங்களால் பலன்கிடைக்கும், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் இடம்பெறலாம், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், திட்டமிட்ட பணிகளில் சிறு தடைதாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், சொந்தபந்தங்களின் வருகையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்:** உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பகைவர்கள் விலகுவர்.

**மீனம்:** எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 121

...உண்மையில் நான் செய்வதெல்லாம் திரும்பத் திரும்ப அதே வேதாந்தத்தைச் சொல்லிக் கொண்டிருப்பது தான். ஆனால் வெவ்வேறு வார்த்தைகளில், தற்காலத்திற்கு ஏற்றவகையில் அதனால் அது உங்களுக்குக் கேட்பதற்கு இதமாக இருக்கிறது. உங்களுக்கு அது பொருத்தமாக இருப்பதாக நினைப்பதால் உங்களால் அதைப் பின்பற்ற முடிகிறது. அதில் இன்னொரு விடயமும் இருக்கிறது..... இந்தக் கருத்துக்களை நீங்கள் ஒரு புத்தகத்தில் படித்தால் அது வெறுமனே எழுதுபவரின் தலையிலிருந்து உங்கள் தலைக்குள் சென்றுவிடும். எந்தவிதமான அனுபவத்திற்கும் சாத்தியம் இல்லை.

ஆனால் நீங்கள் இந்த வார்த்தைகளை ஒரு குருவிடம்- தனது ஆத்மாவின் அனுபவத்திலிருந்து சொல்லும் ஒருவரிடம் இருந்து கேட்கும் பொழுது நீங்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும் இது உங்களுக்குள் ஆழமாக நுழைந்து செல்கிறது.

தெளிவாக இருங்கள்... நான் உங்களுடன் என் அறிவைப் பகிர்ந்து கொள்ளவில்லை. என் அனுபவத்தை, என் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்கிறேன். என் இருப்புத் தன்மையிலிருந்து பேசும் பொழுது அது உங்கள் இருப்புத் தன்மையைத் தொடவேண்டும். அது உங்கள் வாழ்க்கையில் உருமாற்றத்தை ஏற்படுத்தும். வேறு வழி இல்லை.

எனது அன்பிற்குரிய அமெரிக்க, சகோதர சகோதரிகளே... என்று விவேகானந்தர் சிகா

# கவலைகள் இன்றி வாழ்தல்!

கோவில் பேசியபோது அரங்கத்தில் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. ஒரு பெண்மணி எழுதினார், வெறும் கரவொலியை மட்டும் அல்ல, அவர் நாடு முழுவதையும் வென்றார். ஒரு அன்பின் ஓட்டம் எங்கள் அனைவரையும் கடந்து சென்றதாக, எங்கள் இருப்புத் தன்மையைக் கடந்து சென்றதாக உணர்ந்தோம்... பின்னர் அந்தப் பெண்மணி, விவேகானந்தரிடம் 'அது எவ்வாறு நிகழ்ந்தது என்று கேட்டபொழுது அவர் சாதாரணமாகச் சென்னார், ஏனெனில் அது எனக்குள் இருந்து வந்தது.



விவேகானந்தர் அவரது இருப்புத் தன்மையிலிருந்து பேசினார். வார்த்தைகள் மூளையிலிருந்து வெளிவரும் பொழுது அது மற்றவரின் மூளையைத் தொடுகிறது. இதற்குத் தொடர்பு கொள்ளுதல் என்று பெயர்.

வார்த்தைகள் ஒருவரின் இதயத்திலிருந்து வரும்பொழுது அது மற்றவரின் இதயத்தைத் தொடுகிறது. இதற்கு சங்கமித்தல் என்று பெயர். தொடர்பு கொள்ளும் போதுமானதல்ல; நாம் எப்படி சங்கமிப்பது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நான் இப்பொழுது சொல்கிறேன்... என் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து பேசுகிறேன். அதனால் நீங்கள் முழு மனதுடன் கேட்கிறீர்கள்.

பேசுபவர் முழுமையாகப் பேசும்பொழுது கேட்பவரும் முழுமையாகத்தான் கேட்க முடியும். அவருடைய வாழ்க்கையில் உருமாற்றம் நிகழும். உங்களுடைய வாழ்க்கை என் வார்த்தைகளால் தொடப்படவில்லையானால், எனக்குப் பேசுவதற்கு உரிமையில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். என் அனுபவத்தின் உண்மைத் தன்மையை சந்தேகப் படுவதற்கு உங்களுக்கு சுதந்திரம் உண்டு. என்னுடைய வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையில் உருமாற்றம் ஏற்படுத்தவில்லை என்று எண்ணுவீர்களானால், அதற்காக நீங்கள் குற்ற உணர்வடைய வேண்டிய தேவையில்லை. அதனை வெளியே சொல்லுங்கள். ஆனால், நான் சொல்கிறேன். நீங்கள் என்னால் தொடப்படாமல் போவதற்கு வழியே கிடையாது!

நீங்கள், இதயத்தின் வழியாகக் கேட்பீர்களானால், சமயம் வரும்பொழுது என் போதனைகள் உங்கள் வாழ்க்கையில் தானாகவே வேலை செய்வதைக் காண்பீர்கள். தானே உறுதியில்லாத ஒரு ஆசிரியரே தன் மாணவர்களை திரும்பிச் சென்று அவரது வார்த்தைகளைப் பயிற்சி செய்யச் சொல்லி வற்புறுத்த வேண்டியதிருக்கிறது.

ஒரு உண்மையான குரு பேசும் பொழுது வெறுமனே கேட்பதே போதும். முழுமையாகக் கேளுங்கள். உருமாற்றம் தானாகவே நிகழும்.

சாந்தோக்ய உபநிதடம் அழகாக விபரிக்கிறது...

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

### ஒன்பது மாதங்களில் 4 குழந்தைகளைப் பெற்ற தாய்!

லண்டனைச் சேர்ந்த, சாராவோட் -ஸ்மித் ஆகிய தம்பதியினருக்கு முதலாவது ஆண் குழந்தை (பிரெடி) பிறந்து 9 மாதங்களுக்கு பின்னர் ஒரே தடவையில் 3 குழந்தைகள் பிறந்தன.

இந்த தம்பதிகள் தற்போது வாரமொன்றுக்கு 175 பம்பஸகளை மாற்றுகின்றனர. 80 போத்தல் பாலை பிள்ளைகளுக்கு ஊட்டுகின்றனர்.

நான்கு குழந்தைகளைப் பெற்ற மகிழ்ச்சி இருந்தாலும், இந்த பெற்றோர்கள் உடல ரீதியாக எவ்வளவு பலவீனமாக இருப்பார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. மூவரும் அழகான, மகிழ்வையூட்டும் குழந்தைகளாக இருந்தாலும் அவர்களைக் கவனித்துக்கொள்வதற்கு நிறைய உடலுழைப்பு தேவைப்படுகின்றது. அதிகாலை 6 மணிக்கு அவர்கள் கண் விழிப்பதிலிருந்து 12 மணித்தியாலங்களின் பன்னர் அவர்கள் உறங்கச் செல்லும் வரை சாராவுக்கும, பென்னிற்கும் மூச்சுவிட நேரமில்லையாம்.



சில நேரங்களில் மிகவும் களைத்துப் போய் விடுவோம், சோபாவில் விழுந்து ஒருவருக்கொருவர் சொல்லமலேயே உறங்கிப் போய்விடுவோம் என்கிறார் சாரா.

சில நாள்களில் எங்களுக்கு உணவுண்ணகூட நேரமிருக்காது, சாப்பிட்டோமா என்றுகூட நினைவிருக்காது என்கிறார் அந்த தாய். தாங்கள் எண்ணியதற்கு மாறான வாழ்க்கை இதுவென தம்பதியர் இருவரும் ஏற்றுக்கொள்கின்றனர். மூத்தவன் பிரெடி. 2013 ஜூனில் பிறந்தான். அவன் பிறந்த சில நாட்களில் நான் மீண்டும் கர்பமானேன். இது ஓர் அபூர்வமான வரம் என்ற போதிலும் தாம் அவ்வாறு ஆரம்பத்தில் கருதவில்லை என்கின்றனர் தம்பதியர்.

நாங்கள் குழந்தைகளோடு வெளியில் சென்றால் இவை உங்களுடைய குழந்தைகளா? சோதனைக் குழாய் குழந்தைகளா என்று எல்லோரும் கேட்பர். இந்த கேள்விகள் எங்களுக்கு மிகவும் தர்மசங்கடமாக இருக்கும். ஆரம்பத்தில் இந்தக் கேள்விகள் சாதாரணமாக இருந்தன. இப்போது எரிச்சலாக இருக்கிறது. நான என் முதுகில் இது என் குழந்தைகள்தான் என எழுதி ஒட்டிக் கொண்டு போகப் போகிறேன் என்கிறார் சாரா. நான்கு குழந்தைகளை வளர்ப்பது கடினமான விடயம் தான். ஆனால் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். எங்களுக்கு குழந்தைகள் ஒரு பெரும் வரம் என்றே நான் கருதுகிறேன்.- என்கிறார் அந்தப் பெண்.

# சமைப்போம் சுவைப்போம்

## கும்மாயம்



**தேவையான பொருட்கள்**

பயத்தம் பருப்பு- 1 கப்
உளுத்தம் பருப்பு - 2 டேபிள்ஸ்பூன்
பச்சரிசி - 4 டேபிள்ஸ்பூன்
வெல்லம் பொடித்தது - 2 கப்
நெய் - 1/4 கப்
தண்ணீர் -6 கப்

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் பயத்தம் பருப்பு, உளுத்தம் பருப்பு, அரிசி ஆகியவற்றை தனித்தனியாகப் போட்டு சிவக்க வறுத்தெடுக்கவும். சற்று ஆறியதும், மிக்ஸியில் போட்டு நன்றாக அரைத்து, சலித்துக் கொள்ளவும். மேற்கண்ட அளவிற்கு 2 கப் மா கிடைக்கும். இதை "கும்மாயப் பொடி" அல்லது "கும்மாய மா" என்று சொல்வார்கள்.

ஒரு பாத்திரத்தில் பாதி அளவு நெய்யைவிட்டு, அதில் கும்மாயப் பொடியைச் சேர்த்து சில நிமிடங்கள் வறுக்கவும். இன்னொரு அடுப்பில் வெல்லத்தையும், தண்ணீரையும் சேர்த்து கொதிக்கவிடவும். வெல்லம் நன்றாக கொதிக்க ஆரம்பித்ததும், இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

வறுத்த மாவில், வெல்ல நீரை விட்டு, அடுப்பை மிதமான தீயில் வைத்து, கை விடாமல் கிளறவும். மா கெட்டியாகி, பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும்பொழுது, மீதமுள்ள நெய்யைச் சேர்த்துக் கிளறி, இறக்கி, நெய் தடவிய ஒரு டிறே அல்லது தட்டில் கொட்டி ஆற விடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேள்ட் விசன் நிறுவன ஆதரவில் சங்கமம் நிறுவனத்தில் இளைஞர் யுவதிகளுக்கான தலைமைத்துவ செயலமர்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது குழுக்களுக்கிடையேயான சமர்ப்பிப்பு நிகழ்வுகள், தலைமைத்துவம் சார் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை திருமதி கர்ணி தனபாலன் தலைமையிலான குழுவினர் மேற்கொள்வதனையும் பங்குபற்றியவர்களையும் படங்களில் காணலாம்.

# மைத்திரியின் சின்னம் இல்லாது வாக்குச் சீட்டுக்கள் விநியோகம்


(கொழும்பு)

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணியின் சின்னமான 'அன்னப் பறவை' இல்லாத நிலையில், போலியான மாதிரி வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதியமைச்சருமான எம்.கே.டி.எஸ். குணவர்தன்வே இந்த முறைப்பாட்டை செய்துள்ளதாகவும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஆதரவாளர்களினால் இந்த மாதிரி வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை நாட்டின் பல மாவட்டங்களிலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை அரசாங்க தரப்பினர் முன்னெடுப்பதாகவும் தேர்தல் திணைக்களம் விதித்த காலக் கெடுவையும் மீறி சட்ட விரோதமான முறையில் இவ்வாறு அரச தரப்பினர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் இராணுவத்தினை பயன்படுத்தி தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இதனை தேர்தல் திணைக்களம் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டுமெனவும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இருப்பினும் இந்த குற்றச்சாட்டை அரசாங்கம் முற்றாக மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ




# தேர்தல் காரியாலயங்களை அகற்ற நடவடிக்கை

(கொழும்பு)



தேர்தல் திணைக்கள அனுமதியுடன் நாடு பூராகவும் இயங்கிக் கொண்டிருக்கும், சகல தேர்தல் தொகுதிகளிலும் உள்ள தேர்தல் காரியாலங்கள் நேற்று நள்ளிரவு 12.00 மணியுடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

இதற்குப் பின்னர் இந்தக் காரியாலயங்கள் இயங்குவது தேர்தல் விதிகளை மீறும் செயலாகும். அவ்வாறான இடங்களை பரிசோதிப்பதற்கு மாவட்ட அல்லது பிரதேச தலைமையக பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளுடன் கூடிய குழுக்கள் நேற்று மாலை விஜயம் செய்தனர்.

இன்று அனைத்து தேர்தல் காரியாலயங்களும் அகற்றப்பட்டிருத்தல் வேண்டும். தேர்தல் சட்டவிதிகளுக்கமைய தேர்தல் காரியாலங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பின் அவற்றை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)





இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 64 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்.<br>தொ.இ: B/3998 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 53<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G040 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 12<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3999 | பிறப்பு: 1977 RC<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 31 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/041 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 39 சூரிசெவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC, MSC/ ஆசிரியர்<br>தொ.இ: B/4000 | பிறப்பு: 1974 RC<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 6 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/042 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 26 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ்)<br>தொ.இ: B/024 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 11 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/044 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
...காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 38 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(மானிப்பாய்)

வடமாகாண சபைக்குப் பிரமாண அடிப் படையிலான நன்கொடை வேலைத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாடுகள் சங்கத்தில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பெண்களைத் தலை மைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகளைத் தெரிவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் 38 குடும்பங்க ளுக்குத் தலா 20 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டன.

இதற்கான நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை மேற்படி சங்க மண்டபத்தில் தலைவர் கந்தையா மகாதேவன் தலை மையில் இடம்பெற்ற போது முதன்மை விருந்தினராக வடமாகாண விவசாய, கால் நடை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் வடமாகாண அமைச்சர் ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப் பினர் பாலச்சந்திரன் கஜதீபன், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களப் பணி ப்பாளர் டாக்டர் சி.வசீகரன், உடுவில் கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் சி.விம லகுமார், வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் நா.இலட்சுமிகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்குக் கோழிக்குஞ்சுகளை வழங்கி வைத்த னர். (இ-23)




## கலாபூஷணம் விருது வழங்கிக்கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

தொல்புரத்தைச் சேர்ந்த சிறந்த இசைக் கலைஞரும் சமய, சமூக சேவையாளருமான கந்தப்பு லோகே ஸ்வரன் அண்மையில் பண்டார நாயக்க சர்வதேச மகா நாட்டு மண் டபத்தில் அரச உயர் விருதான கலா பூஷணம் விருது வழங்கிக் கௌரவி க்கப்பட்டுள்ளார்.

இவர் வடபிராந்திய இந்துப் பேர வையால் ஆர்மோனிய இசையரசு, பண்ணிசைப் பாவலன் மற்றும் வலி.மேற்கு கலாசாரப் பேரவை யால் 'கலைவாரிதி முதலான பட்ட ங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (இ

## பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தினமும் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 8.45 மணி க்கு நடைபெறவுள்ளது.

சுன்னாகம் வாழ்வக தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் வாழ் வக செல்லா மண்டபத்தில் நடைபெ றவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கல ந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி மோசடி செய்த பெண்ணுக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

கனடா நாட்டுக்கு அனுப்புவ தாக கூறி 24 இலட்சம் ரூபாயை மோசடி செய்த பெண்ணை தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியு டைய ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் நேற்று முன்தினம் அனுமதியளித்தார். பருத்தித்துறை, வியாபாரி மூலை பகுதியை சேர்ந்த பெண்ணுக்கே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டு ள்ளது.

பெண்ணின் கடவுச் சீட்டை நீதிமன்றில் பாரப்படுத்துமாறும் சந்தேகநபருக்கு உத்தரவிட்ட நீதவான், சந்தேகநபர் வெளிநாடு செல்லாதவாறு, குடிவரவு குடிய கல்வு திணைக்களத்துக்கு சந் தேகநபர் பற்றிய விபரங்களை அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலி ஸாருக்கு உத்தரவிட்டதுடன் வழக் குத் தவணையை பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதிக்கு நீதவான் ஒத்தி வைத்தார்.

பருத்தித்துறை மணல் ஒழு ங்கை பகுதியை சேர்ந்த ஒரு வரை, கனடாவுக்கு அனுப்புவதாக க்கூறி, 24 இலட்சம் ரூபாய் பண த்தை பெற்றுவிட்டு வெளிநாட்டுக்கு அனுப்பாமல் இழுத்தடிப்பு செய்து வந்துள்ளதுடன், பணத்தை திரு ம்ப தருமாறு கேட்டபோது சந்தேக நபர் கொடுக்க மறுத்துள்ளார். பாதிக்கப்பட்ட நபர் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண் டிருந்த காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார், 49 வயதுடைய பெண்ணை கடந்த 10 ஆம் திகதி கைதுசெய்தனர். இந்த வழக்கு நேற்று முன்தினம் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சந்தேகநபர் சார்பாக மன் றில் ஆஜராகிய சட்டத்தரணி சந் தேகநபருக்குபிணைவழங்குமாறுமன றில் கோரியிருந்ததற்கமைய நீத வான் பிணை வழங்கினார்.(இ-5)

# பெண்ணின் கூந்தலைக்கத்தரித்த இரண்டாவது சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

பெண்ணொருவரின் கூந்த லைக் கத்தரித்த சம்பவம் தொடர் பில் கெருடாவில் தெற்கு பகுதியை சேர்ந்த இரண்டாவது சந்தேக நபரை நேற்று கைது செய்து ள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரீ.எஸ்.மீடின் தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு செப் டெம்பர் மாதம் 23ஆம் திகதி, முகமூடி அணிந்து கொண்டு, யாழ். வல்வெட்டித்துறை கெருடாவில் தெற்கு பகுதியை சேர்ந்த பெண் ணொருவரின் வீட்டுக்குள் நுழை ந்த சில இளைஞர்கள், குறித்த பெண்ணை மடக்கி பிடித்து கூந் தலை கத்தரித்தனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பெண வல்வெட்டித்துறை பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய் திருந்தார். அதனை யடுத்து, விசார ணைகளை மேற் கொண்ட பொலி ஸார் முதலாவது சந்தேகநபரை கடந்த டிசெம்பர் மாதம் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்க ப்பட்டார்.

முதலாவது சந்தேகநபர் வழ ங்கிய தகவலின் அடிப்படையில் இரண்டாவது சந்தேகநபரை கைது செய்துள்ளதாக பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். இவரிடம் பொலி ஸார்மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-5)

# சரஸ்வதி ச.ச.நிலையத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு

கைதடி சரஸ்வதி சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த சனிக்கிழமை நிலையத்தலைவர் ப. செல்லத் துரை தலைமையில் நடைபெற் றது.

இதில் தலைவராக து. மகேந் திரன், உப தலைவராக வே. மோக னதாஸ், செயலாளராக சி.நிசா கரன், உபசெயலாளராக ப.துபி லன், பொருளாளராக கெ. கெங் கேஸ், விளையாட்டுக் கழகத் தலைவராக சி. அஜிதரன், விளை யாட்டு கழகச் செயலாளராக சி. சிவகீதன், பொருளாளராக அ.ஆத வன், கல்விக்கழகத் தலைவராக நா.கிருபதீசன், கலைக்கு தலை வராக திருமதி ரனீபா, காப்பாளர் ப. செல்லத்துரை என்போரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வா.பாரத்,மா.தவேந்திரன், சி.சிங் கராஜா, ர.கார்த்திக், சு. பார்த்தீபன், மா. சுதர்சன், ஞா. தகுநாதன், ரி. சிவதாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-134)

## வேம்படி மகளிர் கல்லூரி 12ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ்.வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை முதலாம் தவணை க்காக எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் என பாடசாலை அதி பர் அறிவித்துள்ளார். (இ




## க.பொ.த (உ/த) பரீட்சை முதன்மை பெறுபேறுகள்

**யா/வயாவிளான் மத்திய கல்லூரி**

**கணிதப்பிரிவு**

த.கலைநீதன்-2பிசி, பா.சிந் துஜன்-பி2சி

**விஞ்ஞானப்பிரிவு**

ம.துவாகரன்-பி2எஸ்

**வர்த்தகப்பிரிவு**

யோ.நிதூசியா-2ஏபி, நி.ஆர் த்திகன்-ஏ2பி, அ.ஸ்ரீலக்ஸன்-ஏ2பி, சி.நிகாரிகா-ஏ2பி, த.ஜயந்திகா-ஏ2பி, வ.தனுசன்-ஏபிசி, செ.வித் தகி-ஏபிசி, வ.மதுசா-3பி, சி.கிருத் திகன்-பி2சி, ல.பஜிந்தன்-பி2சி, த.ராஜ்குமார்-ஏ2எஸ்.

**கலைப்பிரிவு**

உ.துதியா-3ஏ, த.கோமதி-2ஏபி, ரி.சர்விகா-2ஏசி, சி.லக்ஸணா-2ஏசி, பு.நவனீதா-2ஏசி, பா.ஜென்சிகா-2ஏஎஸ், ம.கரன்-ஏபிசி, அ.சர்மியா-ஏபிசி, ம.சனுதியா -ஏபிசி, ம.கஜீபா-ஏபிசி சி.பிருந்தா- ஏபிசி, ம.பிரதீப்-ஏ2பி, அ.லிசா-ஏ2சி,ம.சுபோதினி-ஏ2பி, செ.தக்சாணி-ஏ2பி, சி.ஸ்ரீல க்ஸனா-ஏ2பி, க.கேஸ்தா-ஏ2சி, ம.டென்சியா-ஏசிஎஸ்.

**யா/கோண்டாவில் இந்துக்கல்லூரி**

ஸ்ரீ.புனாட்சன்-2ஏபி, சு.பிறி ன்சிகா-பி2சி, இ.துளசிகா-பிசி எஸ், உ.பகீதரன்-3எஸ், ம.அபிலக்சனா -சி2எஸ்.





யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பண்டத்தரிப்பு பல்லசுட்டி பகுதி யில் இராணுவத்தினால் கட்டப்பட்ட வீடுகளை மக்களிடம் கைய ளித்துள்ளார். தேர்தல் பரப்புரைக்காக கடந்த 4 ஆம் திகதி யாழ். வந்திருந்த நாமல் ராஜபக்ஷ குறித்த வீடுகளை மக்களிடம் கையளித்துள்ளார்.(படங்கள்:- (மானிப்பாய்ச்செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்தால் மட்டுமே மகிந்தவை காப்பாற்ற முடியும்

## முன்னாள் எம்.பி.ஸுஹைர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஆட்சி மாற்றம் மட்டும்தான் இந்த நாட்டையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வையும் சர்வதேசத்திடமிருந்து காப்பாற்றும். மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவு செய் யப்பட்டால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தடைகளுக்கு முகம் கொடுக்கத் தயாராக வேண்டும். இவ்வாறு தேசிய ஐக்கிய அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.ஸுஹைர் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படாவிட்டால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளால் பொருளாதாரம் சிதைவடையும். மேற் குலக நாடுகள் இலங்கை மீது தடைகளைக் கொண்டு வந்தால் அந்தத் தடைகள் எமது பொருளாதாரத்தில் ஏற்படுத்தப் போகும் பயங்கரமான விளைவுகளை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது.

உலகின் சக்திமிக்க நாடுக ளுடன முரண்பாட்டு போக்கை கடைபிடிப்பதன் மூலம் அவை எம்மீது தடைகளைக் கொண்டு வந்தால், அந்தத் தடைகள் எமது பொருளாதாரத்தை மிகவும் ஆபத்தான முறையில் நிலைகுலையச் செய்து விடும்.

தற்போதைய அரசு இந்த நாட்டு மககளின் நலன்களுக்கு கேடு விளைவிக்கக் கூடிய ஒரு பாதையில் இந்த நாட்டை இட்டுச் செல்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராக மேலைதேய நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுப் பட்டியலில் சமய ரீதியான முரண்பாடுகள் உட்பட யுத்தத்துக்குப் பிந்திய விடயங்கள் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது.

இந்நிலையில், இலங்கையில் ஜனநாயக ரீதியான ஆட்சி மாற்றம் ஒன்று இடம்பெறாவிட்டால் இந்த வருடம் முடிவடைவதற்குள் இந்த நாடு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைகளைச் சந்திக்கத் தயாராக வேண்டும்.

இந்தத் தடைகள் வர்த்தகம், வங்கித்துறை மற்றும் பொருளாதாரம் என்பனவற்றில் மோசமான விளைவுகளை நிச்சயம் கொண்டு வரும்.

அப்போது மக்கள் நாட்டைக் காப்பாற்றுவதா அல்லது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதா என்ற முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேர்தல் தினத்தன்று முழுநாள் விடுமுறை

## மனோ கணேசன் கோரிக்கை



(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டின் பிரதான நகரங்களின் தனியார்களால் நடத்தப்படும் வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், உணவு விடுதிகள், கட்டுமான பணிமனைகள், வைத்திய சாலைகள் மற்றும் தனியார் இல்லங்களில் பணியாற்றும் வெளியூர்களை சேர்ந்த ஊழியர்கள், இன்று இரவே வீடு சென்று மறுநாள் வாக்களிக்கும் முகமாக தேர்தல் தினமான 8ஆம் திகதி முழுநாள் விடுமுறையை வழங்கும்படி அனைத்து தொழில்தருநர்களையும் கேட்டுக்கொள்கிறேன் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் விடுத்துள்ள அவசர வேண்டுகோளில் தெரிவித்துள்ளார் மனோ கணேசன்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் ஊடகங்களுக்கு கூறியுள்ளதாவது,

நடைபெறவுள்ள தேர்தல், நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் தேர்தலாகும். எந்த வேட்பாளருக்கு, எந்த சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் தேர்தல் பிரசார காலகட்டத்தில் அனைத்து கட்சிகளும் உரிய பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

எந்த அணி வெற்றி பெற்றாலும், ஒரு சிறிய வித்தியாசத்திலேயே வெற்றியாளர் தீர்மானிக்கப்படலாம் என்பதையே கருத்து கணிப்புகள் கூறுகின்றன.

எனவே இதில் அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த தேர்தலில் வாக்களிப்பது ஒவ்வொரு வாக்காளரினதும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும்.

இந்நிலையில் தமது ஊழியர்கள் தங்களது வாக்களிக்கும் கடமையை செய்வதற்கு ஏதுவாக, தொழில்தருநர்கள் முழு நாள் விடுமுறையை தேர்தலன்று வழங்கி ஒத்துழைக்கும்படி கோருகிறேன் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# உளவு பார்த்தோரின் உயிர் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸால் பறிப்பு



ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை உளவு பார்த்த நபர்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகிறது.

இந்நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் பிரிவில் இணைந்து மதம் மாறி, தீவிரவாதிகளின் முகாம்களிலே, சுமார் 8 பொலிஸ் அதிகாரிகள் தங்கியுள்ளனர்.

இவர்கள் தீவிரவாதிகளை உளவு பார்த்து அந்த தகவல்களை ஈராக் அரசாங்கத்திற்கு தெரிவித்து வந்துள்ளனர்.

இவ்விடயத்தை அறிந்த ஐ.எஸ்.ஐ.எஸ், தங்களை உளவுபார்க்க வந்த 8 உளவாளிகளையும் கொல்ல திட்டமிட்டனர்.

இதனையடுத்து அந்த 8 பேரையும் பிணைக்கைதிகளை போல் நடத்தி, காவி நிற உடை அணிவிதது மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காக மொசூல்(Mosul) நகருக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அங்கு அவர்களை மண்டியிட செய்து, நேர்காணல் நடத்தி சில தகவல்களை பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்பின் அவர்கள் அனைவரின் பின்னாலும் நின்றிருந்த ஒவ்வொரு தீவிரவாதியும், துப்பாக்கியை ஏந்தியபடி போஸ் கொடுத்து வெகு விரைவாக உளவாளிகளை சுட்டு கொன்றுள்ளனர்.

மேலும் தாங்கள் சுட்டுக் கொன்ற புகைப்படங்களை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். (இ-5)

# மைத்திரிபால வெற்றியீட்டுவார்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஐந்து மாவட்டங்களில் மட்டுமே வெற்றியீட்டுவார் என இளைஞர் விவகார அமைசசர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

14 மாவட்டங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவான வெற்றியை பதிவு செய்வார். ஏனைய மாவட்டங்களில் கடுமையான போட்டி நிலவும் என ஆய்வு திட்டமிடல் மற்றும் மனித வள அபிவிருத்தி நிறுவனம் நடத்திய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

160 தேர்தல் தொகுதிகளில் 106 தேர்தல் தொகுதியில் ஜனாதிபதி மகிந்த வெற்றியீட்டுவார். 43 தேர்தல் தொகுதிகளில் மட்டுமே மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டுவார்.

மேலும் 11 தேர்தல் தொகுதிகளில் யார் வெற்றியீட்டுவார் என்பது பற்றிய தெளிவான முடிவுகள் கிடைக்கவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த 54.7 வீத வாக்குகளையும், மைத்திரிபால சிறிசேன 38.7 வீத வாக்குகளையுமே பெற்றுக்கொள்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மகிந்தவை வீழ்த்தி விடக்கூடாது

## பின் விளைவுகள் குறித்து பலசேனா எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டை பிரிப்பதற்கே எதிரணி உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டை காப்பாற்றுவது அனைத்து மக்களதும் கடமையாகும். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றி ஒன்றிணைய வேண்டும். மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி விடக்கூடாது. அவ்வாறான சூழ்நிலை உருவானால் மகிந்த ராஜபக்ஷ உட்பட அனைவரும் பருப்பு சாப்பிட வேண்டியேற்படும் என பொதுபலசேனா அமைப்பின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.**



கொழும்பு கிருலப்பனையில் அமைந்துள்ள பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது எதிரணியினர் நாட்டை மீண்டும் பழைய நிலைக்கு ஒரு பயங்கரவாத சூழ்நிலைக்கு கொண்டு செல்லவே திட்டமிட்டுள்ளனர். எனவே, மக்கள் தமது அரசியல் கட்சிகளையும் நிறங்களையும் மறந்து பாதுகாப்பான வளமான எதிர்காலத்துக்காக தமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும்.

மேற்கத்தேய தூதுவராலயங்கள் சிலவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்தவை தோற்கடிக்க சதித்திட்டம் தீட்டி செயற்பட்டு வருகின்றன. நாட்டை துண்டாட வேண்டுமென்பதே சர்வதேசத்தின் இலக்காகும். நாட்டின் தலைவரையும் குடும்பத்தையும் அவரது பிள்ளைகளையும் மிக மோசமாக தூஷித்து வைராக்கியத்தை உருவாக்கி தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவறு.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் முச்சக்கரவண்டி சாரதிகள் சிலர் மூலம் கட்டுக்கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன. மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியாது என்பதனை உணர்ந்த இவர்கள் ஜனாதிபதியின் மீது சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தமிழ்-முஸ்லிம்கள் அடிப்படைவாதிகள்

ஜனாதிபதியை தோற்கடிப்பதற்காக ஒன்றிணைந்துள்ள தமிழ் முஸ்லிம்களை அடிப்படைவாதிகள் என்று ஆளுங்கட்சி மேல் மாகாண சபை உறுப்பினர் நவ்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அடிப்படைவாத தமிழ் மற்றும் முஸ்லிம் அமைப்புக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்காக ஒன்றிணைந்துள்ளதால், சிங்களவர்கள் ஒன்றிணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்க வேண்டும் என மேல் மாகாண சபை உறுப்பினர் நவுஸர் பௌஸி தெரிவித்தார்.

அடிப்படைவாத ,இனவாத தமிழ் குழுக்களும் கிழக்கின் அடிப் படைவாத, இனவாத முஸ்லிம் குழுக்களும் ஜனாதிபதியைத் தோற்கடிப்பதற்காக களத்தில் இறங்கியுள்ளாரகள. அதனால் நான் இந்நேரம் நாட்டிலுள்ள சிங்கள மக்களிடம் விசேட வேண்டுகோள்ஒன்றைவிடுக்கின்றேன்

நாட்டைப் பாதுகாக்க, ஜனாதிபதியைப் பாதுகாக்க நீங்கள் எலலோரும்ஒன்றிணைந்து முன்னே வாருங்கள். சிங்களவர்களே உங்கள் ஜனாதிபதியைப் பாதுகாக்க வாருங்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## பரு. பிரதேச வைத்தியசாலையில் தாதியர்கள் பெரும் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 60 தாதியர்கள் கடமையாற்றவேண்டிய நிலையில் தற்போது 41 தாதியர்களே கடமையாற்றி வருவதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக வைத்தியசாலை அத்தியட்சகர் வேலுப்பிள்ளை ஜெயராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, 10 நோயாளர் விடுதி, சத்திரசி கிச்சைபிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, மாதாந்த வைத்திய பரிசோதனை பிரிவு, அவசர சிகிச்சை என்பனவற்றில் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2014 ஆம் ஆண்டு மேற்கொண்ட கணக்கெடுப்பில் 60 தாதியர்கள் வைத்தியசாலைக்கு தேவையென கணக்கெடுக்கப்பட்டது.

ஆனால் தற்போது 41 தாதியர்களைக் கொண்டு வைத்தியசாலை பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். சில தாதியர்கள் காலையில் பணிக்கு வந்து மதியம் அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டு, இரவு மீண்டும் கடமைக்கு அழைக்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

இதனால் தாதியர்கள் உடல், உள ரீதியில் பாதிப்படைகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தா. (இ-5)

### வடமராட்சி கற்கோவளத்தில்

## பனிக்கட்டி தொழிற்சாலையின் ஊழியர்கள் மறியல்போராட்டம்



யாழ்.வடமராட்சி கற்கோவளம் பனிக்கட்டி தொழிற்சாலை ஊழியரகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலையிலிருந்து தொடர் மறியல் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பனிக்கட்டி தொழிற்சாலை நிர்வாகம் சம்பளம் மற்றும் அடிப்படை சலுகைகள் வழங்குவதில் மோசடி செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ள தொழிலாளர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இத் தொழிற்சாலை யு.எஸ். எயிட் நிறுவனத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்த தொழிற்சாலையில் 80 ஊழியர்கள் பணியாற்றவேண்டிய நிலையில் 12 ஊழியர்கள் மட்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனால் தங்களுக்கு வேலைச்சுமை அதிகம் எனக்கூறிய ஊழியர்கள். தங்களுக்கான அடிப்படைச் சம்பளம் 9 ஆயிரம் ரூபாய் தொகைக்கு குறைவாக இருப்பதாக் குற்றம் சாட்டினர். தங்களுக்கான ஊழியர் சேமலாப நிதி, மேலதிக படிகள் போன்ற சலுகைகள் வழங்கப்படவில்லையென்றும் பணி புரியும் போது தேவைப்படும் கையுறைகள், தலைக்கவசம, பாதுகாப்பு உடைகள் ஆகியனவும் வழங்கப்படவில்லையெனவும் ஊழியர்கள் குற்றம் சாட்டினார்கள். தொழிற்சாலைக்கு பனிக்கட்டி ஏற்றுவதற்காக செல் லும் வாகனங் களையும் தடுத்து ஊழியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமையும் போராட்டத்தில் ஈடுபட்டனா். (இ-60)

## அலரிமாளிகைக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம்




(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போய் இம்மாதத்துடன் 5 வருடங்கள் நிறைவடையும் நிலையில் அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறும் கோரி எக்னெலிகொடவின் குடும்பதாரும் சிவில் அமைப்புகளும் இணைந்து நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் அலரி மாளிகைக்கு முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பு பிரதீப் எக்னெலிகொட காணாமற்போனதாக அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்தார்.

அவர் அரசாங்க தரப்பினரால் கடத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்திய அவர் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் இதனால் தமது குடும்பம் பெரும் குடும்பச் சுமைகளையும் சவால்களையும் எதிர் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எக்னெலிகொடவின் குடும்பத்தினருடன் அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் சுமார் 2 மணித்தியாலங்களாக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவ்விடத்துக்கு வந்து தமது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்த போதும் ஜனாதிபதி வருகை தராததால் தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## மைத்திரிபாலவின் ஆட்சியின் கீழ் முஸ்லிம்களுக்கு உணவு இல்லை

### அஸ்வர் எம்.பி அச்சம்

மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு உணவு கிடைக்காது. அதேபோன்று "குர்பானும்" கொடுக்க முடியாமல் போகும் எனத்தெரிவிக்கும் ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச். எம். அஸ்வர். அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழில் ஒருவிதமாகவும் சிங்களத்தில் இன்னொரு விதமாகவும் மிருகவதையை ஒழிக்கும் விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் றிசாத் உட்பட சுமார் 72 ஆயிரம் முஸ்லிம்கள் கடல்மார்க்கமாக கற்பிட்டிக்கு வந்து சேர்ந்த பொழுது அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தேன். மைத்திரிபால சிறிசேன முஸ்லிம்களின் எதிரியாவார். நாணயத்தின் ஒரு பக்கம் பொதுபலசேனா என்றால் மறு பக்கம் மைத்திரிபால ஆகும்.

பொலநறுவையில் முஸ்லிம் அரிசி ஆலை உரிமையாளர்களை இரவோடிரவாக அவர் விரட்டியவர். முஸ்லிம்களுக்கு பொருளாதார அழிவை அவர் கொண்டு வந்தார்.


மைத்திரிபால சிறிசேன ஒரு முஸ்லிம் விழாவுக்கும் வருவதில்லை.

ஒவ்வொரு தரப்பினருடனும் வெவ்வேறுபட்ட இரகசிய ஒப்பந்தங்களை இவர் செய்துள்ளார் என்றும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக பயிர்ச்செய்கைக்கான பயிர்ச்சிகிச்சை முகாம்

## முல்லை.மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் என்.திவாகரன்



(முல்லைத்தீவு)

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்போக பயிர்ச்செய்கையானது அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அதேவேளை பயிர்ச்செய்கையை பாதிக்கும் பிரதான பீடைகளாகிய பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்கமும் தீவிரமடைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது என முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் என்.திவாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நிலையை கருத்திற்கொண்டு முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம் மாவட்டம் தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வரும் பயிர்ச் சிகிச்சை முகாம் நிகழ்வுகள் தெடர்பாக விவசாயிகளுக்கு அறிவுறுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இப் பயிர்ச்சிகிச்சை முகாம்கள் முல்லைத்தீவு மாட்ட விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் மாதாந்த அல்லது இரு வாராந்த இடைவெளிகளில் தாவர வைத்தியர்களாக பயிற்றுவிக்கப்பட்டவிவசாயப்போதனாசிரியர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வானது விவசாயிகளுக்கு பரீட்சயமான அவர்கள் அதிகம் நடமாடுகின்ற இடங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதால் விவசாயிகள் இலகுவில் அணுகி தமது பயிர்ச் செய்கையில் எதிர்நோக்கும் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இப் பயிர்ச்சிகிச்சை முகாமிற்கு தமது பிரச்சினை நிமிர்த்தம் வருகை தரும் விவசாயிகள் இயன்றளவு தாக்கத்திற்குள்ளான தமது பயிர்களின் மாதிரிகளை எடுத்து வருமாறு கேட்கப்படுகின்றனர்.

அவ்வாறு மாதிரிகள் கொண்டு வரப்பட்டாலேயே அவற்றினை முறையாக பரிசீலித்து குறித்த பிரச்சினைக்காக காரணங்கள் இனம்கண்டு அதற்கான பொருத்தமானதும் நடைமுறை சாத்தியமானதுமான தீர்வினை வழங்க முடியும்.

இவ் விபரங்களை ஆவணப்படுத்தும் நோக்கிலும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கிலும் பரிந்துரை செய்யும் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதன் ஒரு பிரதி தமது பிரச்சினையை முன்வைத்த விவசாயிகளுக்கு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமையவிவசாயிதனது தீர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அவசியமாயின் குறித்த பிரச்சினை உள்ள வயல் அல்லது தோட்டத்திற்கு விவசாய போதனாசிரியர்கள் நேரடியாகச் சென்று பார்வையிட்டு தீர்வினை வழங்குவார்.

பிரச்சினையை சரியாக இனம் காணமுடியாத நிலை ஏற்படின் அது விவசாய ஆராய்ச்சி பிரிவினருக்கு முற்படுத்தப்படும்.

இந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் மாதம் மற்றும் இருவார இடைவெளிகளின் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் இடம்பெறும் பயிர்ச்சிகிச்சை முகாம்களில் பங்கேற்று பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதற்கமைய விவசாய போதனாசிரியர்பிரிவுகளானதுணுக்காயிலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் யோகபுரத்திலுள்ள யோகபுரம் கிழக்கு பொதுநோக்கு மண்டபத்திலும் ஐயங்கன்குளத்திலுள்ள அம்பாள் பெருமாள் பொது நோக்கு மண்டபத் திலும் பாலிநகரிலுள்ள பொதுநோக்கு மண்டபத்திலும் பாண்டியன்குளத்திலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் மாங்குளத்திலுள்ள பொதுநோக்கு மண்டபத்திலும் ஒலுமடுவிலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் ஒட்டுசுட்டானிலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் தண்டுவானிலுள்ள பொதுநோக்கு மண்டபத்திலும் முத்தையன்கட்டு இடதுகரையிலுள்ள முத்துவிநாயகபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும் முத்தையன்கட்டு வலது கரையிலுள்ள பொதுநோக்கு மண்டபத்திலும் முள்ளியவளை, குமுழமுனை, அளம்பில் ஆகியவற்றிலுள்ள கமநல அபிவிருத்தி நிலையங்களிலும் கொக்குத்தொடுவாயிலுள்ள கருநாட்டுக்கேணி பொதுநோக்கு மண்டபத்திலும் புதுக்குடியிருப்பிலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் உடையார்கட்டிலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்திலும் விசுமடுவிலுள்ள தொட்டியடி பொதுநோக்கு மண்டபத்திலும் இப்பயிர்ச்சிகிச்சை முகாம்கள் காலை 9 மணி தொடக்கம் மாதாந்தம் மற்றும் இருவார இடைவெளிகளில் தொடச்சியாக நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)




## சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 1500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள்




(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் அண்மையில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு, லைக்காவின் ஞானம் அறக்கட்டளை நிதியத்தினர் நிவாரண பொருட்களை வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தம்பனைக்குளம் மற்றும் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரிகாரிக்கண்டல், பொன்தீவு கண்டல், அச்சங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 குடும்பங்களுக்கே நிவாரண பொருட்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

இதன்போது, அரிசி, பருப்பு, சீனி, தேயிலை, பதப்படுத்தப்பட்ட மீன், பால்மா, பிஸ்கட் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா அடங்கலான உலர் உணவுப் பொதியொன்றும், சவர்க்காரம், பற்பசை, நுளம்புச் சுருள்கள், டெட்டோல், பவுடர், சீப்பு உள்ளிட்ட பல்வேறு பொருட் கள் அடங்கிய சுகாதாரப் பொதியொன்றும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், படுக்கை விரிப்புக்கள், துவாய் நுளம்பு வலை ஆகிய அத்தியாவசியப் பொருட்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மடு பிரதேசச் செயலாளர் சத்தியசோதி,கிராம அலுவலகர்கள், ஞானம் அறக்கட் டளை நிதியத்தின் மாவட்ட இணைப்பாளர், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2)

## எமது பிள்ளைகள் குப்பிவிளக்கின் ஒளியில் கல்வியை தொடர்கின்றனர்

### பெற்றோர் ஆதங்கம்

கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம் அணைக்கட்டு வீதி, 2 ஆம் வாய்க்கால் வீதி போன்ற இடங்களுக்கு இதுவரை மின்சாரம், வீதி புனரமைப்பு இடம்பெறாமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் மேற்குறித்த சில பகுதிகள் புறக்கணிக்கப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஸ்கந்தபுரம் அணைக்கட்டு வீதி, 2 ஆம் வாய்க்கால் வீதி ஆகிய இடங்களை அண்மித்து சுமார் 290 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதிகளுக்கான மின்சார வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படாமையால் தமது பிள்ளைகள் தற்போது குப்பி விளக்குகளின் ஒளியின் கீழ்கல்வியை தொடர்வதாக பெற்றோர் கூறு கின்றனர்.

அத்துடன் விஷ ஜந்துக்களின் அபாயம் இப்பகுதிகளில் அதிகமாகக் காணப்படுவதால் இரவில் வெளியில் செல்ல முடியாதுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அனைத்து மாவட்டங்களிலும் அபிவிருத்தி வேலைகள் இடம்பெறுகின்ற போதிலும் தமது பகுதி ஏன் புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அத்துடன் வீதிகள் செப்பனிடப்படாமையால் அன்றாடம் பயணம் செய்யும் மக்கள் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் அப்பகுதி மக் களால் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒரு தடவை வருகை தந்து பின் தங்கியுள்ள எமது கிராமத்தின் அபிவிருத்தியில் கரிசனை காட்டி தாமும்அபிவிருத்தியின் பலாபலன்களை அனுபவிக்க வேண்டுமென அப்பகுதி வாழ் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு 10மில்.ரூபா நிதியொதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தங்களால் 16 ஆயிரத்து 294 பேர் கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களிற்கான நிவாரண உதவிகளை வழங்கும் வகையில் இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிய முடிகின்றது.

இதனடிப்படையில் இடம் பெயர்ந்த மக்களிற்கான சமைத்த உணவுகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கரைச்சி பிரதேசத்தில்8 ஆயிரத்து 828 பேரும் கண்டாவளை பிரதேசத்தில் 3 ஆயிரத்து 803 பேரும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 340 பேரும் பூநகரி பிரதேசத்தில் 3 ஆயிரத்து 323 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-272)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

1032

## ஆட்டுக்கார ஆண்டியப்பன்

ஆண்டியப்பனின் பெற்றோர் அவன் சிறுமனாக இருக்கும்போதே இறந்துவிட்டனர். அநாதையான ஆண்டியப்பனை, அவனுடைய தந்தையின் நண்பர் ஒருவர் புகலிடம்



தந்து வளர்த்தார். வளர்ந்து பெரியவனான பின், அவன் தன் வாழ்க்கைக்கு வழி தேடும் வண்ணம் சிறிது பண உதவியும் செய்தார்.

ஆண்டியப்பன் தனக்கென ஒரு குடிசை அமைத்துக்கொண்டு, மிஞ்சிய பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்கினான். தன குடிசையைச் சுற்றியிருந்த புல்வெளியில் அவற்றை மேயவிட்டு வளர்த்தான். அவை வளர்ந்த பின் அவற்றை விற்று, கிடைத்த பணத்தில் நான்கு ஆடுகள் வாங்கினான்.

இவ்வாறு ஆடுகள் வாங்கி, வளர்த்து, அவற்றை விற்று நல்ல லாபம் சம்பாதித்தான. ஓரளவு பண வசதி ஏற்பட்டதும், அந்த கிராமத்தில் வசித்த ஏழைப்பெண் லட்சுமியை மணம் புரிந்தான். அந்த கிராமத்தில் அவனுககு ஆட்டுக்கார ஆண்டியப்பன் என்ற பெயரே ஏற்பட்டுவிட்டது. ஆனால் லட்சுமிக்கு தனது கணவன் செய்யும் தொழில் பிடிக்கவில்லை.

பல முறைகள் அவள் தன் கருத்தைத் தெரிவித்தும், ஆண்டியப்பன், தொழிலை மாற்ற முடியாது என்று மறுத்துவிட்டான். ஆண்டியப்பனிடமிருந்த ஆட்டுக்குட்டிகளில் ஒன்றுக்கு ஒரு கண் இல்லை. பரிதாபத்துடன் லட்சுமி அதற்கு “ராமு” என்று பெயரிட்டுச் செல்லமாக வளர்த்தாள்.

ஒருநாள் ஆண்டியப்பன் பல ஆடுகளை ஓட்டிக்கொண்டு நகரம் சென்று மாலை வீடு திரும்பினான். அவனுக்கு உணவு பரிமாறிய படி, “அவ்வளவு ஆடுகளையும் விற்றுவிட்டாயா?” என்று லட்சுமி கேட்க, அவன், “ஆமாம்! ஒரு கசாப்புக் கடையில் விற்று விட்டேன்!” என்று பதிலளித்தான்.

“நம் பிள்ளைகளைப் போல் வளர்த்த ஆடுகளை கசாப்புக் கடைக்கு விற்க உனக்கு எப்படி மனம் வந்தது?” என்று லட்சுமி கேட்டதும், ஆண்டியப்பன் கோபத்துடன், “மூன்று வேளை நாம் சாப்பிட வேண்டும் என்றால் அதையெல்லாம் பார்க்க முடியாது!” என் றான்.

“அப்படி சாப்பிட்டு உயிர் வாழ வேண்டுமா? இந்த பாழாய்ப்போன வேலையை விட்டுவிட்டு, பசுமாடு வாங்கிப் பால் வியாபாரம் செய்து பிழைக்கலாமே!” என்றாள். அதற்கு ஆண்டியப்பன் "எனக்கு உன் புத்திமதி தேவையில்லை! பேசாமல் நான் சம்பாதித்துத் தரும் பணத்தை வைத்து சோறு ஆக்கிப் போடு! மறுபடியும் என் தொழிலைப் பற்றிப் பேசினால் உன்னைத் தொலைத்து விடுவேன்!" என்று எரிந்து விழுந்தான்.

லட்சுமி அன்றிரவு சாப்பிடாமல் அழுது கொண்டே படுத்துக்கொண்டாள். தன் கணவன் செய்வது பாவம் என்று நம்பிய அவள், அவ்னை எப்படித் திருத்துவது என்று யோசித்தவாறே தூங்கிப் போனாள். மறுநாள் காலை ஆண்டியப் பன் அவளி டம், “லட்சுமி! கங்காபுரத்து ஜமீன்தார் தன் குலதெய் வத்திற்கு பூஜை செய்யப் போகிறாராம்! அம்மனுக்குப் பலியிட ஒரு ஆட்டுக்குட்டி வேண்டும் என்று சொன்னார்

இப்போது நீ வளர்த்து வரும் ராமுதான் அதற்கு ஏற்றது! அதை இன்று மாலை ஓட்டிக் கொண்டு கங்காபுரம் போகப் போகிறேன். ஏனெனில், அதிகாலையில் கிடா வெட்டி பூஜை போடுவாராம்! நிறையப் பணம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்” என்றதும் லட்சுமி ஆயிரம் தேள்கள் கொட்டியது போல் துடித் தாள். “ஐயோ! வேண்டாம்! நான் செல்லமாக வளர்த்த ஆட்டுக்குட்டி அது!” என்று லட்சுமி அலறித் துடித்தும், ஆண்டியப்பன் கேட்க வில்லை. அன்று இருட்டும் நேரத்தில், ராமு வைத் தர தரவென இழுத்துக் கொண்டு போய் விட்டான். லட்சுமி அழுது அழுது சிவந்த கண் களுடன் தன் ராமுவை எப்படியாவது காப்பா ற்றுமாறு கடவுளிடம் வேண்டிக் கொண்டாள்.

ஆண்டியப்பன் இரவு நேரத்தில் ஆட்டை இழுத்துக் கொண்டு கங்காபுரம் செல்லுகையில் திடீரென மின்னல் மின்னி இடி இடித்து மழை பெய்யத் தொடங்கியது. மழையில் நனையாமல் இருப்பதற்காக ஆண்டி யப்பன் ஆட்டை இழுத்துக்கொண்டு ஓட முயற்சிக்கையில், இருட்டில் கண் தெரியாமல் கைப்பிடிச் சுவரற்ற ஒரு கிணற்றுக்குள் விழுந்துவிட்டான். நல்ல வேளையாக, கிணற்றினுள் ஒரு மரத்தினுடைய உறுதியான வேர் நீட்டிக் கொண்டிருக்க அதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நீரில் மூழ்காமல் தப்பினான். “காப்பாற்றுங்கள்!” என்று கிணற்றுக்கு உள்ளிருந்தபடியே பல முறை கத்தியும், அவனுடைய குரல் வெளியே சிறிதும் கேட்கவில்லை. ஆனால் தன் எசமானின் நிலையை உணர்ந்த ராமு “மே” “மே” என்று உரக்கக் கத்திக் கொண்டே இரவு முழுவதும் அங்குமிங்கும் திரிந்தது.

பொழுது புலரும் நேரத்தில் ராமுவின் குரலைக் கேட்ட சில வழிப்போக்கர்கள் நின்று கவனிக்க, ராமு வேகமாக கிணற்றுக்கருகே ஓடி மீண்டும் கத்தியது. ஆட்டின் குட்டிதான் கிணற்றினுள் விழுந்துவிட்டது என்று நினைத்து வந்தவர்கள், உள்ளே கத்தக் கூட சத்தமின்றி சோர்ந்திருந்த ஆண்டியப்பனைக் கண்டு அவனை அங்கிருந்து வெளியே தூக்கி வந்தனர்.

வெளியே வந்ததும் தன்னைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தபின், ஆண்டியப்பன் ராமுவை அன்புடன் தழுவிக்கொண்டு கண்ணீர் வடித்தான். உடனே, ராமுவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இந்நேரம் ராமு பலியிடப்பட்டிருக்கும் என்று எண்ணி அழுதுகொண்டிருந்த லட்சுமிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. “லடசுமி! நான் என் முடிவை மாறறிக்கொணடு விட்டேன். உன்னுடைய ராமுவை உன்னிடமே அழைத்து வந்துவிட்டேன். அதுமட்டுமல்ல! இந்தத் தொழிலுக்கு இன்றுடன் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். நீ சொன்னது போல் பசுமாடு வாங்கி பால் வியாபாரம செய்வோம்!” என்று கூறியதை அவளால் நம்பவே முடியவில்லை. அவனுடைய முடிவிற்குக் காரணம் என்ன என்பது, பிறகு ஆண்டியப்பன் விளக்கிய பிறகே அவளுக்குப் புரிந்தது.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2015
07

- ➢1325 - போர்த்துக்கல் மன்னனாக நான்காம் அல்ஃபொன்சோ முடிசூடினான்.
- ➢1558 - காலே (Calais) நகரத்தை இங்கிலாந் திடம் இருந்து பிரான்ஸ் கைப்பற்றியது.
- ➢1598 - ரஷ்யாவின் ஆட்சியை போரிஸ் கூதுனோவ் கைப்பற்றினான்.
- ➢1608 - வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுண் நகரம் தீயினால் அழிந்தது.
- ➢1610 - கலிலியோ கலிலி ஜுபிட்டர் கோளின் நான்கு இயற்கை செய்மதிகளைக் கண்டறிந்தார்.
- ➢1782 - அமெரிக்காவின் முதலாவது வர்த்தக வங்கி வட அமெரிக்க வங்கி திறக்கப்பட்டது.
- ➢1789 - ஐக்கிய அமெரிக்காவில் முதற்தடவையாக அரசுத் தலைவர் தேர்தல் இடம்பெற்றது.
- ➢1841 - யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கப் பட்டது.
- ➢1894 - வில்லியம் கென்னடி டிக்சன் அசையும் படத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- ➢1927 - அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து முதலாவது தொலைபேசிச் செய்தி நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் அனுப் பப்பட்டது.
- ➢1935 - முசோலினி மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பியேர் லாவல் ஆகியோர் பிரெஞ்சு- இத்தாலிய உடன்படிக்கையில் கைச் சாத்திட்டனர்.
- ➢1953 - அமெரிக்க ஜனாதிபதி ஹறி ட்ரூமன் ஐக்கிய அமெரிக்கா ஐதரசன் குண்டைத் தயாரித் திருப்பதாக அறிவித்தார்.
- ➢1959 - பிடல் காஸ்ட்ரோவின் புதிய கியூபா அரசை அமெரிக்கா அங்கீகரித்தது.
- ➢1968 - நாசாவின் சேர்வயர் 7 விண்கலம் ஏவப்பட்டது.
- ➢1984 - புரூணை ஆசியான் அமைப்பில் 6-வது உறுப்பு நாடாக இணைந்தது.

### பிறப்புகள்

- ➢1502 - பாப்பரசர் 13 ஆவது கிரெகரி, (இ. 1585)
- ➢**1925 - தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ்ப்பாணத்தின் சமூக சேவையாளர் (இ. 2008)**
- ➢1941 - ஜோன் வோக்கர், ஆங்கிலேய வேதியியலாளர்

### இறப்புகள்

- ➢1984 - ஆல்பிரட் காஸ்லர், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (பி. 1902)
- ➢[illegible] - [illegible] நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (பி. 1906)

## “சிவத்தமிழ்ச்செல்வி” தங்கம்மா அப்பாக்குட்டி



1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழையல் அப்பாக்குட்டி- தையற்பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த, சமூக சேவையாளரும், சமயச் சொற்பொழிவாளரும், சைவதுக்கும் தமிழுக்கும் பெரும் தொண்டாற்றியவரும், ஏழை மக்களுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஆதரவு இல்லங்கள் அமைத்து சேவையாற்றியவரும், யாழ்ப்பாணம் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும் செயற்பட்டு வந்த **சிவத்தமிழ் செல்வி**” என்று அழைக்கப்படுபவர் தங்கம்மா அப்பாக்குட்டி. யாழ்ப்பாணத்தில் ஒரு சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு முதன்மையான பங்குண்டு. 1970களில் சிறிய கோயிலாக இருந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் திருத்தலத்தைக் கட்டியெழுப்பி ஆலயப் பணியுடன் மக்கள் தொண்டும் ஆற்றி வந்தார்.

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவுக்காக **“சிவத்தமிழ்ச் செல்வி”** என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. மேலும் **“திருவாசகக் கொண்டல்”**, **"செஞ்சொற் செம்மணி”**, **“சிவஞான வித்தகி”**, **“துர்க்கா புரந்தரி”** போன்ற பதினைந்திற்கும் மேற்பட்ட பட்டங்களையும் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆலய வளாகத்தில் ஆதரவற்ற சிறுமிகளுக்கென **“துர்க்காபுரம் மகளிர் இல்லம்”** என்ற பெயரில் ஆதரவு நிலையம் ஒன்றை நிறுவி சேவையாற்றி வந்ததோடு, பசித்துவரும் ஏழைகளின் பசி தீர்க்கவும், தொண்டர்தம் பசியாற்றவும் **“அன்னபூரணி அன்னதான மண்டபம்”** அமைத்தார். அத்துடன் கல்யாண மண்டபம், நல்லூரில் துர்க்காதேவி மணிமண்டபம் என்பனவற்றை ஆரம்பித்தார்.

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி காலமானார். பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில் இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன. இவரின் மறைவுக்கு தமிழ்நாடு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இரங்கல் தெரிவித்திருந்தார்.


இலங்கை அரசினால் **கலாசூரி** என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

## "மூன்று முடிச்சு" படத்தில் முக்கிய வேடத்தில் ரஜினி



அவர்கள்

இதற்குப் பின் பாலசந்தர் இயக்கத்தில் ரஜினி நடித்த படம் அவர்கள்.


பலரும் முக்கோண காதல் கதையைப் படமாக எடுப்பார்கள். அதிலிருந்து மாறுபட்டு நான்கு கோணங்களில் காதலை படம் பிடித்துக் காட்டினார் பாலசந்தர். திரைக்கதையை மிகத் திறமையாக அமைத்தார்.

கதையின் நாயகி சுஜாதா. இசைக் கலைஞன் ரவிக்குமாரை (புதுமுகம்) காதலிக்கிறார். அவர் எழுதும் கடிதங்கள் ரவிக்குமாருக்கு போய் சேராததால் ரஜினிகாந்துக்கு கழுத்தை நீட்டுகிறார். ரஜினிகாந்த் ராமநாதன் என்ற கதாபாத்திரத்தில் நடித்தார். மனைவியை துன்புறுத்தி மகிழும் சாடிஸ்ட் அவர்.

மனைவியை கட்டித் தழுவும்போதுகூட இந்த மாதிரி அணைத்தால் உனக்கு பிடிக்குமா? உன் பழைய காதலன் உன்னை எப்படி அணைப்பான்? என்று வார்த்தைகளால் தேள் போல கொட்டுவார்.

இதனால் இருவரும் விவாகரத்து செய்து கொள்ளும் நிலைமை ஏற்படுகிறது. குழந்தையுடன் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேருகிறார் சுஜாதா.

அங்கு கமல் ஹாசன் (கதாபாத்திரத்தின் பெயர் ஜானி) வேலை பார்க்கிறார். மனைவியை இழந்தவர். எல்லோருக்கும் உதவி செய்யும் நல்லவர். அவருக்கு தோழனாக இருப்பது ஜூனியர் என்ற பெயருள்ள பேசும் பொம்மை.



18

அவர்கள் படத்தில் ரஜினி சுஜாதா

அவர் சுஜாதாவுக்கு உதவிகள் செய்கிறார். கமல் வீட்டிலேயே குடியேறுகிறார் சுஜாதா.

சுஜாதாவின் கதையை அறியும் கமல் அவரை மனதுக்குள் நேசிக்கிறார். ஆனால் அது ஒருதலைக்காதல்.

எதிர்பாராத திருப்பம்

இந்த சமயத்தில் சுஜாதாவின் பழைய காதலன் ரவிக்குமார் பக்கத்து வீட்டில் வசிப்பது சுஜாதாவுக்கு தெரிகிறது. இருவரும் சந்தித்துப் பேசும்போது ரவிக்குமார் நிரபராதி என்பது சுஜாதாவுக்குத் தெரிகிறது. இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்கிறார்கள்.

இந்த சமயத்தில் சுஜாதா வேலை பார்க்கும் கம்பனியின் மானேஜராக மாற்றம் ஆகி வருகிறார் ரஜினி. தான் திருந்தி விட்டதாக கூறி சுஜாதாவுக்கு பல உதவிகள் செய்கிறார்.

இதனால் சுஜாதாவின் மனம் மாறுகிறது. கணவருடன் சேர்ந்து வாழ முடிவு செய்கிறார். அவருடைய வேண்டுகோளை ஏற்று வேறு பெண்ணை மணக்கிறார் ரவிக்குமார்.

இந்தக் கல்யாணம் முடிந்து சுஜாதா வீடு திரும்பும் வேளையில் ஒரு வட இந்தியப் பெண்கைக்குழந்தையுடன் வந்து தன்னை ராமநாதனின் (ரஜினி) மனைவி என்று கூறுகிறாள். இதைத் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்களால் ரஜினி மாறவேயில்லை என்பதை சுஜாதா தெரிந்துகொள்கிறார். ஏன் இப்படி செய்தீர்கள்? என்று சுஜாதா கேட்க நீ மறுமணம் செய்வதை தடுக்கவே அப்படிச் செய்தேன். நீ கதறி அழுவதை பார்க்க வேண்டும் என்பதே என் ஆசை! என்கிறார் ரஜினி.


மன உறுதி படைத்த சுஜாதா என்னை அழ வைக்க மட்டும் உன்னால் முடியாது என்று கூறிவிட்டு திருவனந்தபுரத்திற்கு ரெயில் ஏறுகிறார். கண்ணீருடன் அவரை வழியனுப்பி வைக்கிறார் கமல்.

இந்தப் படத்தில் ஆன்டி ஹீரோ வேடத்தில் அற்புதமாக நடித்திருந்தார் ரஜினி.

மலையாளம் கலந்த தமிழிலே பேசி நடித்து ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தார் கமல். சுஜாதாவும் மிகச் சிறப்பாக நடித்தார். தன் மகன் சுஜாதாவை மணந்து 'அநியாயமாக கை விட்டதை அறியும் ரஜினியின் தாயார் வேலைக்காரியாக மாறி சுஜாதாவுக்கு உதவும் அருமையான குணச்சித்திர கதாபாத்திரம்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 40

.....ஒரு சின்னத் தூத்த விழுந்தாப்போதும்; பதம் கிடைக்கும். ஒரு வாரத்துல களையெடுத்திரலாம்.

என்னமோ கடனுக்கு வட்டி மாதிரி காடெல்லாம் மண்டிக் கெடக்கு களை. அறுகு- மகிழி தொகிழி ஊசிக் கோரை குப்பமணி குமிட்டிக்கீரை தும்பை நெருஞ்சி ஆடுதின்னாப் பாலை நாயுருவி எல்லாம் எங்களுக்கும்தான் இந்த பூமியில சொந்தம்ன்னு ஏகத்துக்கும் மொளைச்சுக் கெடக்க சாரணத்தி அடைச்சுக் கெடக்கு சரஞ்சரமாக கொடியோடி.

ஒரு கையில பசுமாட்டப் பிடிச்சு மேய விட்டுக்கிட்டே குத்துக்கல்லு மேல ஒக்காந்து யோசிக்கிறா கருவாச்சி.

ஆத்தா வெதமட்டுந்தான் வெதச்சா... எங்கிட்டிருந்து வந்திச்சு களை? களைக்கு ஏது வெத? பூமியும் பொழப்பும் ஒண்ணுதான் போலருக்கு.

நன்மையத்தான் வெதைக்கிறோம். கூடவே தீமையும் மொளைக்குது. தென வெதச்சவன் தெனைய மட்டுமே அறுக்குறதில்லை; களையையும் சேத்துத்தான். வெதைச்சு மொளைக்கிறது மதி. வெதைக்காம மொளைக்கிறது விதி.

களையைக் கொத்தெடுத்துச் சுரண்டி எறியிற மாதிரி விதிய மதியால வெல்லலாமா இல்லையா? பாப்போம். செயிச்சா சந்தோசம்.... தோத்தா அனுபவம். பாத்திருவோம்.

கார்த்திகை மாசம் ஏச்சாலும் களையெடுப்பு மழை ஏய்க்காதப்பா ஊர்ல சொல்லி அலையுங்க பெருசுங்க. எழுவது எம்பது வருசமா ஆகாயத்தையும் பூமியையும் பாத்துப் பழகுன கண்ணுக பொய் சொல்லுமா?



பூவாளி மாதிரி சிந்திச் செதறி விழுந்திருச்சு புரட்டாசி மழை. தூர் நனைய இல்லாட்டியும் வேர் நனைய.

தோல்ல கொத்து வச்சு தூக்குச் சட்டி கையில புடிச்சு தலையில முண்டுபோட்டு ஊற வச்ச கம்பரிசியோ சாம அரிசியோ வாயில அள்ளிப் போட்டுக்கிட்டு ஊற மென்டுக்கிட்டு தெசைக்கு அம்பது அறுவது ஆளாக போறாக பொம்பளை ஆளுக.

அப்ப... ஊருக்குள்ள காடு கரை கல்ல அங்கங்க ஊடுருவி வாரனுங்க. கட்டையன் ஆளுக.

ஏ மாயாக்கா களையெடுக்க ஒனக்குச் சம்பளம் எம்புட்டு?

அரரூவா.

களையெடுக்காம இருக்கச் சம்பளம் முக்காருவா போகாத கருவாச்சி.

காட்டுக்கு ஒன் ஆளுகளையும் போக விடாத.

மாயக்கா வெல போயிட்டா.

இந்தப் பாரு மொண்டியம்மா கருவாச்சிக் காட்டுக்குக் களையெடுக்கப் போறதாயிருந்தாப் போ.

அப்பறம் எங்க காட்டுக்கோ எங்க பங்காளிக காட்டுக்கோ ஆயுசு பரியந்தம் வேலைக்குக் கூப்பிட மாட்டோம். யோசிச்சுக் கம்மா. மூணு குறுக்கம் முக்கியமா.. முப்பது குறுக்கம் முக்கியமா..?

மொண்டியம்மா மெரண்டு போனா.

பணம் பயம் ரெண்டுக்குந்தான வெவரமறியாத மக்க பணிஞ்சு பாழாப் போறது.

விடி..ய்யப் புலம்பல்ல கூடிட்டா பெரியமூக்கி.

களையெடுக்க நாதியில்லயே... என் காடு போச்சே.. வெதச்சது போச்சே. மகள மாடாக்கி வம்பாடு பட்டு உழுத காடு முழிச்சிருக்க முழியத் தோண்டுன மாதிரி மூளியாப் போயிரும் போலருக்கே.

ஏண்டி கருவாச்சி.... என்னைக்கும் இல்லாத ஒறக்கம் இன்னைக்கு என்னாடி? எங்க இருக்கவ...?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதியான தேர்தல் நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பௌத்த பீடங்கள் கோரிக்கை

**ஜனாதிபதித் தேர்தல் எவ்வித வன்முறைகள், அச்சமற்ற, சேதங்களற்ற வகையில் அமைதியானதும் சுதந்திரமானதும் நீதி நேர்மையாகவும் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரி கண்டி மல்வத்த அஸ்கிரிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கூட்டாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிற்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

மல்வத்த மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல-அஸ்திரிய மகா நாயக்க தேரர், உடுகம ஸ்ரீபுத்ரகித்த ஆகிய இருவரும் கையெழுத்திட்டு நேற்றுஅனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

நாட்டின் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் நாட்டில் வன்முறைகள் அற்ற அமைதியான தேர்தலை நடத்தி நாட்டின் கௌரவத்தை பாதுகாக்க முன் வர வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

ஆதிகாலம் தொட்டு நாட்டின் நலன் கருதி மகா சங்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள நியதிகளுக்கமைய நாட்டு மக்களின் நலன் கருதி சிறந்த நற்பிரஜைகளாக திகழ வேண்டும். சமாதானம் சகவாழ்வு சுதந்திரமாக ஐக்கியமாக வாழ வேண்டும் என்ற வழிகாட்டலுக்கமையவே அபிலாஷைகளுடன் இவ்வேண்டுகோளை விடுக்கின்றோம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தாங்கள் மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் ஓரளவு சாதாரணமாகவும் பக்க சார்பின்றியும் நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

இதேபோன்று நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை மிக கவனத்தில் கொண்டு ஜனநாயக அடிப்படையிலான தேர்தலாக நடைபெறவும் ஜனநாயக ரீதியில் சாதாரண சுதந்திரமான தேர்தலாக நடைபெறவும் உலக நாடுகளில் வாழ்கின்ற மக்களின் நல்லெண்ணத்திற்கும் நம்பிக்கைக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமாக அமைய வேண்டுமென கோரி இவ்வேண்டுகோளை விடுப்பதாக கேட்டுக்கொள்கின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

இக்கடிதத்தின் பிரதி கண்டி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மகிந்த வெளியேறாவிட்டால் மாற்று நடவடிக்கையுள்ளது

## சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்ததும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியை விட்டு வெளியேறாது போனால் மாற்று நடவடிக்கை ஒன்றை எதிரணி திட்டமிட்டுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா- குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த திட்டம் என்ன என்பதை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள தேர்தல் முறைகேடுகள் மற்றும் வன்முறைகள் குறித்து தமக்கு அறிக்கைகள் வந்து கொண்டிருப்பதாக சந்திரிகா கூறினார்.

எனினும் இதனை எதிர்கொள்ள எதிரணி தயாராகவே உள்ளது என்று சந்திரிகா தெரிவித்தார்.

இதேவேளை 2004ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை தொடர்பில் தாம் வருத்தப்படுவதாக சந்திரிகா கூறினார்.

அதுவே அவர் ஜனாதிபதியாக வர வழிவகுத்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில் தமிழ் புலம் பெயர்வாளர்களுடன் தொடர்புகள் குறித்த தகவலையும் அவர் மறுத்தார். (இ-5)

# கணக்கு பிழைத்து விட்டது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

எதிர்க்கட்சிகளின் கணக்குகள் பிழைத்து விட்டன என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ளப் போகும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் ஊகங்கள் வெளியிடப்பட்டு வந்தன.

பல்வேறு புள்ளி விபரத் தகவல்கள் வெளியிடப்பட்டு வந்தன.

தேர்தல் பிரசார காலம் முடிவடையும் வரையில் இவ்வாறான தகவல்கள் வெளியிடப்பட்டு வந்தன.

ஜனாதிபதி தொடர்பில் பொய்யான தகவல்களையும் சேறு பூசல்களையும் எதிர்க்கட்சிகள் வெளியிட்டு வந்தன.

எனினும் தாய் நாட்டை நேசிக்கும் மக்கள் இவற்றை கருத்திற் கொள்ளாது ஜனாதிபதி மகிந்தவின் வெற்றியை உறுதி செய்வார்கள.

உத்தியோகபூர்வ தேர்தல் பிரசாரக் காலம் முடிவடைந்ததன் பின்னரும் இணையம் ஊடாக, பேஸ்புக் ஊடாக, குறுந்தகவல் ஊடாக பிரசாரம் முன்னெடுக்கப்படலாம்.

எதிர்க்கட்சிகள் அதிகார மோகத்தில் செய்வது அறியாது இவ்வாறான காரியங்களில் ஈடுபட்டு வருகின்றன.

எனினும், 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டி இவர்களுக்கு நல்லதொரு பதிலை அளிப்பார் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# ஆல்

Botanical Name- Ficus benghalensis
Family- Moraceae
Engl-Banyan tree
Sinh- Nuga





எல்லா இடங்களிலும் வளர்கிறது. இதன் பழத்தை உண்ணும் காக்கையின் எச்சத்தில் இதன் விதைகள் இருக்கும். அவை பிற மரங்களின் மேலே முளைத்து அல்லது பிறமரங்களைத் தழுவி வளருவதும் உண்டு. தனியிலை, பளபளப்பானது, தடித்தது, முட்டை வடிவானது. இலைக்குருத்தை மூடி இரு இலைச் செதில்கள் உள. இலைக்கோணத்தில் ஒன்று முதல் இரண்டு அங்குல உருண்டை வடிவான பசிய இளங்காயின் உள்ளிடத்தே சுவர்களில் பல பூக்கள் உண்டாகும். இதுவே இதன் பூவிணராகும்.புல்லியும்அல்லியும்இணைந்து உள்ளன. இதன் ரிசப் ரக்கில் (Receptacle) முதிர்ந்து பசிய காயாகி பின் செந்நிறமான கனியாகும். இதன் விதைகளில் கரு வளைந்திருக்கும். இரு சமமான வித்திலைகள் உள்ளன.

ஆலமரத்தின்பூக்களைக்கொண்டது இதன் இளங்காயாகும். இது உருண்டை வடிவானது. சதைப் பற்றுள்ளது. உட்கூடு உடையது. உட்கூட்டின் ஓரங்களில் மலர்கள் உண்டாகும்.

மலர்களில் மகரந்தச் சேர்க்கை நிகழ்ந்தபின், இக்காய்கள் முதிர்ந்து பழமாகும். இங்ஙனம் மலர்களை அகத்தே கொண்டிருக்கும். ஆலம்ரங்களைச் சித்த மருத்துவத்தில் கோளி ஆலம் என்றும் கூறுவர்.

5 ஆலம் இலைத்துளிர்களை எடுத்து அதனுடன் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை ஊறவைத்து இரண்டையும் சேர்த்தரைத்து அதிகாலையில் சாப்பிட்டு 200 மில்லி காய்ச்சிய பசுவின் பால் அருந்திவர வெண்குட்ட நோய் நீங்கும்.

ஆலம் துளிர் இலைகள் 5 எடுத்து அத்துடன் அரை தேக்கரண்டி சீரகம். 25 மில்லி கிராம் மஞ்சள் சேர்த்தரைத்து அதை பசு வெண்ணெய்யில் குழைத்து தொடர்ந்து 11 நாட்கள் சாப்பிட வாய்ப்புண், வயிற்றுப்புண்,தொண்டைப்புண் ஆகியன நீங்கும்.

ஆலம் பட்டைகளை சேகரித்து சிறு துண்டுகளாக்கி உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு காலை மாலை வெந்நீரில் உட்கொள்ள நீரிழிவு நீங்கும்.

உலர்ந்த ஆல இலை அரை கிலோ, 100 கிராம் வெந்தயம், 100 கிராம் நாவல் விதை, 100 கிராம் நெல்லிக்காய், 100 கிராம் மஞ்சள், 50 கிராம் படிகார பற்பம் இவையனைத்தையும் தூள் செய்து கலந்து கொள்ளவும்.

இதில் இரண்டு வீதம், காலையும் இரவும் உணவுக்குமுன் சாப்பிட்டு வர பகவான் கிருபையினால் நீரிழிவு நோய் குணமாகும்.

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

என்னும் பழமொழி ஆலமரத்தின் சிறப்பினை உணர்த்துகின்றது. ஆலங்குச்சியினால் பற்களைத் துலக்கிப் பாருங்கள்.

மேலும் நாக்குவெடிப்பு, பல் ஆட்டம், பல் ஈறுகளில் இரத்தம் வடிதல், வாய் நாற்றம் போன்றவை ஆலங்குச்சியால் பல்துலக்கிவர தீரும். ஆலங்குச்சியின் சாரம் நம் அடிநாதம் வரை பாய்ந்து நாம் பேசும் சொற்களை சுத்தமாக்கும்.

ஆலம்பாலை வெடிப்புள்ள பகுதிகளில் போட்டுவர கால்வெடிப்பு குணமாகும். ஆலம்பாலை உள்ளுக்கு ஒரு ஸ்பூன் அளவில் சாப்பிட்டு வந்தாலும் கால்வெடிப்பு குணமாகும். ஆலம்பாலை சாப்பிட்டுவர உடல் இறுகி தேஜஸ் உண்டாகும்.

அரை லீற்றர் ஆலம்பால் எடுத்து அதில் 100 கிராம் வெந்தயம், 100 கிராம் மஞ்சள், 100 கிராம் சுக்கு ஆகிய மூன்றையும் ஊறவைத்து பின்னர் அதை பாவனை செய்து உலர்த்தித் தூள் செய்து கொள்ளவும். தொடர்ந்து இதைக் காலையும் மாலையும் 48 நாட்கள் சாப்பிட்டு வர மூட்டுவலிகள், மூட்டு தேய்மானம், மூட்டு வீக்கம், பக்கவாதம் போன்ற நோய்கள் நீங்கும். இது எமது கை கண்ட அனுபவ முறையாகும்.

ஆலை இலையில் பழுத்த இலைகளைச் சேகரித்து சுட்டுச் சாம்பலாக்கி சாம்பலை நல்லெண்ணெய்யில் குழைத்து படை, சொறி, கரப்பான் நோய்களுக்கு போட அவை மறையும்.

ஆலம் விதை,அரசம்விதை, நெருஞ்சில்,சந்தனம், கோரைக் கிழங்கு, பறங்கிப்பட்டை ஆகியவற்றை வகைக்கு 200 கிராம் எடுத்து பசும்பால் விட்டு அவித்து உலர்த்தி தூள் செய்து கொள்ளவும்.

இதைப் பாலுடன் கலந்து இருவேளை உண்டுவர உயிரணுக்கள் விருத்தியாகி உங்கள் சந்ததியும் விருத்தியாகும். இத்தூளுடன் சம அளவு ஜாதிக்காய் தூள் சேர்த்து சாப்பிட அளவில்லா இன்பம் சேர்க்கையில் உண்டாகும்.

ஆலம்பட்டையை இடித்துத் தூளாக்கி கசாயமிட்டு வாய் கொப்பளித்துவர வாய்ப்புண், வாய் நாற்றம், நாக்குப்புண், ஈறுப்புண் போன்றவை குணமாகும். ஆறாத புண்கள் ஆற்றவும் இக்கசாயத்தை உபயோகிக்கலாம்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


அறுகம்கட்டைச் சமூலத்தை பொடித்துச் சூரணம் செய்து அதற்கெனவே குறிக்கப்பட்ட அளவிற்கேற்ப ஆலம் பாலைச்சேர்த்து கருக்கிலே ஆறிப்போகாதவாறு தயாரித்து 48 நாட்கள் 2 கிராம் அளவு சாப்பிட வெண்குட்டம், பாண்டு முதலிய தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியை உருவாக்கியிருப்பதே எமக்குக் கிடைத்த பெரிய வெற்றி

## சோபித தேரர் தெரிவிப்பு

**ஒரு குடும்ப அரசியலுக்கு எதிராக சகல இனத் தலைவர்களையும் ஒன்றிணைத்து பொது எதிரணியினை உருவாக்கியிருப்பதே எமக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இதுவே நாட்டின் ஜனநாயகத்தை வென்றெடுக்க முதற்படியென தெரிவித்த கோட்டை நாக விகாரையின் விஹாராதிபதியும் சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் இணைப் பாளருமான மாதுலுவாவே சோபித தேரர்,தீவிர வாதிகள் குடிகொண்டிருப்பது அரசுக்குள் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது எதிரணியின் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தலைவரை தெரிவு செய்ய இன்னமும் இருப்பது ஒரு நாளே. இந்நிலையில் அனைவரும் எதிர்பார்ப்பது அமைதியானதொரு, நியாயமானதொரு தேர்தலையே. இதனையே நாமும் வலியுறுத்துகின்றோம். எனினும் ஜனாதிபதி தனது முழுமையான அதிகாரத்துடன் களத்தில் இறங்கியுள்ளார். ஊடகங்களையும் அரச நிறுவனங்களையும் தனது பக்கம் ஈர்த்து தனது அடக்குமுறை அரசியலை மேற்கொள்கிறார். பொலிஸாரும் இராணுவமும் அரசின் பக்கம் செல்கின்றன. தேர்தல் சட்டம் மீறப்பட்டு இவர்களின் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு எம்மை தவறாக சித்திரிக்கின்றனர். எனினும் அரசுக்குள் இருக்கும் தீவிரவாதிகள் இவர்களின் கண்களுக்கு தெரியவில்லை. இது மக்களுக்கு தெரியும். இம்முறை தேர்தலில் என்ன செய்தாலும் வெற்றி பொது எதிரணியின் பக்கமே இருக்கும். நாம் இன்று அனைவரையும் ஒன்றிணைத்து விட்டோம்.சிங்கள, தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமை அனைத்தும் ஒன்றிணைந்து விட்டது. இது எமக்கு கிடைத்த மிகப் பெரிய வெறறியே.

எனவே எதிர்வரும ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகத்தை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம எனவும அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வன்முறை தொடர்ந்தால் மறுவாக்குப்பதிவு

## தேசப்பிரிய எச்சரிக்கை

தேர்தல் வன்முறைகள் தொடருமானால் தாம் மறுவாக்கு பதிவுக்கு உத்தரவிடவேண்டியேற்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் எச்சரித்துள்ளார். கடந்த சில தினங்களில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் குறித்து கருத்துரைக்கையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இவ்வாறான வன்முறைகள், தேர்தல் சட்டத்தை மீறும் செயல்கள் என்று மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார். வாக்காளர்களை அச்சுறுத்தல், வாக்காளர்களை தடுத்தல், வாக்குசீட்டுகளை சேகரித்தல் போன்ற சம்பவங்கள் தேர்தல் மீறல் செயல்களாகும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்களிப்புக்களின் போது இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். பொலிஸாரே முழுமையாக கடமைகளில் ஈடுபடுவர் என்றும் தேசப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 |
| தக்காளி | 130 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 100-110 | 120 | 140 |
| கரட் | 160 | 200 | 200 |
| பூசணி | 50 | 50 | 160 |
| புடோல் | 140 | — | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 350 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 240 | 240 | 80 |
| லீக்ஸ் | 300 | 240 | 200 |
| பீற்றூட் | 220 | — | 200 |
| கறிமிளகாய் | 400 | 300 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — |
| போஞ்சி | 350 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 150 | 140 |
| கீரை - 1 பிடி | 40 | 60 | 40 |
| தேசிக்காய் | 50 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 120 | 100 | 130 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 244

Search for people, places and things   Nagendram   Home

சிவா சக்தி


**பிறந்தநாள் என்றால் என்ன?**

இந்த ஒரு கேள்வி BBC வேர்ல்ட் நிறுவனத்தார் உலகில் உள்ள பெரிய மனிதர்கள் எல்லோரிடமும் கேட்டனர்.அதில் மிக சிறந்த பதிலாக தேர்வு செய்யப்பட்டது யாருடைய பதில் தெரியுமா? அப்துல் கலாம் அவர்களின் பதில் தான். அது என்ன தெரியுமா !!?




**வாழ்க்கையில் அந்த ஒரே ஒரு நாள் உன்னுடைய அழுகை குரல் கேட்டு உன் தாய் சிரிப்பது...**

சுந்தரலிங்கம் கணேசமூர்த்தி




சியாமினி சியா

டாக்டர் : ஏங்க, உங்க மனைவியை நாய் கடித்ததே! முதல் உதவி என்ன செஞ்சீங்க?





கணவன் : அந்த நாய்க்கு ஒரு பிரியாணி வாங்கி போட்டேன்!!

எம்சி தின்னு

**"கணனிப் பொறிக்கும் எலிப் பொறிக்கும் என்ன வித்தியாசம்?"**

**"கணனிப் பொறியில் மவுஸ் வெளியிலே இருக்கும்,"**





**"எலிப் பொறியில் மவுஸ் உள்ளே இருக்கும்"**

ஸ்ரீ ஸ்ரீகிருஸ்ணா



பேரன் : ஏன் பாட்டி என் மேல இவ்வளவு பாசமா இருக்க?

பாட்டி : நீ தாண்டா பேராண்டி நாளைக்கு எனக்கு கொள்ளி போடணும்!

பேரன் : போ பாட்டி! எனக்கு நாளைக்கு ஸ்கூல் இருக்கு! இன்னைக்கு கொள்ளி வைச்சிடவா?

தயா தயானந்தி




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் இந்தியப் பாதிப்பு!

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லா தளவுக்கு இந்தியாவின் பாதிப்பை இந்த முறை அதிகளவில் உணரக் கூடியதாக இருக்கிறது.

இந்தத் தேர்தலில் 19 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் வெற்றிக்காக போட்டியிடுகின்ற இரண்டு பிரதான வேட்பாளர்களும் இந்தியாவின் தாக்கங்களுக்கு உடன்பட்டிருப்பதை நடைமுறை ரீதியாக அவதானிக்க முடிகிறது.

தமது வெற்றிக்காக இந்தியத் தொடர்புகளையும் செல்வாக்கையும் உத்திகளையும் பயன்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு இணையாக எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் போட்டி போடுபவராகவே இருக்கிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த டிசம்பர் 8 ஆம் திகதி வேட்புடி மனுவைத் தாக்கல் செய்த பின்னர், உடனடியாக கண்டிக்கோ அல்லது அநுராதபுரத்துக்கோ செல்லவில்லை.

இவையிரண்டும்தான் பௌத்த சிங்கள மக்களால் இலங்கையில் புனித நகரங்களாக கொண்டாடப்படுபவை.

அநுராதபுரத்தில் சங்கமித்தை கொணடு வந்த வெள்ளரச மரம் பௌத்த மக்களின் வழிபாட்டுக்குரிய இடமாக இருந்து வருகிறது. கண்டியில் புத்தபிரானின் பற்கள் எனக் கருதப்படும் புனிதப் பொருட்கள் தலதா மாளிகையில் தரிசனத்துக்காக வைக்கப்பட்டுள்ளன.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஆர். பிரேமதாச தலதா மாளிகையின் மாடத்தில் இருந்துதான் பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருந்தார்.

1996 ஆம் ஆண்டு ரிவிரச நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்ட பின்னர் அந்த வெற்றிச் செய்தியை தலதா மாளிகையின் மாடத்தில் வைத்துத்தான், அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்திருந்தார்.

சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவருமே கண்டியில் அல்லது அநுராதபுரத்தில் வழிபாடுகளை நடத்திவிட்டுத்தான் எந்தக் காரியத்தையும் மேற்கொள்வது வழக்கம். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதற்கு முரணான வகையில் வேட்பு மனுத் தாக்கல் செய்தவுடன் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து தனது பரி வாரங்களுடன் ரேணிகுண்டா விமான நிலையத்துக்கு பறந்து சென்றார்.

அங்கிருந்து திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானைத் தரிசனம் செய்துவிட்டு வந்த பின்னரே கண்டிக்கும் அநுராதபுரத்துக்கும் சென்று வழிபாடுகளை நடத்தியிருந்தார்.

சிங்கள் பௌத்த அரசியல்வாதிகளின் வழக்கமான நடைமுறைகளுக்கு அப்பால் திருப்பதிக்குச் சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச செய்த வழிபாடுகூட இந்தியச் சார்பு நிலையைத்தான் வெளிப்படுத்தியது.

இந்திய ஆலயங்களின் மீது அணமைக்காலமாக இலங்கை அரசியல் தலைவர்களுக்கு ஒரு ஈர்ப்பு வந்திருக்கிறது.



இந்திய ஜோதிஜடர்களை நம்பும் அவர்களின் மாந்திரீக சக்திகளை நம்பும் போக்கும் அதிகமாகவே உள்ளது.

ஜனாதிபதி தனது கையில் வைத்திருக்கும் வஜ்ரம் என்ற பொருள்கூட இந்திய மாந்திரீகர்களினால் வழங்கப்பட்ட ஒன்று என்றே கூறப்படுகிறது. பலத்தைக் கொடுக்கும் ஆயுதமாக நம்பியே ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் சில வேளைகளில் அவரது மகன் நாமல் ராஜபக்சவும் அதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தேர்தல் பிரசாரங்களின் போதுகூட இந்த வஜ்ரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கையில் இருப்பதைக் காண முடிகிறது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஹொலோகிராம் எனப்படும் முப்பரிமாண தொழில் நுட்பத்தையும் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தி வருகிறார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிதான் இந்தியாவில் தேர்தல் பிரசாரங்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியவர்.

குஜராத் முதல்வராக இருந்த போதே அவர் இந்த முப்பரிமாணத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

ஒரு இடத்தில் இருந்து கொண்டு பல பிரசார மேடைகளில் நேரடியாகத் தோன்றுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி இந்தத் தொழில் நுட்பத்தின் மூலம் பிரசாரம் செய்ய முடியும்.

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் இந்தத் தொழில்நுட்பம் நரேந்திர மோடிக்குப் பெரிதும் கைகொடுத்திருந்தது.

அதே தொழில்நுட்பத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முதல் முறையாக இலங்கையில் அறிமுகம் செய்திருந்தார்.

இந்தியப் பிரதமரிடம் இருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தத் தேர்தலுக்காகப பெற்றுக்கொண்ட இன்னொரு விடயம் நரேந்திர மோடியின் சமூக வலைத்தள பிரசாரங்களுக்குப் பொறுப்பான அரவிந்த் குப்தா என்ற தகவல் தொழில்நுட்ப நிபுணரை பிரசாரத்துக்கு அமர்த்தியதாகும்.

அரவிந்த் குப்தாவே பா.ஜ.க வின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் தலைவராக இருக்கிறார். அவரே நரேந்திர மோடியின் தேர்தல் வெற்றிக்கு சமூக வலைத்தளங்களை வெற்றிகரமாக பயன்படுத்தியவர். அரவிந்த குப்தா மேலும் நான்கு பேருடன் கொழும்பு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான வலைத்தளப் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இவையெல்லாம் போதாதென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்காக பிரசாரம் செய்வதற்காக பிரபல ஹிந்தி நடிகர் சல்மான் கானும் நடிகை ஜக்குலின் பெர்னாண்டஸூம் கூட வரவழைக்கப்பட்டனர். இந்தியாவில் திரை நட்சத்திரங்களைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரங்கள் மேற் கொள்ளப்படுவது வழக்கம்..

இலங்கையிலும்கூட மாலினி பொன்சேகா, அனார்கலி ஆகாஷா, ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட பல சிங்களத் திரையுலகப் பிரபலங்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதுடன் சிலர் தேர்தல் பிரசாரங்களுக்கும் உதவி வருகின்றனர். ஆனால், முதல் முறையாக இந்திய நடிகர் ஒருவரை அழைத்து வந்து தேர்தலுக்காக பயன்படுததி இருக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. இது சர்ச்சைக்குரிய ஒரு விடயமும்கூட.

கொழும்பு அரசியல் அரங்கில் மட்டுமன்றி இந்திய அரசியலிலும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது சல்மான் கானின் தேர்தல் பிரசாரம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இம் முறை தனியே போர் வெற்றியை மட்டும் நம்பி பயனில்லை என்பதால்தான் பல்வேறு இந்திய யுத்திகளை கையாண்டு வெற்றி பெறுவதற்கு முயற்சிக்கிறார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மட் டுமே இந்திய உத்திகளைப் பயன் படுத்துகிறார் என்றில்லை. அவருக்குப் போட்டியாக எதிரணியால் களமிறக்கப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவும்கூட இந்திய அரசியலின் பாதிப்பிலிருந்து தப்பிக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சோதிட நம்பிக்கைகளை கிண்டல் செய்த மைத்திரிபால சிறிசேனவும் அவரைப் போலவே வஜ்ரத்தைக் கையில் வைத்துக் கொண்டு தேர்தல் பிரசாரத்தில் இறங்கியிருந்தார்.

அதைவிடுத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாணியில் உடையணிந்து கொள்ளத் தொடங்கியிருக்கிறார் மைத்திரிபால சிறிசேன.

கண்டியில் முதல்முறையாக நரேந்திர மோடியைப் போன்று கோர்ட் ஒன்றை அணியத் தொடங்கிய மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து அதையே பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்.

நரேந்திர மோடியை பின்பற்றுவதாக ஆளும் கட்சியினர் செய்த விமர்சனங் களைப் பொருட்படுத்தாமல் அந்த உடையை அவர் தொடர்ந்து அணிய ஆரம்பித்துள்ளார். இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்கள அரசியல் தலைவர்கள் யாரும் இதுபோன்ற உடையை அணிந்ததில்லை.

இதுவரையில்லாத ஒரு தலைவராக தன்னை காட்டிக்கொள்ள மைத்திரிபால சிறிசேன் முனைகிறாரா அல்லது நரேந்திர மோடியின் பாணி வெற்றி கண்டது என்பதால் அதனைப் பின்பற்ற முனைகிறாரா என்று தெரியவிலலை.

இந்தியாவைப் பொறுத்தவரையில் நரேந்திர மோடியின் பாணி வெற்றியளித்துள்ளது. இதற்கு முன்னரும் இந்தியத் தலைவர்கள் பலரும் இதுபோன்ற உடையை அணிந்திருந்தாலும் நரேந்திர மோடியின் அடையாளமாகவே இது மாறியிருக்கிறது. அதுபோல மைத்திரிபாலவின் அடையாளமாகவும் இந்தியப் பிரதமரின் கோர்ட் மாறிவருகிறது.

இந்திய நடைமுறைகளும் வழக்கங்களும் இந்தத் தேர்தலில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இதில் அதிகளவில் இந்தியச் சார்பு நிலையை வெளிப்படுத்தும் மகிந்த ராஜபக்சவோ சீனாவின் நிழலில் ஆட்சியை நடத்த விரும்புபவர்.

ஆனால் மைத்திரிபால சிறிசேனவோ இந்தியாவின் நிழலில் ஆட்சியை நடத்த விரும்புகிறார். இவர்களில் யாருக்கு நாட்டை ஆளும் வாய்ப்புக் கிடைக்கப் போகிறது?

இன்னும் இரு நாட்களில் முடிவு தெரிந்துவிடும்!


-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி ஆட்சியின் கீழ்

# பயங்கரவாதம் தலைதூக்காது

## சரத் பொன்சேகா உறுதி



(கொழும்பு)

**எதிரணியின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் அமையவுள்ள புதிய ஆட்சியில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கக்கூடிய சாத்தியங்கள் கிடையாது என ஜனநாயக கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எவ்வித சட்டவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டாம் என படை வீரர்களிடம் கோருகின்றேன். அரசியல் அடிவருடிகளான சில உயர் அதிகாரிகள் தேர்தல் விதிகளை மீறுமாறு உத்தரவிட்டாலும் படையினர் அதனை ஏற்கக் கூடாது. நாட்டுக்காக பல்வேறு தியாகங்களை செய்த நான், படையினரிடமிருந்து அர்ப்பணிப்பை எதிர்பார்க்கின்றேன். நாட்டின் இறையாண்மை எப்போதும் இருக்க வேண்டுமென நான் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் கோரி வருகின்றேன்.

2005 ஆம் ஆண்டு மகிந்த சிந்தனை தேர்தல் விஞ்ஞாபனத்தில் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றே மகிந்த தெரிவித்தார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தின் 29 ஆம் பக்கத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. எமில்காந்தன் என்ற புலிகளுடன் தொடர்புகளைப் பேணிய நபருக்கு பணம் வழங்கி வடக்கு மக்கள் வாக்களிப்பில் பங்கேற்பதனை ஜனாதிபதி தடுத்து நிறுத்தினார். முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களான குமரன் பத்மநாதன் மற்றும் கருணா அம்மான் போன்றவர்கள் நல்லவர்கள் என அரசாங்கம் கூறிவருகின்றது. புலிகளை தோற்கடிக்க பல்வேறு அர்ப்பணிப்புக்களுடன் போராடியிருந்தேன் என சரத்பொன்சேகா நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

# நாட்டை பிளவுபடுத்த முயலும் தரப்புக்களை தண்டிக்காமல்விட்டது அரசினது தவறுதான்

## அமைச்சர் டலஸ் மனவருத்தம்

நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கும் தரப்புக்களை தண்டிக்காமல் விட்டது எமது தவறே என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இறுதி தேர்தல் பிரசார செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சில வெளிநாட்டுச் சக்திகளும் உள்நாட்டு சக்திகளும் இணைந்து மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்யப்பாடுபடுகின்றன.

குறிப்பாக மூன்று வெளிநாட்டு சக்திகள் ஜனாதிபதியை தோற்கடிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றியின் பின்னர் இந்த சக்திகள் பற்றி வெளிச்சம் போடப்படுவதுடன் தண்டிக்கப்படுவர். பணம் கொடுத்து அரசாங்கத்தை விட்டு அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்க்கட்சிக்கு தாவச் செய்தவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டை பிளவுபடுத்தவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வழங்கிய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமை எமது பிழையேயாகும். நான் அதனை பகிரங்கமாகவே ஒப்புக்கொள்கின்றேன்.

நாடாளுமன்றிற்கு அறிவிக்காமல் நாட்டை பிளவுபடுத்தும் வகையில் ஒப்பந்தம் கைச்சாத்திட்டவர்கள், நாட்டின் அரசியல் தலைவர்களை படுகொலை செய்த சக்திகள்மறைமுகமாக படையினரை கொலை செய்ய உத்தரவிட்டவர்களுக்கு எதிராக உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்காமை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்த பிழை என்பதனை ஒப்புக்கொள் கின்றேன்.

எதிர்வரும் காலத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் கிரமமான விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பகற்கனவு காண்கின்றதாம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண கண்டுபிடிப்பு

(கொழும்பு)

எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து வரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தங்களது அரசியலை தக்க வைத்துக்கொள்ளலாம் என பகற்கனவு காண்கின்றனர் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

எட்டியாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தனது ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணவில்லையென தமிழ்க் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். அரசாங்கம் பாராளுமன்ற தெரிவு குழுவில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கையை முன்வைக்குமாறு பல தடவை தமிழ்க் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்தும் அவர்கள் அதனை புறக்கணித்தனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு அரசாங்கத்திலிருந்து வெளியேறி பொதுவேட்பாளராக போட்டியிடும் மைத்திரிபாலவுக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் ஆதரவு வழங்க முன் வந்திருப்பது அவர் எவ்வாறு இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க தமிழ்க் கூட்டமைப்பினர் மேற்கொண்ட தீர்மானத்தால் அக்கட்சியில் உள்ள சில உறுப்பினர்கள் தங்களது அதிருப்தியை பகிரங்கமாக தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பில் பூகம்பம் வெடிக்க ஆரம்பித்து விட்டது. வடபகுதி மக்கள் இன்று நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். பெற்றுக்கொண்ட நிம்மதியை இழக்க தயாரில்லை. அதனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இம்முறை பெரும்வாரியான வாக்குகள் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தோட்ட தொழிலாளர்கள் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் மக்களின் துயர் நீக்கப்பட்டது.

மீண்டும் நாடு இருண்ட யுகத்திற்கு செல்லக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு தான் எமது கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## அசோகச்சக்கரவர்த்தி

ஒருநாள் அசோக மன்னர் உலா வந்து கொண்டிருக்கிறார். அவர் அருகில் ஆலோசகர்கள் அனைவரும் படைசூழ வந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தச் சமயத்தில் எதிரில் புத்த பிக்கு ஒருவர் வந்தார்.

புத்த பிக்குவைப் பார்த்ததும் அசோக மன்னன் ஓடிப்போய் அவரது காலில் விழுந்து வணங்கினார்.

அவ்வேளையில் அசோக மன்னரின் தலை அந்த பௌத்த துறவியின் பாதத்திற்பட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட அமைச்சருக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர் மிகவும் மனம் வருந்தினார்.

" நமது அசோகச்சக்கரவர்த்தி எவ்வளவு பெரியவர்! அவருடைய தலை ஒரு சந்நியாசியின் பாதத்தில் படுவதா? " என்று நினைத்து அமைச்சர் மிகவும் கவலைப்பட்டார்.

அரண்மனை திரும்பியதும் அமைச்சர் மெதுவாக பேச ஆரம்பித்தார்.

" அரசே! நான் மிகவும் வருத்தப்படுகின்றேன்! என்றார். எதற்கு நீங்கள் வருத்தப்படுகின்றீர்கள்?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

" அசோகச்சக்கரவர்த்தியின் சிரம் மிகவும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஒன்று. அது ஒரு சந்நியாசியின் காலில் படுவதா " என்று அமைச்சர் வினவினார்.

அதற்கு மாமன்னர் எதுவும் கூறாமல் புன்னகை செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

அதன்பின்னர் அசோகச்சக்கரவர்த்தி ஒரு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்.

அவர் ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டு எனக்கு மூன்று சிரங்கள்.... அதாவது தலைகள் வேண்டும்! என்று கட்டளை பிறப்பித்தார்.

" முதலில் ஓர் ஆட்டின் தலை... இரண்டாவது ஒரு புலியின் தலை... மூன்றாவது ஒரு மனிதனின் தலை.... இந்த மூன்று தலைகளையும் நீ எங்கிருந்தாவது கொண்டுவா " என்று அரசர் கூறினார்.

அமைச்சர் அதற்கு இசைந்து உடனே புறப்பட்டார்.

அவருக்கு ஆட்டுத்தலை உடனே கிடைத்தது. சிறிது நேரம் செல்ல சிரமப்பட்டு காட்டிலிருந்து ஒரு புலி தலையையும் சேகரித்தார். அவர் அதன் பின்னர் ஒரு சுடுகாட்டிற்குப் போய் ஒரு மனிதத் தலையும் சேகரித்தார்.

இந்த மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு அவர் அரசரிடம் வந்து சேர்ந்தார்.

" அரசே! உங்கள் ஆணைப்படி மூன்று தலைகளையும் கொண்டு வந்திருக்கிறேன்!" என்றார்.

அவற்றைப் பார்த்த அசோக மன்னர் " மிகவும் நல்லது. இப்போது இந்த மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு போய் சந்தையில் விற்றுவிட்டு வாருங்கள் " என்று கூறினார்.

அமைச்சர் மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு சந்தைக்குச் சென்றார்.

சந்தையில் ஆட்டுத்தலையைத் வாங்குவதற்கு பலர் முன்வந்தனர். உடனே அது விற்றுவிட்டது.

அடுத்தபடியாக புலித்தலையை ஒருவர் வாங்கிக் கொண்டார்.

அந்தச் சந்தையில் மனிதத்தலையை மட்டும் வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. அதை எல்லோரும் பார்த்துவிட்டு விலகிச் சென்றார்கள்.

அமைச்சர் அரசரிடம் திரும்பி வந்து " அரசே! இந்தக் தலையை மட்டும் யாரும் வாங்கமாட்டேன் என்கிறார்கள் " என்றார்.

அதைக் கேட்ட அரசர் " சரி... பரவாயில்லை! அதை இனாமாகவே கொடுத்து விடுங்கள் "என்றார்.

அமைச்சர் மறுபடியும் சந்தைக்குச் சென்று இலவசமாகத் தருகிறேன்... இதை வாங்கிக் கொள்ளுங்கள்... என்றார்.

அப்போது அதை யாரும் வாங்குவதற்கு முன்வரவில்லை. எனக்கு வேண்டாம்! என்று சொல்லி எல்லோருமே முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றார்கள் .

அமைச்சர் மறுபடியும் அரண்மனைக்கு திரும்பி வந்து மன்னனிடம் கூறினார்.

அப்போது அசோகச்சக்கரவர்த்தி சொன்னார். அமைச்சரே உயிர் இருக்கும் வரையில் தான் இந்தத் தலைக்கு மதிப்பு உயிர் பிரிந்த பின்னர் அதன் மதிப்பும் போய் விடுகிறது. அதனால் மதிப்பு இருக்கும் போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அவர் புனிதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

பணிவு என்பது வேறு... அடிமைத்தனம் என்பது வேறு... பெரியவர்களைப் பணிவது நமக்குப் பெருமை தரக்கூடிய ஒரு விடயமாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட பலன்கள் 2015

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| செவ்வாய் | புது வருட கிரக நிலை | | குரு (வக்) |
| புதன் சுக்ரன் | | | |
| சூரியன் | சனி | | ராகு |

**குரு மாறியதும் குதூகலம் கூடும்! நல்ல தகவல்களையே நாளும் கேட்க வேண்டுமென்று விரும்பும் துலாம் ராசி அன்பர்களே!**

பிறந்திருக்கும் புத்தாண்டு ஜென்ம குரு விலகி பிறந்திருப்பதால், சிறப்பான பலன்களை வழங்கும் என்றே கருதலாம். அகத்தில் தெளிவோடும், முகத்தில் பொலி வோடும் பணிபுரிந்து முன்னேற்றத்தில் முதற் படிக்குச் செல்லப் போகிறீர்கள். இருந்தாலும் இன்னும் ஏழரைச் சனியில் பாதச் சனியின் ஆதிக்கம் இருக்கிறது.

ஆண்டு தொடங்குவது - சுக்ரனுக்குரிய பரணி நடசத்திரத்தில்தான். சுக்ரன் உங்கள் ராசிநாதனாகவும் விளங்குகிறார். எனவே, இந்த ஆண்டு சுபட்சம் தரும் ஆண்டாகவே அமையப் போகிறது என்று கருதலாம். இந்தப் புத்தாண்டின் தொடக்கத்திலேயே சனிபகவான் விலகியது நன்மைதான். இனி ஏதேனும் ஒரு புதிய துறையில் மனதை செலுத்தி ஒரு பொன்னான வாழ்வை அமைத்துக் கொள்ளப்போகிறீர்கள்.

உங்கள் ராசியின் சின்னம் தராசு. அதற்கு இரண்டு தட்டுக்கள் இருப்பது போல உங்களுக்கும் மனமும் இரண்டு மனமாக இருக்கும். ஒன்று காரியத்தைச் செய்யத் தூண்டும். மற்றொன்று காரியத்தைச் செய்ய மறுக்கும். நீங்கள் எதிர்மறைச சிந்தனைகளை விலக்கிவிட்டு, நேர்மறை சிந்தனையை வளர்த்துக் கொண்டால், ஆர்வத்தோடு செய்யும் செயல்கள் எல்லாம் வெற்றியாகும்.

உங்களுக்கென்று ஒரு சுய ஜாதகம் இருக்கிறது. அதில் சனி இருக்கும் நிலை. அதன் பாதசாரம் அதைப் பார்க்கும் கிரகத்தின் நிலை இவற்றையெல்லாம் அறிந்து கொண்டு, நடப்பு தெசா புத்திக்கேற்ப பலன்களையும் பார்த்து, புத்தாண்டு கிரக நிலைக்குரிய கட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்து, யோகபலம் பெற்ற நாளில் காரியங்களைச் செய்தால், வெற்றிக்கொடி பறக்க வாழ்க்கையை நடத்தலாம். இல்லையேல் உற்றார், உறவினர்களின் பகையைத் தேடிக்கொள்ள வேண்டியது இருக்கும்.

புத்தாண்டு சனிக்குரிய 8 எண் ஆதிக்கத்தில் பிறக்கிறது. எனவே, சனியின் வலிமை உங்கள் ஜாதகத்தில் எப்படியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பிறகு உள்ளூர் சிவாலயத்தில் உள்ள சனிபகவான் சன்னிதிக்குச் சென்று சனி கவசம் பாடி, எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்யுங்கள். உங்களைப் பொறுத்தவரை சனி ஒரு தாக்கும் கிரகம் அல்ல. காக்கும் கிரகம்! - என்பதை அறிந்து கொள்வீர்கள்.

வது அவ்வளவு நல்லதல்ல. 10 இல் குரு வந்தால் பதவியில் மாற்றம் உண்டு என பார்கள. எனவே பதவி மாற்றம், உத்தியோக மாற்றம், இடமாற்றம், இலாகா மாற்றம் ஒரு சிலருக்கு வந்துசேரும்.

பொதுவாக பாதகாதிபதி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது, நற்பலன்களையே கொடுக்கும். உங்கள் ராசிப்படி உத்தியோக அதிபதியாக குரு விளங்குவதால், இதுவரை உத்தியோக அமைப்பு அமையாதவர்களுக்கு இப்பொழுது உன்னதமான உத்தியோகம் கிடைத்து மகிழ்ச்சி அடைவார்கள். உத்தியோகத்தில் இருந்து கொண்டு,



திருப்தியில்லாமல் "வேறு இடத்திற்கு மாறலாமா?" என்று சிந்தித்துக் கொண்டிருந்தவர்களுக்கு தகுதியான இடம் கிடைத்து சந்தோஷப்படுத்தும்.

2 ஆம் இடத்தில் சனி சஞ்சரிப்பது குடும்ப மேன்மையைக் கூட்டும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுபகாரிய நிகழ்வுகள் இப்பொழுது சுறுசுறுப்பாக நடைபெறத் துவங்கும். கடந்த காலத்தில் கட்டடப்பணி பாதியிலேயே நின்றிருக்கலாம். அதைத் தொடர போதிய பொருளாதார வசதியில்லையே என்று நினைத்திருப்பீர்கள்.

இந்த ஆண்டு எந்த ரூபத்திலும் உங்களுக்கு பொருள் வளம் கிடைத்து பாதியிலுள்ள பணியை மீதியும் தொடருவீர்கள். ராசிநாதன் சுக்ரனோடு விரயாதிபதி புதனும், தனாதிபதி செவ்வாயும் இணைந்து சுகஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான்! விரயத்திற்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். வீடு வாங்க வேண்டுமென்றாலும், மாடு வாங்க வேண்டுமென்றாலும் விலையுயர்ந்த பொருட்களை வாங்க வேண்டுமென்றாலும், அதற்கேற்ற தொகை முன்னதாகவே வந்து சேரும். பணத்தை வைத்துக்கொண்டேதான் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதில்லை. காரியத்தைத்தொடங்கிவிட்டால் காசு, பண புழக்கம் தானே வந்து சேரும்.

குறிப்பாக சனியின் ஆதிக்கம் வலுவடையும் இந்த ஆண்டு ஏழரைச் சனியும்


யும், அனுமனையும் வாரந்தோறும் சனிக்கிழமை யன்று வழிபட்டு வந்தால் சீரும் சிறப்பும் மேலோங்கும்.

**குருவின் பார்வைப் பலன்கள்!**

ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக அதன் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. குடும்பம், வாக்கு, தனம், தாய், வாகனம், பயணம், எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகிய ஆதிபத்யங்களைக் கொண்ட வீடுகளை குரு பார்க்கும்பொழுது, அவற்றில் எல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரும். பொதுவாக பணப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் விதத்தில் குருவின் பார்வையிருப்பதால், சிக்கல்களும், சிரமங்களும் தீரும். தக்க விதத்தில் வாழ்க்கைப் பாதை அமையும்.

10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, 2 ஆம் இடத்தில் பதிவதால் இல்லத்தில் அமைதி கூடும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உறவினர் பகை மாறும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களிலிருந்த ஏமாற்றம் அகலும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள்!

4 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் தாய் வழி ஆதரவு பெருகும். சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். அஞ்சல் வழித் தகவல்கள் ஆச்சரியம் அடைய வைக்கும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். 6 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் கடன சுமை குறையும்.




### 5-7-2015- 31-12-2015

இக்காலத்தில் லாப ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். சகாய ஸ்தானாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். தொழிலில் எதிர்பாராத லாபம் கிடைக்கும். வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அடிக்கடி ஊர்மாற்றம் வருவதை புறக்கணித்துவிட்டு, இனி கூட்டாளிகளோடு இணைந்து தொழில் புரிய லாம் என்று முன் வருவீர்கள்.

ராகு-கேது கிரக ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால், முறையாக சர்ப்ப சாந்தி பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில் அனுகூலம் தரும் ஸ்தலங்களில் செய்வதுதான் நல்லது.

குருவின் நேரடிப்பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவது யோகம்தான். சகோதர ஒற்றுமைக்கு வித்திடும். வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்களும், திருமண நிகழ்ச்சிகளும் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்

படும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேருவர். அந்நியதேச யோகம்கூட ஒரு சிலருக்கு வந்து சேரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிக்க இயலும். புதிய ஒப்பந்தங் கள் வந்து சேரும். சொத்து தகராறுகள், நீண்டநாளாக முடிவுக்கு வராத பஞ்சாயத் துக்கள் முடிவுக்கு வரும். அரசுவழி சலுகைகள் கிடைக்கும். வாரிசுக்காக காத்திருப்போருக்கு புத்திரப் பேறும் உண்டு.

**குருவின் வக்ர காலமும், சனியின் வக்ர காலமும்!**

வருட தொடக்கத்தில் வக்ரமாகும் குரு, 14-4-2015 வரை வக்ரம் பெறுகிறது. அதே நேரத்தில் சனிபகவான் 15-3-2015 இல் விருச்சிகத்தில் வக்ரம் பெறுகிறார்.. மேலும் 12.06.2015- 05.09.2015 வரை துலாத்தில் சனி வக்ரம் பெறுகிறார். குருவின் வக்ரம் உங்களுக்கு நன்மைகளை செய்யும் என்றே சொல்லலாம். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கேற்ப பலன் கிடைக்கும். வழக்கில் வெற்றி கிட்டும்.

வாய்தாக்கள் ஓயும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாறுதல் உண்டு. உதிரி வருமானங்கள் பெருகும். சனியின் வக்ரம் உங்களுக்கு நல்லதல்ல. சுகங்களும், சந்தோஷங்களும் தரும் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் வக்ரம் பெறுவதால் பண நெருக்கடி அதிகரிக்கும். குடும்ப செலவு கூடும். மனக் கசப்பு தரும் தகவல்கள் வந்து சேரும்.

**துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

வருடத்தின் முதல் பாதியில் தொழில் மாற்றம், இடமாற்றம், ஊர் மாற்றம் உருவாகலாம். உடல்நலம் சீராகும். உற்றார் உறவினர்கள் பகை மறந்து பாசம் காட்டுவர். ஜென்ம சனியால் ஏற்பட்ட பாதிப்புகள் ஒவ்வொன்றாக விலகும். குரு மங்கள யோகம் இருப்பதால், நிலத்தில் மங்கள ஓசை கேட்கும். சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள பாகப்பிரிவினை சுமுகமாக நடக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகள் கல்வி நலன்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

கருதி ஒரு தொகையை செலவிடுவீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். வீடு கட்டி குடியேறவேண்டும் என்ற ஆசை குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் நிறைவேறும். ராகு-கேது கிரகங்களின் ஆதிக்கம் கூடுதலாக இருப்பதால் சர்ப்ப சாந்தி பரிகாரம் செய்து கொள்வதோடு குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அன்று தினம் விரதம் இருப்பது நல்லது. சங்கடகர சதுர்த்தியன்று ஆனைமுகப் பெருமானை வழிபட்டால் சங்கடங்கள் தீரும். சந்தோஷங்கள் சேரும்.

நாளை விருச்சிகம்

## குரு மாறியதும் குதூகலம் கூடும்!

### 1-1-2015- 4-7-2015

வருடத் தொடக்கத்தில் 3, 6 இற்கு அதிபதியான குரு உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு பகை கிரகமாக விளங்கும் குரு, உச்சம் பெறு

உங்களுக்கு இருப்பதால் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்துச் செய்வது நல்லது. உடன்பிறப்புகள் மற்றும் உற்றார் உறவினர்களின் பகையை தேடிக்கொள்ள இயலும். எனவே ஆதியந்தப் பிரபுவை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கார்க் குண்டுத்தாக்குதலில் சோமாலியாவில் 4பேர் பலி

சோமாலியாவில் அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய தீவிரவாத அமைப்பு ஒன்று குண்டுவெடிப்பு உள்ளிட்ட தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. தீவிரவாதிகளை குறி வைத்து இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அரசு படைக்கு ஆதரவாக அமெரிக்க படைகளும் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் தலைநகர் மொகதிசுவில் அரசு படைகளை குறி வைத்து தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கார் குண்டுதாக்குதலில் ஈடுபட்டனர். இதில் அப்பாவி பொதுமக்கள் 4 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு அல் சபாப் என்ற அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது. மேலும், அமெரிக்க படையை குறிவைத்து இந்த தாக்குதலை நடத்தியதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இரகசிய தகவல் கிடைத்ததை தொடர்ந்து இரா ணுவ வாகனத்தில் இருந்த குண்டு அகற்றப்பட்டதாகவும், ஆனால், தற்கொலைப்படை தீவிரவாதி பொதுமக்கள் பயன்படுத்திய காரில் குண்டுவெடிப்பில் ஈடுபட்டதால் உயிர்சேதம் ஏற்பட்டதாகவும் சோமாலிய நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-5)

## மோச்சி உணவு தொண்டையில் சிக்கி ஜப்பானில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்

ஜப்பானில் கொழுக்கட்டை போன்ற பாரம்பரிய உணவை நன்கு மென்று சாப்பிடாமல் விழுங்கியதால், மூச்சுத்திணறல் ஏற்பட்டு 9 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 128 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். ஜப்பானின் பாரம்பரிய உணவுகளில் ஒன்றாக மோச்சி கருதப்படுகிறது.

இனிப்பு அவரை சேர்த்து காய்கறி சூப்பில் தயாரிக்கப்படும் அரிசி கேக் போன்றது இது. இந்த உணவிற்கு ஒட்டிக் கொள்ளும் தன்மை உண்டு. எனவே இதனை வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிட வேண்டும்.

ஆனால், புத்தாண்டு தினத்தன்று அவசர கதியில் கொண்டாட்டப் பரபரப்பில் பலர் இதனை அப்படியே விழுங்கியுள்ளனர். இதனால், மோச்சி அவர்களது தொண்டைப் பகுதியில் ஒட்டிக் கொள்ள, பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சிகிச்சைக்காக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டவர்களில் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மூன்று நாட்களில் மட்டும் இவ்வாறு மோச்சி தொண்டையில் சிக்கியதில் 128 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## தீவிரவாதிகள் பற்றி தகவல்தந்தால் 760 மில்லியன் ரூபாய் சன்மானம்

### பாகிஸ்தான் அரசு அறிவிப்பு

பாகிஸ்தானில் தலைமறைவாக உள்ள 65 தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது. எனவே இத் தீவிரவாதிகள் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 760 மில்லியன் ரூபாய் சன்மானம் அளிக்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்ததுள்ளது.

தெஹ்ரிக்-இ-தலிபான் தீவிரவாத அமைப்பின் தலைவனான பசுல்லா மற்றும் லஷ்கர்-இ-இஸ்லாம் தீவிரவாத குழுவின் தலைவனான மாங்கல்பா ஆகியோரின் தலைகளுக்கு மட்டும் தலா 10 மில்லியன் ரூபாய் சன்மானமாக வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஒட்டு மொத்தமாக 615 தீவிரவாதிகளை பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் தரும் வகையில் 760 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் கைபர்-பக்துங்குவா மாகாண தகவல் துறை அமைச்சர் முஸ்டாக் கனி தெரிவித்தார்.


அண்மையில் பெஷாவரில் நடந்த பாடசாலை மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவத்திற்குப் பிறகு, அமைதியற்ற வடமேற்கு பழங்குடி பகுதியில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை கூண்டோடு ஒழிக்கும் நடவடிக்கையை பாகிஸ்தான் அரசு தீவிரப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நியூசிலாந்தில் கடும் நிலநடுக்கம்

நியூசிலாந்தின் பெரிய நகரங்களில் கிறிஸ்ட்சர்ச்சும் ஒன்று. அதன் அருகே ஆர்தஸ்பாஸ் என்ற இடத்தில் நேற்று காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியே ஓட்டம் பிடித்தனர். தெருக்களில் தஞ்சம் அடைந்தனர்.

அங்கு 6 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. பூமிக்கு அடியில் 5 கி.மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக சிறியதாக 30 அதிர்வுகள் ஏற்பட்டன. அதைத் தொடர்ந்து பெரிய அளவில் நிலநடுக்கம் ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டது. (இ-5)



இங்கிலாந்தில் உள்ள செளதம்டன் துறைமுகம் பிரபலமானது. இங்கிருந்து ஹோ ஒசாகா என்ற சரக்கு கப்பல் கடந்த சனிக்கி ழமை மாலை புறப்பட்டது.

அதன் பிறகு, அங்குள்ள ஐசில் தீவுக்கு அருகே வந்த போது திடீரென தரைதட்டி நின்றது. சிறிது நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஒரே புறமாக சரிந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அந்த கப்பலில் 1200க்கும் மேற்பட்ட கார்கள், 80 கட்டுமான பாகங்கள், ஜே.சி.பி.எந்திரங்கள், கிரேன்கள், லொறி டிரெய்லர்கள், கற்களை உடைக்கும் கிரஷர் இயந்திரங்கள் உள்ளிட்ட 4600 தொன்களுக்கும் அதிகமான இயந்திரங்கள் ஏற்றப்பட்டிருந்தன எனக் கூறப்படுகிறது.

# இராணுவத் தளம் தீவிரவாதிகள் வசம்

## நைஜீரியாவில் பரபரப்பு

(மைகுரி)

**நைஜீரியாவில் போஹோகராம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருவதோடு இதுவரை 13 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களை கொலை செய்துள்ளனர். இந்நிலையில் நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல் மேற்கொண்ட தீவிரவாதிகள் இராணுவத்தினரை ஓட ஓட விரட்டியடித்து முக்கிய இராணுவத் தளத்தை கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஆபிரிக்கா நாடான நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் வடகிழக்கு பகுதியில் பல்வேறு நகரங்களை கைபற்றியுள்ளனர். திடீர் திடீர் என கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை சரமாரியாக சுட்டு கொலை செய்து வருகின்றனர். மாணவ மாணவிகளை கடத்தி சென்றும் விடுகின்றனர். இதுவரை 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளை கடத்தியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு முதல் தாக்குதல் நடத்தி வரும் தீவிரவாதிகள் இதுவரை 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை கொன்று குவித்துள்ளனர்.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் நைஜீரிய இராணுவத்துடன் அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் படைகளும் ஈடுபட்டுள்ளன. நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள பஹா நகரம் உள்ளது. இது சர்வதேச இராணுவ படைகளின் தலைநகரமாக விளங்குகிறது. இங்கு நைஜர், நைஜீரியா, சாட் மற்றும் கேமரூன் நாட்டு படைவீரர்கள் தங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் திடீரென போகோஹரம் தீவிரவாதிகள் பஹாவில் உள்ள இராணுவ முகாம் மீது அதிரடி தாக்குதல் நடத்தினர். அப்போது இராணுவமும் பதிலடி கொடுத்தது. ஆனால் தீவிரவாதிகளின் கை ஓங்கியதால் இராணுவ வீரர்கள் ஓட்டம் பிடித்தனர். அவர்கள் சாட் ஏரி அருகில் உள்ள மற்றொரு முகாமில் தஞ்சம் அடைந்தனர். இதனையடுத்து இராணுவ முகாமை தீவிரவாதிகள் கைப்பற்றினர். இதனால் அங்கு பதற்றமான சூழ நிலை ஏற்பட்டுள்ளது. (இ-5)




# படுகொலை இன்னும் தொடரும் தலிபான் தலைவர் எச்சரிக்கை

பெஷாவரில் நடத்தப்பட்ட தாக்குதலைவிட பயங்கர தாக்குதலை நடத்துவோம், குழந்தைகளை படுகொலை செய்வோம் என்று தலிபான் தீவிரவாத இயக்கம் மிரட்டல் விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் உள்ள இராணுவ பாடசாலையில் தலிபான் தீவிரவாதிகள் 6 பேர் புகுந்து, 133 குழந்தைகள் உட்பட 150 பேரை கொன்று குவித்தது உலகமெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த தாக்குதலில் மூளையாக செயற்பட்டவர், பாகிஸ்தான் தலிபான் இயக்கத்தின் தலைவர்.

முல்லா மவுலானா பஸ்லுல்லா இவன் ஆப்கானில் பதுங்கியவர். பெண் கல்விக்காக போராடிய சிறுமி மலாலாவை கொலை செய்ய திட்டமிட்டவன். தற்போது முல்லா பஸ்லுல்லா பெஷாவர் நடத்தப்பட்ட தாக்குதலைவிட பயங்கர தாக்குதலை நடத்துவோம், குழந்தைகளை படுகொலை செய்வோம் என்று மற்றொரு படுகொலைக்கு திட்டம் தீட்டப்பட்டு வருவதாக கூறியுள்ளான்.

நாங்கள் இராணுவ முகாம் மற்றும் பயிற்சி பாடசாலை அருகே இருந்த பாடசாலையில் தாக்குதல் நடத்தினோம். நாங்கள் இராணுவத்துடன் போரிட்டு வருகிறோம். அவர்கள் எங்களையும் எங்களது மக்களையும் போலி குற்றச்சாட்டில் கொலை செய்தால் நாங்கள், அவர்களை கொலை செய்வோம். எங்களது வீரர்கள்(தீவிரவாதிகள்) பாடசாலையில் தாக்குதல் நடத்தினர். அவர்கள் இராணுவ வீரர்களின் குழந்தைகளையே கொன்றனர். மக்களை இல்லை. அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக அவர்களுடைய முழுவிபரமும் கேட்கப்பட்டது. இதுபோன்ற மக்கள்(இராணுவம்) தொடர்ந்து எங்களுடைய இலக்காக இருப்பார்கள். அவர்களை சந்தை வீதி என எங்கும் கொலை செய்வோம்.

இராணுவத்திற்கு எங்களுடைய சூழ்நிலை தெரிந்தால், எங்களுக்கு அவர்களுடையது தெரியும். அனைத்து பகுதியிலும் உள்ள இராணுவம் முகாம்கள் எங்களுடைய இலக்கில் உள்ளது என்று தலிபான் தீவிரவாத இயக்கம் தெரிவித்துள்ளது.


பாகிஸ்தான் இராணுவ தாக்குதல் மற்றும் ஏவுகணை தாக்குதல்களுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாக, பெஷாவரில்நடத்திய தாக்குதலை நியாயப்படுத்தும் முயற்சியாக தலிபான் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் முல்லா பஸ்லுலலா புதிய வீடியோவை வெளியிட்டுள்ளார். "எங்களுடைய குழந்தைகள், குழந்தைகள் இல்லையா? என்ற வீடியோவை தலிபான் வெளியிட்டுள்ளது என்று இங்கிலாந்து செய்தி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் சர்வதேச படைவந்தாலும், அவர்களுடன் சண்டையிடவும் தயாராகவுள்ளோம்." என்று தலிபான் தெரிவித்துள்ளது.(இ-5)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பா.ஜ.க. அரசு முன்மாதிரி

# பட்ஜெட்டுக்கு மக்களிடமும் ஆலோசனை பெற மத்திய அமைச்சர்களுக்கு மோடி வலியுறுத்தல்



2015-16ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தயாரிப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில் மக்களிடம் இருந்து ஆலோசனைகளைப் பெற்று அதனை பட்ஜெட்டில் சேர்க்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி மத்திய அமைச்சர்களுக்கு வலியுறுத்தியுள்ளார். டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, அமைச்சகங்களுக்கான இணையத் தளங்கள் மற்றும் பிற இணைய வழிகள் மூலமாக மக்களிடம் இருந்து ஆலோசனைகளைப் பெற வேண்டும் என்று தெரிவித்தார். பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் மூலமாக உருவானது தான் தூய்மை இந்தியா திட்டம் என்பதையும் பிரதமர் மோடி அமைச்சரவைக் கூட்டத் தின் போது சுட்டிக் காட்டினார். அமைச்சகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை, ஆண்டு முழுவதும் ஒரே சீராக பயன்படுத்தும் வழக்கத்தை உறுதி செய்ய வேண்டும்எனவும் ஆண்டு இறுதியில் ஒட்டு மொத்தமாக நிதியை செலவிடும் வழக்கத்தை கைவிட வேண்டும் என்றும் அமைச்சர்களுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார். (இ-5)




# மகிந்த தப்பிச் செல்ல அனுமதிக்கக் கூடாது

## ராமதாஸ் வலியுறுத்து



**தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தப்பிச் செல்வதை அனுமதிக்கக் கூடாது. அவரது சொத்துக்கள், கடவுச் சீட்டு ஆகியவை உடனடியாக முடக்கப்பட வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான ஜனாதிபதி தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியும், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவும் போட்டியிடுகின்றனர்.

இலங்கை ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரை முடிவடைந்து விட்ட நிலையில், அடுத்து வரும் நாட்களில் வெற்றிக்காக எவ்வித நாடகங்களும் அரங்கேற்றப்படலாம. எவ்வளவு கொடிய வன்முறையும் கட்டவிழ்த்து விடப்படலாம். தேர்தல் பரப்புரையின் இறுதி நாளான நேற்று முன்தினம் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற கூட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுத்தாக்குதலே இதற்கு சிறந்த உதாரணமாகும்.

பதவிக்கு போட்டியிடுபவர்களில் முக்கியமானவர்களான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகிய இருவருமே தமிழர் நலனுக்கு எதிரானவர்கள்தான் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இலங்கைப் போரில் அப்பாவி தமிழர்களை படுகொலை செய்ததுடன், மீதமுள்ள தமிழர்களை இன்றளவும் வாழவிடாமல் கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பவர்களை எதிர்த்து போட்டியிடும் சிறிசேன வானத்திலிருந்து குதித்து வந்த அப்பழுக்கற்ற அமைதி விரும்பி அல்ல. 3 மாதங்களுக்கு முன்பு வரை ராஜபக்ஷ அரசில் அவருக்கு அடுத்த நிலையில் இருந்து, அனைத்துக் குற்றங்களுக்கும் துணை போனவர்தான். அவரைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் சந்திரிகாவும், ரணில் விக்ரமசிங்கவும் தமிழருக்கு செய்த கொடுமைகள் இன்னும் 10 நூற்றாண்டுகள் ஆனாலும் மறந்து விடக் கூடியவை அல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பாக். ஆட்டுழியத்தால் பரிதவிக்கும் மக்கள்

காஷ்மீரில் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவும் எல்லையில் இந்திய நிலைகள் மீது அத்துமீறி தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானின் அடாவடி நீடித்து வருவதையடுத்து எல்லை கிராமங்களில் வசித்த சுமார் 10 பேர் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவம் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த அத்துமீறிய தாக்குதல்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்றன. குறிப்பாக புத்தாண்டுக்கு முந்தைய தினத்தில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் எல்லை பாதுகாப்பு படை வீரர் உட்பட 2 பேர் கொல்லப்பட்டனர். சம்பா, கதுவா மாவட்டங்களில் கடந்த 3ஆம் திகதி நடந்த தாக்குதலில் 2 இராணுவ வீரர்கள் மற்றும் ஒரு பெண் என 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 11 பேர் படுகாயமடைந்தனர்.

குடியிருப்பு பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவம் அரங்கேற்றி வரும் தொடர் தாக்குதல்களால் எல்லையோர ம்க்கள் கடும் அச்சத்துக்குள்ளாகி உள்ளனர். இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அதிகாரிகள் வெளியேற்றினர்.

பின்னர் 3ஆம் திகதி நள்ளிரவு முதல் 4ஆம் திகதி மாலை வரை பாகிஸ்தான் இராணுவம் தனது தாக்குதலை நிறுத்தியது. இதனால் எல்லையில் அமைதி நிலவியது. ஆனால் ஒரு நாள் அமைதிக்குப்பின் மீண்டும் பாகிஸ்தான் இராணுவம் தனது வேலையை தொடங்கியது.

சம்பா மற்றும் கதுவா மாவட்டங்களில் எல்லையில் இந்திய நிலைகள் மீது சிறியரக ஆயுதங்களால் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடததியது. இந்தியா தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம பாகிஸ்தான் இராணுவம் நடத்திய இந்த கண்மூடித்தனமான தாக்குதலில இந்திய எல்லை பாதுகாப்பு படையை சேர்ந்த வீரர் ஒருவர் உயி ரிழந்தார்.

இதைத்தொடர்ந்து பாகிஸ் தான் இராணுவத்துக்கு எலலை பாதுகாப்பு படையினர் தகுந்த பதிலடி கொடுத்தனர். இதனால் அந்த பகுதிகளில் இரு தரப்புக்கும் இடையே அடிக்கடி கடும் தாக்குதல் நடைபெற்று வருகின்றது. (இ-5)

பாரதச் செய்தி

# உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிரதிக்கு சுப்ரமணியன் சுவாமி போராட்டம்

ஜெயலலிதா வழக்கில் வாதிட தனக்கு அனுமதி வழங்கக் கோரி சுப்ரமணியன் சுவாமி போராடி வருகிறார்.

ஊழல் தடுப்புச் சட்டத்தை மேற்கோள் காட்டி, ஜெ.வழக்கில் வாதிட தனக்கு அனுமதி வழங்குமாறு அவர் உச்ச நீதிமன்ற அமர்வு முன் கோரிக்கை வைத்துள்ளார். ஜெ. வழக்கு விசாரணையில் தன்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என கர்நாடக உயர் நீதிமன்றத்தில் சுப்ரமணியன் சுவாமி நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மனு தாக்கல் செய்தார்.

அப்போது, ஜெ.வழக்கில் வாதிட அனுமதி வழங்கிய உச்ச நீதிமன்ற ஆணையின் நகலை சமர்ப்பித்த பிறகு மனு குறித்து பரிசீலக்கப்படும் என நீதிபதி தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஜெ. வழக்கில் வாதிட உச்ச நீதிமன்றம் தனக்கு ஏற்கனவே வழங்கிய அனுமதி தொடர்பான நகலைக் கோரி சுவாமி உச்ச நீதிமன்றத்தில் மனு செய்தார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஹெச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு முன்னர் இந்த வழக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜெ. வழக்கில் அரசுக்கு ஆதரவாக வாதிட தனக்கு சிறப்பு அனுமதி வழங்கிட வேண்டும் என்றார்.மனுவை விசாரித்த நீதிபதிகள், ஜெ.மேல் முறையீட்டு வழக்கில் வாதிட கர்நாடக உயர் நீதிமன்றத்தில்தான் நீங்கள் முதலில் அனுமதி பெற வேண்டும.

மேலும், கர்நாடக உயர்நீதிமன்றம் உங்கள் (சு.சுவாமி) மனு மீது ஏதாவது உத்தரவு பிறப்பிக்கும் முன்னர் மீண்டும் அந்த நீதிமன்றத்தை அணுகுங்கள் என்றனர்.

**மூத்த சட்டத்தரணி ஆஜராகவில்லை**

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டு மனு மீதான விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது நாளாக நேற்றும் தொடரந்தது. இந்நிலையில், ஜெயலலிதா தரப்பில் ஆஜராக டில்லியில் இருந்து வருவார்கள் என எதிர் பார்க்கப்பட்ட மூத்த சட்டத்தரணி ஆஜராகவில்லை. இதனால் பி.குமார் ஜெ.தரப்பில் ஆஜரானார்.

முன்னதாக நேற்று, முன்தினம் மேல் முறையீட்டில் டில்லியைச் சேர்ந்த மூத்த சட்டத்தரணி வாதிட இருக்கிறார். எனவே வழக்கை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்தி வைக்க வேண்டும என பி.குமார் விடுத்த கோரிக்கையை நீதிபதி கண்டிப்புடன் மறுத்து விட்டார். இந்நிலையில், நேற்று ஆஜரான ஜெயலலிதாவின் சட்டத்தரணி பி.குமார், ஜெயலலிதா 1991-96 வரை முதலமைச்சராக இருந்த போது வாங்கிய அசையும், அசையா சொத்துகள் குறிதது எடுத்துரைத்தார்.

இதே வேளை ஜெயலலிதா மேலமுறையீட்டு மனு மீதான விசாரணையில் அரசு தரப்பு சட்டத்தரணி பவானி சிங்கை நீக்க வேண்டும் என தி.மு.க. தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு மீதான விசாரணை இன்று இடம் பெறவுள்ளது. (இ-5)


# இலங்கையில் சிக்கி தவித்த 21 பேர் தாயகம் திரும்பினர்


இலங்கையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிக்குச் சென்று சிக்கி தவித்த இந்திய பணியாளர்களில் 21 பேர் தாயகம் திரும்பினர்.வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.


ஏனைய ஊழியர்கள் அனைவரும் விரைவில் நாடு திரும்புவார்கள் என்றும் சையத் அக்பருதீன் கூறியுள்ளார். இலங்கையில் செயற்பட்டு வரும் இந்திய நிறுவனம் ஒன்றில் பீஹார் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த 77 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். அவர்களுக்கு 2 மாதங்களாக முறையான ஊதியங்கள் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. மேலும் அவர்களின் கடவுச்சீட்டுக்களை வாங்கி வைத்துக் கொண்ட நிறுவனம், மிரட்டுவதாக தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தை தொடர்பு கொண்டு தெரிவித்தனர். இந்நிலையில் அவர்களில் 21 பேர் நேற்று தாயகம் திரும்பியுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 90ஆவது பிறந்தநாள் அறக்கொடைவிழா இன்று


தேசமானி, சரவணமுத்து ஆறுமுகநாதன்


வைத்திய கலாநிதி. கனக சுந்தரம் மயிலேறும்பெருமாள்.


சைவப்புலவர். பண்டிதர், தம்பிப்பிள்ளை இராசரத்தினம்.


நாதஸ்வரவித்துவான், கலா பூஷணம், கே.ஆர்.சுந்தரமூர்த்தி.


ஜெபமணி யேசுசகாயம்

சிவத்தமிழ்ச் செல்வி. பண்டிதை, கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா இன்று காலை 9 மணியளவில் யாழ். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் (தலைவர்,ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்) தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஐந்து பெரியார்கள் **சிவத்தமிழ் விருது 2015** வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

**1.தேசமானி, சரவணமுத்து ஆறுமுகநாதன்**

இவர் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பிரபல தொழிலதிபர் கடந்த நாற்பது ஆண்டுகளாக துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாகத்தில் பங்காற்றி வருபவர். தற்போது தேவஸ்தான உபதலைவராக பணியாற்றி வரும் இவர், பலவிருதுகளைப் பெற்றவர். அரிமாக்கழகத்தின் உறுப்பினராக விளங்கும் இவர், தனது சொந்தச்செலவில் தெல்லிப்பழையில் தொழிற் பயிற்சிக் கூடத்தை நிறுவிய பெருமைக்குரியவர்.

**2,வைத்திய கலாநிதி கனக சுந்தரம் மயிலேறும்பெருமாள்.**

இவர் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.1974 முதல் இலங்கையின் பல பாகங்களிலும் சிறந்த மருத்துவப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். வன்னியிலும் வல்வெட்டித்துறையிலும் போர்ச் சூழலில் அரிய பணியாற்றியவர்.மாவட்ட வைத்திய அதிகாரியாக விளங்கிய இவர் அரிய சேவையாற்றி மக்கள் மனதில் வாழ்ந்து வருகிறார்.

**3,சைவப்புலவர் பண்டிதர், தமபிப்பிள்ளை இராசரத்தினம்**

இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்,இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.சிறந்த ஆசிரியராக விளங்கியவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றி வருபவர்.திருமுறை முற்றோதல், புராணப்படிப்பில் பங்குபற்றிவரும் இவர், இலக்கண இலக்கியத்தில் இன்று ஐயங்களைத்தீர்த்து வைக்கும் மரபுவழி அறிஞராக விளங்கி வருகிறார்.


**4,நாதஸ்வரவித்துவான், கலா பூஷணம், கே.ஆர்.சுந்தரமூர்த்தி**

இவர் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடந்த அறுபது ஆண்டுகளாக எம்மண்ணில் கலைப் பணியாற்றி வருபவர்.பல விருதுகளைப் பெற்ற முதுபெருங்கலைஞர்.

**5,ஜெபமணி யேசுசகாயம்**

இவர் நவாலியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். 37 ஆண்டுகள் இலங்கையின் பலபாகங்களிலும் ஆசிரியப் பணியாற்றியவர். ஓய்வுபெற்றபின்பும்ஏழை மாணவர்களின் கல்விக்காக இன்று வரை உழைத்து வருபவர் ஏழைகளின் பங்காளராக பணியாற்றி வரும் இவர் சேவையால் பலர் பயன் பெற்றனர் என விழாக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ-5)

### அறமோடு தமிழ்வெல்ல அவதாரமானார்



ஆன்மீக வடிவாக அம்பாளைப் போற்றிய
அன்னையே செல்வி தங்கம்மா,
அறமோடு தமிழ்வெல்ல, நிறைவான பணிகொள்ள
அவதாரமானார் அம்மா
தேனாகும் சைவமதைத் தித்திக்கவே செய்த
தெல்லியூர் துர்க்கை மகிழ
திக்கற்ற பிள்ளைகள் யாவரும் அன்னைக்கு
தெய்வக் குழந்தையானார்.
மேனாடு போற்றியே ஓடோடி வந்திடுவர்
வில்லங்கம் யாவும் நீங்கவே
மெய்ஞ்ஞானம் ஒருபோதும் தோற்காது என்பதை
மெய்யாக்கினார் தங்கம்மா,
வானாளும் அன்னைக்கு வருடா வருடமதில்
வாய்த்த அறக்கொடை விழா
வருங்காலம் நலமாகப் பெருஞ்சேவை தொடருமே
வரலாறு வாழ வைக்கும்.

**கலாபூஷணம், கே.எஸ்.சிவஞானராஜா.**

# மைத்திரி உணர்வு தமிழரிடம் இல்லை

## மகிந்த எதிர்ப்பே மேலோங்கியுள்ளதாக ஹிந்து விளக்கம்

**தமிழர் மத்தியில் மைத்திரி உணர்வு இல்லை! மகிந்த எதிர்ப்பு உணர்வேயுள்ளது என சுட்டிக்காட்டியுள்ள இந்தியாவின் த ஹிந்துப் பத்திரிகை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களின் 7 இலட்சம் வாக்குகள் முக்கியமானவை. எனினும் அந்த மக்கள் இதனை தமது தேர்தலாக கருதவில்லை என்று த ஹிந்து தெரிவித்துள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களை கோரியுள்ளது.

தமிழர்கள் மத்தியில் மைத்திரி தொடர்பில் உணர்வு இல்லை. எனினும் மகிந்தவுக்கு எதிரான உணர்வு நிறைந்துள்ளது என்றும் ஹிந்து குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் மைத்திரிபாலவுக்கு தமிழர் அளிக்கும் வாக்குகள், மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான வாக்குகளாகவே இருக்கும் என்று புளொட் அமைப்பின்தலைவர்தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மைத்திரிபாலவுக்கு வாக்களிப்பதன் மூலம் இலங்கையில் மறைந்து போயுள்ள ஜனநாயக சூழலை மீண்டும் ஏற்படுத்த முடியும் என்று நம்புவதாக தமிழ்த் தேசியக் கூட்மைப்பு தெரிவித்துள்ளது. (இ-5)

# அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் அறக்கொடை விழா தெல்லியூரில்

(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 90 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா இன்று புதன்கிழமை காலை 8 மணி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னபூரணி மண்டபத்தில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வித்துறை ஆய்வாளர் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணர் கிருஷாந்தி இராஜசூரியர் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா, வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளினை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் அறங்காவலர் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் மற்றும் அமெரிக்க ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

# வாக்களிக்க விசேட விடுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச ஊழியர்களுக்கு நான்கு மணிநேர விடுமுறை வழங்கப்படல் அவசியம் என தேர்தல் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச பிரிவின் விசேட விடுமுறை தொடர்பான நிறுவன சட்டத்தின் 12.3 பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கமைய இவ்விடுமுறை வழங்கப்படுகிறது.

அதற்கமைய பணியிடத்திலிருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில் அல்லது அதற்கு குறைவான தூரத்தில் வசிப்போருக்கு சம்பளத்துடன் கூடிய அரை நாள் விடுமுறையும் 100- 150 கிலோ மீற்றர் தொலைவில் வசிப்போருக்கு சம்பளத்துடன் கூடிய ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கு அதிகமான தொலைவில் வசிப்போருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் வழங்கப்பட வேண்டும்.

இது தவிர நாட்டின் சில பிரதேசங்களில் வசிப்போர் வாக்களித்து விட்டு மீண்டும் திரும்ப 3 நாட்கள் தேவையாக இருக்கும் பட்சத்தில் வழங்கப்படவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடுமுறை அனைத்து தனியார் நிறுவனங்களுக்கும் பொருந்தும் எனவும் மேலும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-5)

# ஜனாதிபதித் தேர்தலால் பிற்போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் இன்று தொடக்கம் 11.01.2015 வரை நடத்த திட்டமிட்டிருந்த அனைத்து கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய நாட்பாடசாலைகள், பரீட்சைகள் மற்றும் செய்முறை வகுப்புக்கள் உட்பட கல்விசார் நடவடிக்கைகள் யாவும் தேர்தல் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. இவற்றுக்கான புதிய மீளமைக்கப்பட்ட திகதிகள் மற்றும் விபரங்கள் என்பவற்றை யாழ். பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் வைத்து போலி நாணயத்தாள்களுடன் இருவர் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் கைது செய்யப்பட்டனர் என கிளிநொச்சி குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த குற்றத்தடுப்பு பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். இதன்போது இவர்களிடமிருந்து 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் ஐந்தும், ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்றும் , 500 ரூபா போலி நாணயத்தாள்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் மாங்குளத்தை சேர்ந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவர் (வயது-27) எனவும் மற்றையவர் இவரது நண்பர் (வயது-25) எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை செய்யப்பட்டனர்.

இதன்போது " இப்போலி நாணயத்தாள்களை வழங்கியவர் தற்போது மலேசியாவில் வசித்து வருகின்றார்" என அவர்களிடம் இடம்பெற்ற முதறகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. கிளிநொச்சி குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்றைய தினம் இவர்கள் இருவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில விசார ணைக்காக முற்படுத்தினர்.

எனவே இதுபோன்ற போலி நாணயத்தாள்களின் புழக்கம் நடைபெற்று வருவதாகவும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் போலி நாணயத்தாள்கள் தொடர்பில் தகவல் மற்றும் சந்தேகம் காணப்பட்டால் உடனடியாகஅருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி அறியத்தருமாறும் கிளிநொச்சி குற்றத் தடுப்பு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர். (2-271)




# நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் வீதி திருத்தப்பணி நடைபெறும்

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் - துணுக்காய் 10 கிலோ மீற்றர் அளவான வீதியை திருத்துவதற்கு இதுவரையில் நிதியுதவி கிடைக்கவில்லை.

நிதியுதவி கிடைக்கப்பெற்றதும் வீதி திருத்தப்படும் என துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 கிலோமீற்றர் நீளம் கொண்ட மேற்படி வீதியில் 10 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்பட்டு, எஞ்சியுள்ள 10 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படாமல் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதால் அவ்வீதியூடாக பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதை தவிர்த்து வருகின்றனர். அத்துடன், இந்த வீதியினூ டாக பேருந்து போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.

இதே வேளை "புனரமைக்கப்படாத வீதியில் காணப்படும், ஐயங்கன் குளம் வான் பாயும் பகுதியிலுள்ள 2 பாலங்கள், தேறாங்கண்டல் குளத்தின் வான் பாயும் பகுதிப பாலம்மற்றும்பண்ணைப் பகுதி சிறிய பாலம் ஆகியவை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

வீதியை புனரமைப் புச் செய்வதற்கான நடவடிக்கைகளை விரை வில் எடுப்பதுடன், வீதி புனரமைக்கப்பட்டதும் போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுப்பத ற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்" எனவும் அவர் தெரிவித்தார்.

புத்துவெட்டுவான் கிராமத்தைச் சேர்ந்த 120 குடும்பங்களும் தேறாங்கண்டல் கிராமத்தை சேர்ந்த 449 குடும்பங்களும் ஐயங்கன் குளக் கிராமத்தை சேர்ந்த 361 குடும்பங்களும் ஏனைய பகுதிகளை சேர்ந்த 300 குடும்பங்களும் குறித்த வீதியால் போக்குவரத்து செய்யமுடியாமல் சிரமங்களை எதிர்நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# தேர்தலில் ஜனநாயக ஆயுதமான வாக்கை மக்கள் முழுமையாக பயன்படுத்த வேண்டும்

## சிறீதரன் எம்.பி.வேண்டுகோள்

நாளை நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தம் ஜனநாயக ஆயுதமான வாக்கை முழுமையாக பயன்படுத்த வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுத்துள்ள நிலைப்பாடடின்படி தமிழ்மக்கள மாற்றத்திற்காக வாக்களிக்க வேண்டியது வரலாற்றுக் கடமையாகின்றது.

வாக்கு என்பது மிக முக்கியமான ஜனநாயக கடமைக்குரிய ஆயுதம். எனவே தமிழ் மக்கள் நாளைய தினம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தேர்தல் நாளன்று காலையிலேயே வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிப்பது அவசியம்.

அப்படி வாக்களிக்க தவறுகின்ற சந்தர்ப்பத்திலும் வாக்களிக்க போகாமல் கவலையீனமாக இருக்கின்ற நிலையிலும் அந்த வாக்குகளை மோசடியாளர்கள் பயன்படுத்தக் கூடிய அபாய நிலை உண்டு.

இதன்மூலம் தமிழர்கள் நினைககின்ற முடிவில் பின்னடைவுகளும் ஏற்படலாம்.

நீங்கள் உங்கள் வீடுகளில் உளள எல்லா வாக்குகளையும் இத்தேர்தலில் முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

உங்கள் அயலவர்களையும் வாக்களிக்கும் நாளில் ஊக்குவித்து உசாரடைய செய்ய வேண்டும்.

இதன் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்திற்கான வாக்களிப்பு முழுமையான வெற்றி பெறும். சிலர் தமக்கு வாக்குச் சீட்டுக்கள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். எனவே வாக்குச் சீட்டு இன்னும் கிடைக்காதவர்கள் அருகிலுள்ள அஞ்சல் நிலையங்களை தொடர்பு கொண்டு இது தொடர்பான தெளிவை பெறவேண்டியது அவசியமாகினறது.

வாக்குச்சீட்டுக் கிடைக்காதவர்கள் தகவல்கள் தரவிரும்பினால் 021 320 7584 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2)




### திருட்டுக்களை கட்டுப்படுத்த

# இளைஞர்கள் குழுக்களாக இணைந்து பொலிஸாருடன் ரோந்து செல்ல வேண்டும்

மன்னார் பேசாலைப் பகுதியில் நிலவி வரும் திருட்டுச் சம்பவங்களை நிறுத்தும் முகமாக பேசாலை இளஞர்கள் கொண்ட குழுக்கள் பொலிஸாருடன் இணைந்து இரவில் ரோந்து செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொலிஸ் - பொது மக்களுக்கிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை புனித வெற்றி நாயகி ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அண்மைக் காலமாக பேசாலை பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சம் காணப்படுகின்றது. இந்தக் கூட்டத்தில் பேசாலை பொலிஸ் சாவடி பொலிஸ் பொறுப்பதிகாரி றிஸ்வி, இன்ஸ்பெக்டர் கே.ஜெயரூபன், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிறிமூஸ் சிராய்வா, மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.மாட்டீன் டயஸ் உட்பட அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டதாவது, பேசாலை பகுதியில் அண்மைக் காலமாக பெருந் திருட்டுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதை நிறுத்துவதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், பேசாலை ஒரு பரந்த கிராமமாகும். இங்குள்ள பொலிஸ் சாவடியில் இப்பகுதிக்கேற்றவாறு பொலிஸ் ஆளணி மிகவும் பற்றாக்குறையாக இருக்கின்றது. அடுத்து இப்பகுதியில் பல வீதிகள், சந்தி கள் இருக்கின்றபோதும் பெரும்பாலான இடங்கள் இருள்மயமாகவே காட்சி அளிக்கின்றன. இது திருடர்களுக்கு சாதகமாக காணப்படுகின்றது. ஆகவே முதலில் இருள் சூழ்ந்துள்ள இடங்களில் மன்னார் பிரதேச சபை தெரு வெளிச்சம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்து இப்பகுதியில் பொலிஸ் ஆளணி பற்றாக்குறையாக இருப்பதால் இப்பகுதி மக்களும் பொலிஸாருடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் உண்டு எனத் தெரிவித்தனர். ஆகவே இங்கு ள்ள இளைஞர்கள் குழுக்களாகப் பிரிந்து நாளாந்தமசுழற்சி முறையில் பொலிஸாருடன இணை ந்து இரவில் இந்தப் பகுதியில் ரோந்து செல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. (2)

# கால்நடைகளின் பெருக்கத்தை அதிகரிப்பதற்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் செயற்பாடு

(கிளிநொச்சி)

கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பசு, எருமை மாடு, ஆடு ஆகியவற்றிற்கான செயற்கை முறையிலான சினைப்படுத்தல் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி கால்நடை சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் செ.கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச்செயற்கை முறையிலான சினைப்படுத்தலானது கிளிநொச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கால்நடை வைத்தியர் அலுவலகப் பிரிவுகளில் உள்ள கால்நடை வளர்ப்போரின் முன்னேற்றம் கருதி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்ற போதிலும் கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி கிளிநொச்சி கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மானது அரச சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து இச்செயற்பாட்டை முன் நடத்தி வருகின்றது.

இதற்கென 30 கள உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து அவர்களை பயிற்றுவித்து அவர்களின் ஊடாகவே செயற்கை முறையிலான சினைப்படுத்தல் செயற்பாட்டினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

எனவே இச்சினைப்படுத்தல் சேவையினைப் பெற விரும்பும் கால்நடை வளர்ப்போர் அவ்வப்பிரதேசகால்நடை வைத்தியர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பயன்பெற முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளில் பெற்றோம் (சுதந்திரம்) இன்னும் விடியவில்லை.

– மேத்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நீதியான தேர்தலை உறுதி செய்யுங்கள்

நாளை விடிந்தால் ஜனாதிபதித் தேர்தல். முன்னர் ஒருபோதும் இல்லாத அளவில் இத்தேர்தல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெரிந்தவர்கள், பழகியவர்கள் யார் சந்தித்தாலும் என்ன நடக்கும்? யாருக்கு வெற்றி? என்பதே விசாரணையாயிற்று.

பொதுமக்கள் சந்திக்கும் இடங்களில் ஜனாதிபதித் தேர்தல் குறித்த பட்டிமன்றங்களும் நடப்பதுண்டு. இருந்தும் யார் பட்டிமன்றம் நடத்தினாலும் தீர்ப்பு ஒன்பதாம் திகதியே வெளியிடப்படும்.

தீர்ப்பு வெளிவருவதற்குள் என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? என்ற ஏக்கம் நாட்டு மக்களிடையே இருக்கவே செய்கிறது.

இவை ஒருபுறம் இருக்க, தேர்தல் தினமாகிய நாளை எட்டாந்திகதி வதந்திகளும் பரப்பப்படலாம். எதுவாயினும் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சியில் யார் பதவியில் இருப்பதென்ற தீர்ப்பை வழங்கப்போவது பொதுமக்கள். நாளை எட்டாந்திகதி இலங்கைத் திருநாட்டின் பிரஜைகள் வழங்கும் தீர்ப்பு இந்த நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும்.

மாறாக அரசியல்வாதிகள் பலரின் தலைவிதியையும் இந்தத் தேர்தல் தீர்மானிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

எதுவாயினும் தேர்தல் என்பது ஜனநாயகத்தின் அடித்தளம். எனவே, ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலில் மோசடி இடம்பெறுமாயின் அந்தத் தேர்தலால் எந்தப்பயனும் கிடையாது. மாறாக மக்களை அலைத்ததே மிச்சம் என்பதாக நிலைமை முடியும்.

ஆக, தேர்தல் நீதியாக இடம் பெறுவதை சகல தரப்பினரும் உறுதி செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக தேர்தல் ஆணையாளர், பொலிஸார், தேர்தல் பணியில் ஈடுபடுவோர், கண்காணிப்புப் பணியில் பங்குபற்றுவோர் மிகவும் நேர்மைத் தன்மையுடன் செயற்படுவது அவசியம்.

கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவோர் தேர்தல் வன்முறைகள் – முறைகேடுகள் இடம்பெறும் போது அது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கையை உடனடியாக எடுத்தாக வேண்டும்.

இதை விடுத்து அறிக்கை தயாரித்து அதை வெளிநாட்டிற்கு அனுப்புவதால் தேர்தல் கண்காணிப்பு, நேர்மையான தேர்தலுக்கு எந்த வகையிலும் உதவமாட்டாது. தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுபவர்கள் எடுக்கின்ற காத்திரமான நடவடிக்கையைப் பொறுத்தே நீதியான தேர்தல் சாத்தியமாகும்.

எனினும் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் போதாதென்பதை மட்டுமே இவ்விடத்தில் குறிப்பிடமுடியும்.

அதேநேரம் நீதியான தேர்தல் நடைபெறுமாக இருந்தால், அரசியல் பழிவாங்கல் என்ற கலாசாரம் ஒவ்வொரு தேர்தலுக்கு பின்னரும் அரங்கேறுவது நிறுத்தப்படும். எனவே இந்த உண்மையை உணர்ந்து அரசியல் கட்சிகள், மோசடிகளிலும் ஏமாற்று நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதைக் கைவிடவேண்டும்.

தேர்தல் பிரசாரம் மூலமாக உங்கள் கொள்கைகளை, அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் முன்னிலையில் வைத்துள்ளீர்கள். எனவே உங்கள் பிரசாரத்தையும் யதார்த்தத்தையும் அடிப்படையாகக் கொண்டு, யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்தை மக்கள் எடுப்பர்.

யாருக்கு வாக்களித்தல் என்ற தீர்மானத்தை எடுக்கின்ற மிக உன்னதமான உரிமை மக்களுக்கு உண்டு. அந்த உரிமையை திசை திருப்பும் வகையில் மோசடி செய்வது, போலித்தனம் செய்வது என்பன மருந்துக்கும் ஆகாதவை.

ஆகவே, அரசியல் கட்சிகள் நீதியான – நேர்மையான தேர்தல் இடம்பெறுவதற்கு உதவ வேண்டும். அதுவே உத்தமர்க்கு அழகு. இவற்றோடு நாளை எட்டாந்திகதி இந்தநாட்டின் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் தேர்தலில் வாக்களிக்கும் கட்சி ஆதரவாளர்கள் உள்ளிட்ட பொது மக்கள் நேர்மையோடும் தர்மத்திற்கு கேடில்லாமலும் போலித்தனங்கள், ஏமாற்று நாடகங்கள் என்பவற்றிற்கு இசையாமலும் நீதியான தேர்தல் நடந்தேறுவதற்கு பேருதவி புரிய வேண்டும்.

இதுவே பொதுமக்களின் தார்மீகக் கடமையாகும்.

# சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் 90ஆவது பிறந்தநாளில் சில சிந்தனைகள்



1925 ஆம் ஆண்டு பிறந்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் 15.06.2008 இல் சிவபதம் எய்தியவர். அவருக்கு இன்று வயது 90. சைவாலயப் பரிபாலனப் பணியாலும் சைவப் பிரசங்க மரபினாலும் மேற்குலக நாடுகளை தம்வசம் ஈர்ந்தவர்.

சைவப் பிரசங்கப் பணியில் தத்துவச் சிதறல்கள், மென்மையான சொற்கோர்வைகள், இலக்கணவாசிரியரின் சுத்தமான உச்சரிப்பு, கணீரென்ற தொனி, இசையாசிரியை ஒத்த பண்ணிசைப் பாடல்கள், வெள்ளிமலைச் சொல்லருவி, சொல்லிலும் செயலிலும் உருவிலும் மின்னும் எளிமை என இந்திய நாட்டு பேரறிஞர் புவனா இராஜகோபால் குறிப்பிட்டிருக்கிறார்.

நாவன்மை பொருந்திய சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் தம்பிரசங்க மரபினால் சைவத் தமிழ் உலகை ஆண்டிருக்கிறார். சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் துர்க்கை அம்மன் சந்நிதிதானப் பேச்சு ஐந்து நிமிடங்கள் தான் இடம் பெறும். விழாக்காலங்கள் ஒருசில நேரங்கள் கூடலாம். பேச்சுக்கள் அடி யார்களை சமூகத்தை ஆளும் சக்தி வாய்ந்தவை. சமயம், விரதம், விழா ஒழுங்கு, அறச்சிந்தனை சமூகநலன் கொண்டவையாக இருக்கும்.

அம்மையார் தம் கணீர் என்ற குரலினால் உலகை ஆண்டவர். 30 ஆண்டு மிகவும் நெருக்கடியான காலங்களில் அம்மையாரின் கோயில் பரிபாலனம் மகளிர் இல்லப்பணி, சமூகநலப் பணி என்பவற்றுக்கு எல்லாம் மேற்குலகம் நிதியை வாரி வழங்கியது. துர்க்கை அம்மன் பரிபாலனம் பொலிவு பெற்றது. இதனால் கோயில் பணிகளுக்கு இன்றும் தங்களின் ஆதரவை வழங்கி வருவதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஒரு காலத்தில் யுத்த காலத்தில் நீங்கள் உங்கள் உதவிகளையும் ஆதரவுகளையும் மற்றும் நலிந்தவர்களுக்கும் கொடுங் கள் என அறிவித்தல் செய்தவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மேடைகள் தோறும் பொன்னாடை போர்த்துகிறார்கள். இவை இரட்டிப்பாகவும் இருக்கும். இவற்றையெல்லாம் கிராமத்தில் உள்ள ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு கூறைப் புடைவையாக கொடுத்து விடுவார் என மலேசிய நாட்டுப் பத்திரிகைகளில் வந்த பதிவுகளாகும். அம்மையார் தம் வாழ்வில் மிகவும் எளிமை யாக வாழ்ந்தவர். சிக்கனம் என்பதுடன் ஊதாரித்தனம் அம்மையாருக்கு கிடையாது.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் வாழ்வும் பணியும் ஒரு சரித்திரம். சரித்திரம் என்பது கடந்த காலத்தில் நடந்து முடிந்தவை. கோயில் தர்மங்களை நெருப்பிலும் நெருப்பானது என அடிக்கடி கூறுவார்கள். சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் அர்த்தம் தெரிந்த தவணையிடாத தர்மங்கள் இன்றும் துர்க்கை கோயிலை உயர் நிலையடைச் செய்கின்றன. அம்மையாரின் 90 ஆவது பிறந்த நாளில் நேர முகாமைத்துவ பண்பு, பரிபாலனச் சிறப்பு, தலைமைத்துவ சிறப்பு, கண்காணிக்கும் ஆற்றல், புனிதத் தன்மை பேணுதல் என்பனவற்றை மீள நினைவு கொள்வோமாக... அறக்கொடை விழா சிறப்புறுக.

கா.சிவபாலன்

# ஜனாதிபதி தேர்தல் சட்டமீறல் கண்காணிப்பாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான கண்காணிப்பு பணிகளில ஈடுபடுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் நேற்று முதல் கண்காணிப்பு பணிகளை ஆரம்பித்துள்ளனர். மாத்தளை மாவட்டத்தின் சில பகுதிகளில் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.


தேர்தல் பிரசாரக் காலம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்த நிலையில் மாத்தளை நகரின் சில இடங்களில் தொடர்ந்தும் சுவரொட்டிகள், கட்அவுட்கள் மற்றும் பெனர்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை மாவட்டச் செயலாளர் ஹெலன் மீகஸ்முல்லவுடன் நேற்றைய தினம் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் இது குறித்து சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட உள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் நேற்றிரவிற்குள் அகற்றப்படும் என பொலிஸார் உறுதியளித்துள்ளனர்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் நேற்றைய தினம் வட மாகாணத்தின்



சில இடங்களுக்கும் விஜயம் செய்து, நிலைமைகளை பார்வையிட்டுள்ளனர்.

சுயாதீனமான முறையில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றதா என்பதனை சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நம்பகமானதும் சுயாதீனமானதுமான வகையில் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மீண்டும் ஐக்கிய நாடுகள் அமைப்பு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# குளத்திலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதியிலுள்ள குளமொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இடத்தைச் சேர்ந்த நரியான் சின்னத்துரை (வயது 77) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். மேற்படி குளத்தில் தூண்டில் போட்டு மீன்பிடிப்பதற்காக திங்கட்கிழமை மாலை சென்ற இவர், வீடு திரும்பவில்லையென இவரது உறவினர்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்நிலையில், மேற்படி குளத்தில் இவரது சடலம் நேற்று காலை மிதந்துள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி என்.தியாகராஜா. சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். இது தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நல்லதைச் சிந்திப்பீர்!



✦ தாய், தந்தை மீது அன்பில்லாதவனுக்கு தெய்வ பக்தி ஒருநாளும் உண்டாகாது.

✦ கண்களே உள்ளத்தின் வாசல். அதன் மூலம் உள்ளத்தில் இருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.


✦ சாதகப்பறவை மழை நீரை மட்டும் அருந்துவது போல, நல்லவர்கள் நல்லதை மட்டும் எப்போதும் சிந்திப்பார்கள்.

✦ உலகியல் வாழ்வில் ஈடுபடுபவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் துன்பம் இருந்து கொண்டே இருக்கும்.

✦ அவித்த நெல் முளைப்பதில்லை. பக்குவம் பெற்றவனுக்கு மறுபிறவி உண்டாவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய பந்து வீச்சு சொதப்பல்; அவுஸ்திரேலியா அதிரடி ஆரம்பம்



அவுஸ்திரேலிய அணி வீரர்களின் அதிரடியான ஆட்டமும், இந்திய அணி பந்து வீச்சாளர்களின் சொதப்பலான பந்து வீச்சிலும் இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் முடிவில் வலுவான நிலையில் அவுஸ்திரேலிய அணி உள்ளது.

இந்திய- அவுஸ்திரேலிய அணிகள மோதும் 4ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று சிட்னி நகரில் ஆரம்பமாகியது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியஅணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது. அதன படி தொடக்க ஆட்டக்காரர் களாக ரோஜர்சும், வோர்னரும் களமிறங்கினர்.

ரோஜர்ஸ் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்த வோர்னர் வழக்கம்போல் அதிரடியாக ஆட ஆரம்பித்தார். இருவரும் இணைந்து பந்துகளை பவுண்டரிக்கு விரட்டிய படியே இருந்தனர். குறிப்பாக உமேஷ் யாதவின் பந்து எல்லைக் கோட்டை நோக்கி பறந்த படியே இருந்தது. காலை எட்டு மணி நிலவரப்படி 8 ஓவர் வீசிய உமேஷ் யாதவ 55 ஓட்டங்களை வாரி தந்தார். அவரது ஒவ்வொரு ஓவரிலும் வார்னர்-ரோஜர்ஸ் ஜோடி சராசரியாக 7 ஓட்டங்களை குவித்தது.

வோனர்ரின் அதிரடி ஆட்டத்தால் அவுஸ்திரேலிய அணி 48 பந்துகளில் முதல் 50 ஓட்டங்களை கடந்தது. உணவு இடைவேளை வரை இருவருரையும் பிரிக்க முடியாமல் இந்திய வீரர்கள் திணறினர். அப்போது அவுஸ்திரேலிய அணி 28 ஓவரில 123 ஓட்டங்களை குவித்தது டன் ரோஜ ர்ஸ் 52ஓட்டங்களுட னும், வோனர் 63 ஓட்டங்களுட னும களத்திலிருந்தனர். உணவு இடைவேளைக்கு பின் ஆட்டம் தொட ங்கி நடைபெற்று வரும் நிலையில் அந்த அணி 45 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்ட ங்கள் குவித்து வோனர் 114 பந்துகளில் 101 ஓட்டங்கள் குவித்து அஸ்வின் பந்து வீச்சில்அவுட் ஆகி வெளியேறினார்.நேற்றைய நாள் முடிவில் அவுஸ திரேலிய அணி 2 விக்கெட் இழப் பிற்கு348ஓட்டங்களை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் வோனர் 101, ஓட்டங்களையும் ரோஜர்ஸ் 95 ஓட்டநிலையும் பெற்றனர். களத்தில் கப்டன் ஸ்மித் 82 ஓட்டத்துடனம், வொட்சன் 61 ஓட்டத்துடனும் உள்ளனர்.பந்து வீச்சில் முகமட் சமி , அஸ்வின் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். முன்னதாக இப்போட்டிக்கான அணியில் இரு தரப்பிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. அவுஸ்திரேலிய அணி தரப்பில் காயமடைந்த மிட்சல் ஜான்சனுக்கு பதிலாக ஸ்டார்க் குக்கு வாய்ப்பளிக்கப்படடது. இந்திய அணிதரப்பில்டோனி, தவான, புஜாரா மற்றும் இஷாந்த் சர்மா ஆகியோருக்கு பதிலாக சகா, ரெய்னா ரோஹித் மற்றும் புவனேஸவர் குமார் ஆகியோர் இடம்பிடித் தனர். (க)



SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# வில்லியம்சன் இரட்டைச் சதம்

**390 ஓட்டங்கள் வெற்றி இலக்கு**



வெலிங்டன் டெஸ்டில் நியூசிலாந்தின் வில்லியம்சன் இரட்டை சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் இலங்கை அணிக்கு 390 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நியு,சிலாந்து சென்றுள்ள இலங்கை அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற் கிறது. முதல் டெஸ்டில் நியூசிலாந்து வென்றது. இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட், வெலிங டனில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 221, இலங்கை 356 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட்டுக்கு 253 ஓட்டங்கள் எடுத்திருந்தது. வில்லியம்சன் (80), வாட்லிங் (48) அவுட்டாகாமல் இருந்தனர்.நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. வல்லியம்சன், வாட்லிங் ஜோடி தொடர்ந்து அசத்தியது. வாட்லிங் சதம் அடித்தார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வில்லியம்சன டெஸ்ட் அரங்கில் முதல் இரட்டை சதத்தை பதிவு செயதார் நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில 5 விக்கெட்டுக்கு 524 ஓட்டங்கள் எடுத்தபோது, 'டிக்ளேர்' செய்தது. வில் லியம்சன் (242), வாட்லிங் (142) அவுட்டாகாமல் இருந்தனர.390 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் இரணடாவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணிக்கு கருணார த்னே (17) ஏமாற்றினார். நான்காவது நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி இரண்டாவது இன்னி ங்சில் ஒரு விக்கெட்டுக்கு 45 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சில்வா (20), தமிகா பிரசாத் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.



**உலக சாதனை**

நியுசிலாந்தின் வில்லியம்சன், வாட்லிங் ஜோடி 365 ஓட்டங்கள சேர்த்தனர். இதன் மூலம், டெஸ்ட் அரங்கில் 6ஆவது விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற சாதனை படைத்தது. இதற்கு முன் நியூசிலாந்தின் பிரண்டன் மெக்கலம், வாட்லிங் ஜோடி 352 ஓட்டங்கள் குவித்ததே அதிக பட்சமாக இருந்தது. இலங்கையின் ஜெயவர்தன, பிரசன்ன ஜெயவர்தன ஜோடி (351) மூன்றாவது இடத்தை வகிக்கிறது. போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான நாள் இன்றாகும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனந்தி வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சுழிபுரம் வளக்கம்பரையில் உள்ள அவரது வீட்டின் மீதே இத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதல் மேற்கொண்ட நபர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றதோடு இச்சம்பவத்தில் தெய்வாதீனமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் முறையிடப்பட்டுள்ளதோடு தேர்தல் கண்காணிப்பாளர்களிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் முன்புறமாக மழை அங்கி அணிந்து வந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டின் யன்னல்கள், சுவரைகள், கேற் என்பவற்றின் மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதன் போது வீட்டினுள்ளே உறங்கிக்கொண்டிருந்த அனந்தி மற்றும் அவரது பிள்ளைகள் பாதுகாப்பான இடத்திற்கு ஓடிச்சென்று மறைந்துள்ளனர்.

இதனால் யாருக்கும் காயம் ஏற்படாத போதிலும் வீட்டுக்கூரை மற்றும் யன்னல் என்பன சேதத்திற்குள்ளாகியிருந்தன.

இத்தாக்குதல் சம்பவம் கண்டிக்கத்தக்கது எனவும் இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், ஜனாதிபதித் தேர்தல் தமிழர்களுக்கு எதுவித பயனுமில்லை என்ற நிலைப்பாட்டினை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## மக்களின் உரிமையை உறுதி செய்யுங்கள்

### சர்வதேச மன்னிப்புச் சபை

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் அரசியலில் பங்குபெறுவதற்கான மக்களின் உரிமை மதிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக பிரசாரத்தில் ஈடுபடுவோர் மீது துன்புறுத்தலும், வன்முறையும் இடம்பெறுவது ஆழ்ந்த கவலையளிக்கின்றது.

இலங்கை மக்கள் அரசியலில் பங்குகொள்வதற்க தங்களுக்குள்ள உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை, வன்முறைகளை எதிர்கொள்ளாமல் அனுபவிப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசிபிக்கிற்கான பிரதி இயக்குநர் டேவிட் கிரிஃபித்ஸ் தெரிவித்தார்.

தேர்தல் தினத்தன்று வாக்களிப்பை தடுப்பதற்காக அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் திட்டமிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்களும் கவலையளிக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## மரண அறிவித்தல்



### கந்தையா கந்தசாமி

யாழ்.வண்ணார்பண்ணை லோட்டஸ் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தசாமி அவர்கள் நேற்று (06.01.2015) செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், கமலா, பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), பாலசுந்தரம், சந்திரசேகர், (ஜேர்மனி), காலஞ்சென்ற யோகேஸ்வரன், சுசீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலச்சந்திரன், அம்பிகா (ஜேர்மனி), பூரணி, நாகேஷ் (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், அமரர் மார்க்கண்டு, மயில்வாகனம், ஆகியோரின் சகோதரனும், வாட்டிவினம்மா, நவமலர், ரதியம்மா, செல்லம்மா, முத்துராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2015) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(9079)

## தேர்தலுக்கான...

யாழ்.மத்திய கல்லூரியில் வாக்கெண்ணும் பணிகள் நடைபெறவுள்ளதோடு 44 பிரதான வாக்கெண்ணும் நிலையங்களும் 8 தபால் மூல வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 20 ஆம் வரை தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 03 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

எனினும் ஒரு தொகையினருக்கு வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றன. வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் வாக்களிக்கும் தகுதியினை இழந்து விடவில்லை.

வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தமது பிரதேச உப அஞ்சல் நிலையங்கள் மற்றும் பிரதம தபால் நிலையங்களின் ஊடாக இன்றும் நாளையும் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு தமது வாக்காளர் அட்டைகளினை பெற்றுக்கொள்ள இயலாதவர்கள் தன்னுடைய அடையாளங்களை சரியான முறையில் உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும்.

பாதுகாப்பினைப் பொறுத்தவரையில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஊடாக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கெண்ணும் நிலையம் ஆகியவற்றுக்கு தலா இரு பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இவ்வெண்ணிக்கை நிலைமைகளினை பொறுத்து அதிகரிக்கப்படுவதோடு வாக்களிப்பு நிலையங்களினை அண்டிய பிரதேசங்களில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கை விதிமுறைகள் தொடர்பில் ஜனாதிபதி அபேட்சகர்களின் பிரதிநிதிகளிடம் கலந்துரையாடியிருந்தோம். நாளைய தினம் (இன்று) சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலகர்களும் வருகைதரவுள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களிற்கான ஏற்பாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களினூடாக மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது.

இன்று காலை 7.00 மணிக்கு அனைத்து வாக்களிப்பு நிலையங்களிற்குமான பொறுப்புக்களினை உரிய அதிகாரிகரிகள் பொறுப்பேற்றுக்கொள்ளவுள்ளனர் என யாழ் அரச அதிபர் தெரிவித்தார். (எ-4)

## பந்தயம் வைக்...

சார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தன.

கடந்த சில காலங்களாக தேர்தல் பிரசார மேடைகளில் அரசியல்வாதிகளால் பல சுவாரஸ்யமான கருத்துகள் வெளியிடப்பட்டு வந்தன.

அவ்வாறானதொரு சுவாரஸ்யமான தொரு கருத்தை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தேர்தல் மேடையொன்றில் வெளியிட்டார்.

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவார எனவும் அதற்காக தனது வீட்டை பந்தயம் வைக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறவில்லையெனில் பெல்மதுல்லையில் உள்ள தனது வீட்டை தரத்தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஆளும் கட்சிக்கு...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அதிகளவான தேர்தல் கண்காணிப்பாளர்களை கபே அமைப்பு நியமித்துள்ளது.

இதன்படி இன்று (நேற்று) வரை நாடு முழுவதும் ஆயிரத்து 358 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் தேர்தல் சட்ட விதிகளை மீறியது சம்பந்தமாக ஆயிரத்து 201 முறைப்பாடுகளும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 157 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றை பகுப்பாய்வு செய்யும் போது அரச ஊழியர்களை தேர்தல் பரப்புரைகளுக்காக பயன்படுத்தியது சம்பந்தமாக 763 முறைப்பாடுகளும், அரச சொத்துக்களை பயன்படுத்தியது சம்பந்தமாக 438 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வட மாகாணத்தில் யாழ்.மாவட்டதைப் பொறுத்தவரையில் 8 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. வன்னி மாவட்டங்களைப் பொறுத்தவரையில் 13 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜனநாயக ரீதியிலும், சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக,கண்காணிப்பில் கபே அமைப்பு செயற்பட்டு வருகின்றது. இதன்படி எந்த வேட்பாளருக்கும் ஆதரவு இல்லாமலும், சேறுபூசம் செயற்பாடுகளிலும் இதுவரை ஈடுபட்டதும் இல்லை. இனியும் ஈடுபடப்போவதுமில்லை.

இந்நிலையில் நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக அனைத்து மக்களும் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்கும் போது அவர்கள் அச்சுறுத்தப்படுவார்கள் அல்லது தாக்கப்படுவார்கள் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதிகளவான கண்காணிப்பாளர்கள் அனைத்து இடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், தேர்தல் தினத்தில் அதிகாலையில் சென்று அனைத்து மக்களும் தமது வாக்குகளை பதிவு செய்ய வேண்டும்.

வாக்களிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மதகுரு அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, அரச சேவையாளர்களின் ஓய்வூதிய அடையாள அட்டை மற்றும் தேர்தல் திணைக்களத்தின் தற்காலிக அடையாள அட்டையினை பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என்றார். (எ-4)

## புதிய தூதுவர்...

பட்ட வெற்றிடத்துக்கு இதுவரை காலமும கண்டியில் உள்ள துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவராகக் கடமையாற்றிய நட்ராஜ் யாழ். துணைத் தூதரகத்தின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அவரே தற்போது தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இவருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

மகாலிங்கம் இடமாற்றம் பெற்றுச் சென்றதை அடுத்து இதுவரை காலமும் எஸ்.டி. மூர்த்தி பதில் துணைத்தூதுவராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## துப்பாக்கிச் சூடு இருவர் காயம்

(கொழும்பு)

ஹாலி-எல அட்டாம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து வானத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட குழுவினர், அங்கிருந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

டிபெண்டர் ரக வாகனத்தில் சென்ற குழுவினரே ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதுடன் ஆதரவாளரின் உணவு விடுதிக்கும் சேதம் விளைவித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றுமொரு ஆதரவாளரின் வீட்டுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, அங்குகிடந்ததாக கூறி மீட்டெடுத்த ரி-56 ரக துப்பாக்கியொன்றையும் வெற்றுத் தோட்டாக்களையும் பொதுமக்கள் தம்மிடம் ஒப்படைத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலைக்....

இவ்வதிகாரிகள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

ஒரு வாக்களிப்பு நிலையத்துக்கு நான்கு அதிகாரிகள் வீதம் இவர்கள் கடமையில் ஈடுபடவுள்ளனர். ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று, பெறுபேறுகள் வெளியாகும் வரையில் பிரதேசங்களுக்குள் நுழையும் வெளிப் பிரதேசங்களைச் சேர்ந்த நபர்கள், இனந்தெரியாத வாகனங்கள், குழுக்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் இந்த அதிகாரிகள் கண்காணிப்பில் இருக்கவுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தொலைத்தொடர்பு படையணியின் பணிப்பாளர் நாயகம் சுதத் சந்தசேகர தெரிவித்தார்.

அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள வாக்குச் சாவடிகளை அடையாளம் கண்டு, அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்படி படையணியைச் சேர்ந்த மேலதிக அதிகாரிகள் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்படுவர். கண்டி மாவட்டத்துக்குட்பட்ட பாத்ததும்பர தேர்தல் பிரிவிலுள்ள வாக்குச்சாவடிகளைப் பாதுகாப்பதற்காக ஐ.தே.க.வினால் விசேட நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது என படையணியின் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார். (எ-11)

## தேர்தல்...

எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஸ்டீபன் டுஜாரிக், இலங்கையில் அண்மையில் நடந்து வருகின்ற, இன்றும் கூட நடந்துள்ள சம்பவங்கள் குறித்து ஐ.நா அறிந்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்தல் அமைதியான முறையிலும், சிறுபான்மையினர் வாக்களிக்கத்தக்க வகையிலும் இடம்பெற வேண்டும் என்றும் அவர் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார் என்று ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஜனாதிபதியின்...

வன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் மட்டுமே அவருக்கு அருகில் மேடையில் அமர்ந்திருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் வெற்றி பெற்ற பின்னர் எதிணியினரை பழிவாங்கக் கூடாது என்று தமது ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தனது வெற்றி உறுதி என்று குறிப்பிட்ட அவர், மீண்டும் ஒரு முறை நாட்டைப் பிரிப்பதற்கு தான் அனுமதிக்க மாட்டேன் என்றும் கூறியிருந்தார். (எ-11)

## தேர்தல் கடமையில்...

பொலிஸ் காவலரண்கள் நாடெங்கிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், ரோந்து நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பொலிஸாரின கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், அவர்களை கைதுசெய்யுமாறும் பணிப்புரை வழங்கியுள்ளதாக அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

அத்துடன், தேர்தல் சட்டங்களுக்கு அமைய நேற்றும் இன்றும் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். இதேவேளை வாக்கெண்ணும் பணிகள் இடம்பெறும் பகுதிகளில் இன்று முதல் ஆறாயிரம் மேலதிக பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்தவுள்ளதாக அஜித ரோஹன மேலும் சுட்டிக்காட்டினார். (எ-11)

## தபாலகத்தில்...

என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ-4)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தியாகராசா

(ஓய்வுநிலை தொழில் உத்தியோகத்தர்-Labour Officer)



கணபதிப்பிள்ளை தியாகராசா (ஓய்வுநிலை தொழில் உத்தியோகத்தர்-Labour Officer) 05.01.2015 திங்கள் மாலை 6.00 மணியளவில் இலண்டனில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் அமரர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோதினி (இலண்டன்), சுந்தரேசன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோன் அல்பிரட் நாதன் (இலண்டன்), கோமதி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஸ்ணவியின் அன்புப் பேரனும் சிங்காரம் (வலிமண்டலத் திணைக்களம்), பரிபூரணம் ஆகியோரின் சகோதரனும் சிவரத்தினம், அமரர் சாம்பசிவம் ஆகியோரின் மைத்துனரும் சியாமளா( பிரான்ஸ்), தீனதயாளன் (வட மாகாண சபை), திவாகரன் (அதிபர்-யா/வள்ளியம்மை மகா வித்தியாலயம் சுங்கானை) ஆகியோரின் பெரிய தந்தையாரும் திருநாவுக்கரசு (ஓய்வுநிலை தொழில் திணைக்கள உத்தியோகத்தர்), வசந்த குமாரி, குகேந்திரன் நிர்மலாதேவி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

அல்லையம்பதி,
துன்னாலை.

தகவல்:திருமதி பரிபூரணம் சாம்பசிவம், குடும்பத்தினர்.
00442089026105-London, 0757760554

(சி-9747)



### அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்

குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்

அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online,விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்

கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

### V2 Travels and Tours

- மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
- எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

(8799)

### அனைத்து நாடுகளிற்குமான விரைவு பொதிகள் சேவை

எந்த நாட்டிற்கும் உணவு, கருவாடு,எண்ணெய் வகைகள் என எல்லாவகை பொருட்களையும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் விரைவாகவும் அனுப்பிக்கொள்ளலாம்

யாழ்மாவட்டம்,கிளிநொச்சியில் எந்தபிரதேசமாக இருப்பினும் உங்கள் வீடுகளில் தராசுடன் வந்தே பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்

வீடுகளில் பெற்றுக்கொள்ளப்படும் பொதிகளுக்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது

5Kg க்கு உட்பட்ட பொதிகளுக்கு பெட்டிநிறை சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
|---|---|---|
| 49A சம்பல் லேன், போது நூலகம் முன்னால் | முடக்காட்டுச்சந்தி | யாழ்வீதி - வல்வெட்டி |
| 0773867257 | 0776699892 | 0776697960 |



### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



### பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

A/L DAY

### பொருளியல்

உங்கள் புகழ்பூத்த பேரோசான்

திரு.கருணாகரன்
B.A (Hons) Eco Spl)

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி 5 நாட்களும்
பிரிவுI:-8.30-10.30
பிரிவுII:-10.30-12.30
ஆரம்பம்:-09.01.2015 வெள்ளி.

☆உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(சி-9752)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.